இலங்கைத் தேசிய இனப்பிரச்சனை

# சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

(புதிய முன்னுரையுடன்)

சமுத்திரன்

இலங்கைத் தேசிய இனப்பிரச்சனை

# சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

(புதிய முன்னுரையுடன்)

சமுத்திரன்


MIKUKO

ÅS NORWAY

முதல் பிரசுரம் 1983 காவ்யா பதிப்பகம், பங்களூர்
இரண்டாம் பிரசுரம் 2017 மிக்குக்கோ, ஓஸ் (நோர்வே)
(புதிய முன்னுரையுடன்)

மே 1, 2017

**உள்ளடக்கம்**

முன்னுரை *2017*
முன்னுரை *1983*

சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின்
அடிப்படைகளும் மேலாதிக்கமும்

பின்னுரை *1983*

# முன்னுரை 2017

‘சிங்களப் பெருந்தேசிய வாதம் - அதன் அடிப்படைகளும் மேலாதிக்கமும்’ எனும் தலைப்பிலான கட்டுரையை 1983 ஏழாம் மாதத்தில் எழுதினேன். இதனை நூல்வடிவில் பங்களூரில் உள்ள காவியா பதிப்பகம் படிகள் குழுவுடன் சேர்ந்து வெளியிட்டது. நான் அப்பொழுது ஜப்பானில் வாழ்ந்து வந்தேன். 1982ல் டோக்கியோவில் அமைந்துள்ள அபிவிருத்தி ஆய்வு நிறுவனமொன்றிலிருந்து வந்த அழைப்பை ஏற்று கொழும்பில் நான் கடமையாற்றிக் கொண்டிருந்த அரச நிறுவனத்திடமிருந்து விடுப்புப் பெற்றுச் சென்றிருந்தேன். கட்டுரையின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல் 1983 ஜுலை மாதம் தாய்நாட்டில் இடம்பெற்ற இரத்தக் களரியே அதை எழுதத் தூண்டுகோலாகியது.

இலங்கையில் அந்த வன்செயல் சம்பவங்கள் நடந்தபோது நான் ஒரு ஜப்பானியக் கிராமத்தில் களஆய்வில் ஈடுபட்டிருந்த்தேன். வந்துகொண்டிருந்த செய்திகளின் தாக்கத்தினால் எனது ஆய்வில் ஆர்வமிழந்தேன். அந்த நாட்களில் டோக்கியோவிலிருந்து எனது நீண்டகால நண்பர் நாக்காமுறா அடிக்கடி தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு இலங்கை நிலைமைகள் பற்றிய

செய்திகளைப் பகிர்ந்து கொண்டார். அவர் ஜப்பானின் பிரபலமான தென் ஆசிய ஆய்வாளர். 1960களில் நான் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மாணவனாயிருந்த போது அவர் அதே பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணிப் பட்ட ஆய்வினை மேற்கொண்டிருந்தார். சிங்களமொழியில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அவருக்கூடாக வந்த செய்திகளும் நான் ஜப்பானிய தொலைக்காட்சியில் கண்ட காட்சிகளும் என்னை அதிரவைத்தன என்பது உண்மை.

அந்தச் செழிப்பான கிராமத்தில் நான் சில நாட்கள் எனது குடும்பத்துடன் தங்கியிருந்தேன். அங்கு வாழ்ந்த மக்கள் நம்முடன் மிகவும் அன்பாகவும் நெருக்கமாகவும் நடந்துகொண்டார்கள். அவர்களின் விருந்தோம்பலில் மூழ்கியிருந்தோம். எனது தாய்நாட்டு அரசியல் பற்றி அவர்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆயினும் தொலைக்காட்சியில் வந்த செய்திகளைப் பார்த்தபின் மிகவும் அக்கறையுடன் இலங்கையிலுள்ள எனது உறவினர் மற்றும் நண்பர்கள் பற்றிக் கேட்டார்கள். அப்போதுதான் அவர்களுக்கு இலங்கையில் பல்வேறு இனங்கள், மதங்கள் இருப்பது பற்றித் தெரியவந்தது. ´நீங்கள் சிங்களவரா தமிழரா?` எனக்கேட்டார்கள். நான் தமிழ் இனத்தவன் எனக்கூறியதும் எனக்காக வருத்தப்பட்ட அதே வேளை தொலைக்காட்சியில் இலங்கையர்களைப் பார்க்கும்போது எல்லோரும் ஒரு இனத்தவர்கள் போல்தெரிகிறார்களே எப்படி சிங்களவர், தமிழரென அடையாளம் காண்பதென வினவினார்கள். இப்படிப் பல கேள்விகள். நானும் எனது துணைவியும் எங்களால் இயன்ற விளக்கங்களைக் கொடுத்தோம்.

எனது ஆய்வினைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டுக் குடும்பத்துடன் நாம் அப்போது வாழ்ந்துவந்த டோக்கியோவிற்குத் திரும்பினேன். அங்கு திரும்பியதும்

ஏற்கனவே எடுத்த முடிவின்படி கட்டுரையை எழுத ஆரம்பித்தேன். அப்போது நாம் நண்பர் நாக்காமுறாவின் வீட்டிற்குச் சமீபத்தில் ஒரு வாடகைவீட்டில் தங்கியிருந்தோம். அவரிடமிருந்த சில நூல்கள் எனது கட்டுரையை எழுதுவதற்குத் துணையாயிருந்தன. ஆயினும் கட்டுரைக்கு உதவக்கூடிய ஆதார நூல்கள் போதியன இல்லாத நிலையிலேயே அதனை அவசரமாக எழுதி முடித்தேன்.

இன்று ஏறக்குறைய 34 வருடங்களுக்குப்பின் அந்தக்கட்டுரையைப் பார்க்கும் போது அது எழுதப்பட்ட காலகட்ட அரசியல் பின்னணி பற்றிய ஒரு குறிப்பின் அவசியத்தை உணர்கிறேன். அத்துடன், இனிச்செய்ய வேண்டியது என்ன? என்ற கேள்வியும் எழுகிறது. அன்றைய அரசியல் சூழல் மற்றும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையின் மாற்றப் போக்குகள் பற்றிய எனது பார்வை தொடர்பான கேள்விகளும் வாசகர் மனதில் எழலாம். பின்னர் நான் எழுதிய கட்டுரைகளில் இலங்கை அரசின் இனத்துவ மேலாதிக்கத் தன்மைகள், விடுதலைப் போராட்டத்தின் போக்குகள் மற்றும் தமிழ் குறுந்தேசியவாதம் பற்றிய எனது விமர்சனங்களை முன்வைத்துள்ளேன். பல மாற்றங்களின் விளைவான இன்றைய நிலைமைகளுக் கேற்ப தேசிய இனப்பிரச்சனை மீள் சட்டகப்படுத்தப்பட (reframe பண்ணப்பட) வேண்டும் என்றும் வாதிட்டு வந்துள்ளேன். கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கை அரசும் நாட்டின் தேசிய இனப்பிர்ச்சனையும் பல தன்மைரீதியான மாற்றங்களைக் கண்டுள்ளன. தேசிய இனப்பிரச்சனையின் இன்றைய வடிவமும் உள்ளடக்கங்களும் என்ன? ஒன்றுபட்ட இலங்கையைக் கட்டி எழுப்பும் வகையிலான அதன் ஜனநாயகரீதியான தீர்வு என்ன? எனும் கேள்விகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றைப் பார்க்க முன் சில விடையங்களைத் தெளிவாக்கவேண்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இராணுவவாதத்திற்குப் பலியாகியது. குறுந்தேசியவாதம் இராணுவவாதத்தின் கருவியாகியது. தமிழ்த் தேசியவாதம் அதன் எதிரியான சிங்களப் பேரினவாதத்தின் பிரதிபிம்பம் போலானது. இந்தப் பிற்போக்கான ஆபத்துப்பற்றி 1983லேயே குறிப்பிட்டுள்ளேன் என்பதைக் கட்டுரையை வாசிப்பவர்கள் அறிந்து கொள்வார்கள்.

அதேவேளை அன்று ஈழத்தமிழ் அரசியல் சூழலில் நம்பிக்கைதரும் முற்போக்குச் சிந்தனையுடைய சில குழுக்களையும் காணக்கூடியதாக இருந்தது. இந்தப்போக்கு பற்றிய எனது அன்றைய மதிப்பீடு அதீதமானதென்பதைப் பின்னர் உணர்ந்தேன். கட்டுரையின் பின்னுரையில் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் போராட்டம் சிங்கள மக்களை எதிர்க்காத ஒன்றாய் உருவெடுத்துள்ளது என நான் குறிப்பிட்டது தவறென்பதைப் பின்னர் வந்த பல சம்பவங்களும் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான நடைமுறைகளும் காட்டின. புலிகளின் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக் கெதிரான வன்செயல்களை நான் பல தடவைகள் கண்டித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளேன். தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தென்பட்ட முற்போக்கு ஒளிக் கீறல்கள் விரைவில் மறைந்து போயின. அன்றைய சில முனைப்புகளைக் கண்டபோது மாற்று சிந்தனையுள்ள இயக்கம் ஒன்று வளரும் அது தமிழ் குறுந்தேசியவாதத்தை நிராகரித்துப் புதிய பாதையில் போராட்டத்தை வழி நடத்தும் சாத்தியப்பாடுகள் உண்டு என எதிர்பார்த்தவர்களில் நானும்

ஒருவன்[1]. ஆனால் அது மிகையான கணிப்பு என்பது குறுகிய காலத்தில் நிரூபணமானது. 1983ல் நான் எழுதிய கட்டுரையை இன்று வாசிப்பவர்கள் இதை மனதிற் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் எழும்போது அல்லது அது ஒரு புதிய கட்டத்தை அடையும்போது பலவிதமான கருத்தியல் போக்குகள் வெளிவருவது பொதுவான வரலாற்று அனுபவம். தமிழரின் உரிமைப் போராட்டத்திலும் இத்தகைய ஒரு கட்டம் 1970/80களில் இருந்தது. ஒரு புதிய போராட்டப் பாதையின் தேடலுக்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் ஏற்கனவே பலம் பெற்றுவிட்ட கருத்தியல் போக்குகளும் வர்க்க நலன்களும் மற்றும் பிராந்திய அரசியலின் தாக்கங்களும் இந்தத் தேடலை நசுக்குவதில் அல்லது திசைமாற்றுவதில் வெற்றி பெற்றன. மக்கள்தான் வரலாற்றைப் படைக்கிறார்கள் ஆனால் அவர்கள் தாமே தேர்ந்தெடுத்த சூழலில் அல்லாது (அதற்கு மாறாக)

11977-1982 காலகட்டத்தில் வடக்கில் சில இளைஞர் குழுக்களில் முகிழ்த்த முற்போக்குத் தன்மை கொண்ட அரசியல் ஆர்வத்தை அவதானித்து வந்தேன். அந்தக் காலத்தில் அது பற்றி சிங்கள இடதுசாரிகளின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் கட்டுரைகள் எழுதினேன். உதாரணமாக - Samudran, Growing Radicalism and Sri Lanka´s Left, Lanka Guradian, Vol.2, No.7. August 1. 1982; Samudran, Tamil Radicalism 2 – Land Colonization: A military Strategy, Lanka Guradian, Vol. 5, No.9, September 1. 1982. பின்னர் குறுந்தேசிய வாதம் இராணுவவாதம், போராட்டத்தின் திசைதிருப்பல் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதியுள்ளேன். இவை Tamil Times (London) , Lanka Guardian (Colombo), Pravada (Social Scientists´Association, Colombo) போன்ற சன்சிகைகளில் வெளிவந்தன. உதாரணமாக: N. Shanmugaratnam, Tamil People´s Struggle in Crisis – The challenge of transcending narrow nationalism and militarism, Tamil Times, 15 January 1993. இந்தக் கட்டுரை அதே காலத்தில் Lanka Guardian இலும் பிரசுரமாகியது.

வரலாறு ஏற்கனவே கையளித்த நிலைமைகளிலேதான் அதைச் செய்கிறார்கள். இந்த மாக்சிய அறிவுரை மீண்டும் நினைவுக்கு வருகிறது. இது பற்றிப் பின்னர்.

முழுமையாகப் பார்க்குமிடத்து 1983ல் சிங்களப் பெருந்தேசியவாதம் பற்றி நான் முன்வைத்த வரலாற்றுரீதியான விளக்கங்களும் வாதமும் நியாயமானவை என்பதைப் பின்னைய வரலாறும் ஆய்வுகளும் காட்டியுள்ளன. அதேபோன்று காலனித்துவத்துக்குப் பின்னர் இடம்பெற்ற இலங்கை அரசின் நிர்மாணம் பற்றி நான் கூறிய கருத்துக்களும் நியாயமானவை என்பதைப் பின்னர் வந்த ஆய்வுகள் காட்டுகின்றன. ஆயினும் பெருந்தேசிய இனவாதக் கருத்தியலின் மேலாட்சி (hegemony) பற்றிய கோட்பாட்டுரீதியான விளக்கம் மேலும் சற்று விரிவுபடுத்தப்படவேண்டும். கிராம்சியின் hegemony எனும் பதத்திற்கு தமிழில் மேலாட்சி எனும் சொல்லே ´மேலாதிக்கம்´ என்பதைவிடப் பொருத்தமானது எனக்கருதுகிறேன். கட்டுரையில் மேலாட்சி எனும் அர்த்தத்திலேயே மேலாதிக்கம் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளேன்.

மேலாட்சியின் புலம் சிவில் சமூகமாகும். அது சிந்தனை மற்றும் கலாச்சாரரீதியில் மக்களின் மனங்களைக் கைப்பற்றி ஆட்சிமுறைக்கு அவர்களின் உடன்பாட்டைப் பெற பல வழிகளைப் பயன்படுத்துகிறது. மேலாட்சியைக் கட்டமைக்கும் திட்டத்தில் புத்திஜீவிகளுக்குப் பிரதான பங்குண்டு. பல்வேறு மட்டத்திலுள்ள கல்வி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், தொடர்பு சாதனங்கள், தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள், மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் போன்றவைக்கூடாக மேலாட்சி செயற்படுகிறது. இந்த வழிகளுக்கூடாக மேலாட்சியைத் தொடர்ச்சியாக மீள் உற்பத்தி செய்ய ஆளும் வர்க்கம் அல்லது ஆளும் வர்க்கக்

கூட்டு தன்னிடமுள்ள வளங்களைப் பயன்படுத்துகிறது. ஆட்சியின் சமூகரீதியான ஏற்பினைப் பலப்படுத்தும் நோக்கில் பொருளாதார மற்றும் சமூக நலன் சார்ந்த சில உரிமைகளை வழங்க ஆட்சியாளர் சம்மதிப்பர். இது அரச அதிகாரத்தின் மென்மையான பரிமாணமாகும். இதற்குப் பின்னால் அரசின் பலாத்கார இயந்திரம் இயங்குகிறது. மக்களின் அணிதிரண்ட எதிர்ப்பினால் மென்மையான அதிகார இயந்திரம் தோல்வியடையும் போது பலாத்கார இயந்திரம் தன் பணியைச் செய்கிறது.

கருத்தியலின் மேலாட்சி எனும்போது அது எப்போதும் நூற்றுக்கு நூறு வீ தம் என்பதாகாது. சிங்கள மக்கள் அனைவரும் ஒரே அளவிற்கு எப்போழுதும் பேரின தேசிய வாதத்தின் மேலாட்சிக்கு உட்படுகிறார்கள் என்பதல்ல. ஆயினும் இந்த நாடு சிங்கள பௌத்தர்களாகிய நமது நாடு. நாமே இந்தத் தீவின் சொந்தக்காரர்கள். மற்றவர்கள் வெளியார் போன்ற கருத்துக்கள் பெரும்பாலாரிடம் ஆழப் பதிந்திருப்பதைக் காணலாம். (நவீ ன சிங்கள பௌத்த கூட்டு அடையாளத்தின் உருவாக்கத்தின் வரலாற்று கட்டங்களை கட்டுரையில் சுருக்கமாக விளக்கியியுள்ளேன்.) இந்தக் கூட்டு  உணர்வு தமது பாதுகாப்பிற்காக ´மற்றவர்களை´ அரசு நசுக்குவது நியாயமானதே என நம்பவைக்கிறது. ஆனால் அந்த சமூகத்திற் குள்ளிருந்து எதிர்ப்பு, அதாவது எதிர்மேலாட்சி (counter-hegemony), இயக்கம் அறவே இல்லையெனக் கருதுவது தவறு. சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான முற்போக்கு சக்திகள் அந்தச் சமூகத்திற்குள் இருந்தன, இருகின்றன. அவை நம்பிக்கை தருவனவாயிருப்பினும் இதுவரை பலவீ னமான நிலையிலே உள்ளன. ஆயினும் ஒரு மெல்லிய counter-hegemonic போக்கு இன்றைய சிங்கள சமூகத்தில் சிலமட்டங்களில் இருப்பதை மறுக்கமுடியாது.

மேலாட்சியின் தொடர்ச்சியான மீளுற்பத்திக்கு மோசமடைந்து செல்லும் சமூக, பொருளாதார பிரச்சனைகள் தற்காலிக அல்லது நீண்டகாலத் தடைகளைப் போடலாம். உதாரணமாக, தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் அடிப்படை உரிமைக் கோரிக்கைகள், ஏறும் வாழ்க்கைச் செலவுக்கெதிராக பொது மக்களின் கோரிக்கைகள், இவை தொடர்பான போராட்டங்கள், குடும்ப ஆட்சி மற்றும் ஊழலுக்கெதிரான பிரச்சாரங்கள் போன்றவை. இத்தகைய எதிர்ப்புக்கள் எதிர்மேலாட்சி இயக்கத்திற்கு உதவுமா இல்லையா என்பது அவற்றின் அரசியல் தலைமையிலேயே தங்கியுள்ளது. குறிப்பிட்ட பொருளாதார அல்லது சமூகப் பிரச்சனைக்குத் தீர்வு கோரும் தனிமைப்பட்ட போராட்டங்களால் பலமிக்க மேலாட்சிக் கருத்தியலை கீழிறக்க முடியாது. அத்தகைய போராட்டங்களை ஒரு எதிர்மேலாட்சிச் சிந்நதனையால் உணர்வுபூர்வமாக இணைக்க வேண்டும். இதைச் செய்யும் ஆற்றல் உள்ள ஒரு அரசியல் இயக்கம் வேண்டும்.

ஒரு தனிமனிதரின் அன்றாட வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் அவரின் இனத்துவ அடையாளத்தையும் விட மற்றைய கூட்டு அல்லது தனி அடையாளங்கள் முக்கியத்துவம் பெறுவது இயல்பு. உதாரணமாக, அவரின் வர்க்கமும் அது சார்ந்த கூட்டு அடையாளமும், தொழிலால் வரும் அடையாளம், வயது, பால், சாதி, பிரதேசம் போன்றவை. ஆயினும் இனத்துவ வாதம் மேலாட்சி நிலையில் இருக்கும் சமூகத்தில், அரசியலும் அரசும் இனத்துவமயப்படுத்தப்பட்ட நாட்டில், ஒரு குறிப்பிட்ட இனக்குழுவினர் சந்தேகத்துக்குரிய ‘மற்றையவர்’களாக ஆக்கப்பட்டுள்ள நிலையில், சோதனைச் சாவடிகளில் தனி மனிதரின் இனத்துவ அடையாளமே

கவனிக்கப் படும் காலத்தில், இனத்துவ உணர்வின் பிடியிலிருந்து மனித உறவுகள் தப்பிக் கொள்வது சுலபமல்ல.

இன்று உள்நாட்டுப்போர் இராணுவரீதியில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு எட்டு வருடங்களாகின்றன. இப்பொழுது பின்நோக்கிப் பார்க்கும்போது பல விடயங்கள் மேலும் தெளிவாகத் தெரியலாம். முதல், 1983ல் எழுதப்பட்ட கட்டுரையுடன் தொடர்புடைய சில விடயங்களைப் பார்ப்போம். அதற்குப் பின்னர் எதிர்கால நோக்கில் தேசிய இனப்பிரச்சனை பற்றிப் பார்ப்போம்.

## அன்றைய அரசியல் சூழல் பற்றி

1977ல் ஆட்சிக்குவந்த UNP அரசாங்கம் நவதாராளப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தது. மறுபுறம் இதே காலகட்டத்தில் தேசிய இனப்பிரச்சனையின் இராணுவமயமக்கல் கொள்கையையும் அதே அரசாங்கம் முன்னெடுத்தது. முன்னையது இலங்கையில் அதுவரை பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கையிலிருந்து விடுபட்டு ஒரு புதிய கொள்கைப் போக்கிற்கு வழிவகுத்தது. அதாவது 1970களில் உலகரீதியில் சர்வதேச நிதி நிறுவனங்களான உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தாராளமயமாக்கல் (economic liberalisation) கொள்கையை இலங்கையின் UNP அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. பின்னையது ஏற்கனவே சிக்கலாக்கப்பட்ட ஒரு நீண்டகால அரசியல் பிரச்சனையை இராணுவமயமாக்கலுக்கூடாகத் தொடரும் அத்தியாயத்தின் ஆரம்பமாகியது.

கொள்கைரீதியிலும் நடைமுறையிலும் இவ்விரு போக்குகளுக்கிடையே முரண்பாடுகள் எழுந்தன. ஒன்று சுயபோட்டிச்சந்தையை அடிப்படையாகக்

கொண்டது. இதன்படி அரசு பொருளாதாரத்தில் தலையிடாது சந்தையின் சுதந்திரத்தைப் பேணிப் பலப்படுத்தும் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். மற்றது இராணுவமயமாக்கலுக்கு உதவும்வகையில் அரசு பொருளாதார வளங்களை ஒதுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. இது அரசைப் பொருளாதாரத்தில் தலையிட நிர்ப்பந்திக்கிறது. இந்த முரண்பாட்டுப் போக்கினை நாம் நேரிலேயே கண்டு அனுபவித்துள்ளோம். இவ்விரண்டு போக்குகளும் பின்னிப்பிணைந்தன. ஒரு பாரிய போர் பொருளாதாரம் உருவாகி வளர்ந்தது. பின்னர் 1990களில் அமெரிக்காவின் தலைமயில் கட்டவிழ்த்த் விடப்பட்ட 'உலக பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' இலங்கை ஆட்சியாளர்களின் போர்க் கொள்கைக்கும் சாதகமாயிருந்தது. நவதாராள பொருளாதார உலகமயமாக்கலும் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகரீதியான போரும் சகவாசிகளாயின.

1979ல் ஜயவர்த்தன தனது உறவினரான இராணுவ அதிகாரி ´Bull´ வீ ரதுங்கவை ஒரு கட்டளையுடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். அதுதான்: பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துவிட்டபின் திரும்பவும் என்பதாகும். அதன் விளைவு ஒரு நீண்ட உள்நாட்டுப் போரானது. அந்தப்போரில் இரு சாராரும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். இலங்கை அரசின் இராணுவமயமாக்கலுடன் பொருளாதாரத்தின் இராணுவமயமாக்கலும் தொடர்ந்தது. நவதாராளக்

கொள்கைக்கும் உள் நாட்டுப்போருக்கு மிடையினலான உறவு பற்றிப் பிறிதொரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்[2]. இங்கு தேசிய இனப்பிரச்சனையை நேரடியாகப் பாதித்த வேறு சில விடயங்கள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியம்.

1970களில் வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் தலைமைக்கும் தீவிரவாதப் போக்கு இளம் சந்ததியினருக்குமிடையே முரண்பாடுகள் வலுத்தன. இந்த முரண்பாடுகள் ஏற்கனவே தமிழ் சமூகத்தில் மேலாட்சி நிலை பெற்றுவிட்ட குறுந்தேசியவாதத்தின் கருத்தியல் எல்லைகளுக்குள்ளேயே இடம்பெற்றன. இந்தக் கருத்தியல் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் தனித்துவம் மற்றும் அவர்களின் அபிலாஷைகள் போன்றவற்றை மதிக்கவில்லை. அதேவேளை சில தமிழ் இளைஞர் குழுக்கள் பரந்த சிந்தனைகளைத் தேடின. இந்தக் குழுக்களைச் சார்ந்த பலர் இடதுசாரியக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டனர். இவர்கள் மாக்சிசம் பற்றி, புரட்சி மற்றும் தேசியவிடுதலைப் போராட்டங்கள் பற்றி அறிய ஆர்வம் காட்டினர். இவை பற்றி மற்றும் சர்வதேச அரசியல் பற்றி அறிந்து கொள்ளும் நோக்கில் இடதுசாரிகளுடன் கலதந்துரையாட விழைந்தனர். இந்தப் போக்கு என்போன்றவரின் கவனத்தை ஈர்த்தது. இத்தகைய ஆர்வம் மிகுந்த போக்குத் தமிழ் அரசியலில் ஒரு முற்போக்கான திருப்பத்திற்கு இட்டுச்செல்லக்கூடும் என அப்போது தோன்றியது. இப்போது பார்க்கும் போது அது ஒரு தப்புக்

2 இது பற்றி 1983 கட்டுரையின் முன்னுரையில் எழுதியுள்ளேன். சமீப கால நிலைமை பற்றி 2013ல் விரிவாகப் பின்வரும் கட்டுரையில் எழுதியுள்ளேன்: என். சண்முகரத்தினம், 2013, அபிவிருத்தி மனித மேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா? இது மூன்று பகுதிகளாக சமகாலம் ஜூலை 01-15, ஜூலை16-30, ஆகஸ்ட் 01-15 இதழ்களில் பிரசுரிக்கப் பட்டது.

கணக்கென்பது தெளிவாகிறது. ஆனால் அன்றைய சூழலில் அது ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது.

துரதிஷ்டவசமாக தேசிய இனப்பிரச்சனையின் ஜனநாயகரீதியான தீர்வுக்கான கொள்கை ஒன்றினைத் தெளிவாக வரையறுத்து அதன் அடிப்படையிலான ஒரு போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் நிலையில் ஒரு இடதுசாரி அமைப்பும் இருக்கவில்லை. ஆனால் முன்னொருகாலத்தில் இலங்கையின் இடதுசாரி இயக்கம் இனங்களின் சமத்துவத்தை வலியுறுத்தும் அரசியல் கொள்கைகளைக் கொண்டிருந்தது என்பதை மறந்துவிடலாகாது. 1935ல் தோன்றிய சமசமாஜக் கட்சி (LSSP)யும் அதில் 1939ல் ஏற்பட்ட பிளவின்விளைவாக 1943ல் உருவாக்கப்பட்ட இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியும் 1960 வரை இனவாதத்தை எதிர்த்து நின்றன. 1944ல் கொம்யூனிஸ்ட் கட்சி சுதந்திர இலங்கையை ஒரு பல்தேசிய அரசாகக் (mullti-national state ஆக ) கட்டியெழுப்ப வேண்டுமெனும் கொள்கையைக் கொண்டிருந்தது.

1944ம் ஆண்டு தேசிய இனப்பிரச்சனை பற்றி இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி முன்மொழிந்த செயல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு[3]: இலங்கையில் எளிதில் காணவல்ல இரண்டு தேசியங்கள் (nations) உள்ளன. அவையாவன சிங்களவர் மற்றும் தமிழர். இவ்விரு இனங்களும் தமக்கே உரிய தொடர்ச்சியான தாயகப்

3. இது தொடர்பான ஆவணங்கள், மேலும் தகவல்களுக்கு: Rohan Edrisinha, Mario Gomez, V. T. Thamilmaran & Asanga Welikala (eds), 2008, Power Sharing in Sri Lanka – Constitutional and Political Documents 1926-2008, Centre for Policy Alternatives, Berghof Foundation for Conflict studies.

பிர்தேசஙளையும், தமது மொழி, பொருளாதார வாழ்வு, கலாச்சாரம், மற்றும் உளவியல்ரீதியான குணாதிசயத்தினைக் கொண்டுள்ளன. இக்காரனங்களால் இவை இரண்டும் தாம் விரும்பும் பட்சத்தில் தனியான சுதந்திர அரசுகளை அமைக்கும் உரிமை உட்பட்ட சுயநிர்ணய உரிமை உடையன. இங்கு தமிழர் என்பது வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழரைக் குறிக்கிறது. இலங்கையில் வாழும் இந்தியர்கள் இலங்கையைத் தமது நிரந்தர வதிவிடமாகக் கொள்ள விரும்பினால் அவர்களுக்கு மற்றய சமூகத்தவருக்குச் சமமான பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும் என அதே முன்மொழிவு கூறுகிறது. அதே ஆண்டில் கட்சியின் பொதுக் காரியதரியாயிருந்த பீட்டர் கெனெமனும் அதன் ஸ்தாபகர்களில் ஒருவரான வைத்தியலிங்கமும் பூரண சுதந்திரமடைந்த இலங்கையில் சமஷ்டியின் அடிப்படையில் ஒரு பல்தேசிய அரசை உருவாக்கவேண்டும் எனும் செயல் திட்டத்தையும் முன் மொழிந்தனர் என்பதும் குறிப்பிடத்தகுந்தது. அன்றைய கட்சியின் பார்வையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அடைந்துள்ள பகுதிகள் சிங்கள மக்களின் பாரம்பரிய தாயகத்திலேயே உள்ள போதிலும் அந்த அபிவிருத்திக்குத் தமிழர்களும் மற்றய சிறுபான்மையினரும் பங்களித்துள்ளார்கள். ஒரு ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப இதுவும் ஒரு காரணம் எனக் கட்சி கருதியது. தேசிய இனப்பிரச்சனை பற்றிக் கட்சி அப்போது கொண்டிருந்த கொள்கை சுயநிர்ணய உரிமை பற்றி லெனின் முன்வைத்து விளக்கிய கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது. லெனினின் கோட்பாட்டின்படி ஸ்டாலின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைபற்றி எழுதிய கட்டுரையையில் அவர் தேசியத்திற்குக் கொடுத்த வரைவிலக்கணத்தை ஒரு வழிகாட்டியாக உலகின்

கொம்யூனிஸ்ட் கட்சிகள் கருதின. இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி 1944ல் வடக்கு கிழக்கு தமிழரின் சுயநிர்ணய உரிமை பற்றி கோட்பாட்டுரீதியில் விளக்கியபோது அங்கு வாழும் முஸ்லிம் மக்களின் அந்தஸ்துப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆயினும் நாட்டின் சகல இனங்களின் உரிமைகளையும் ஆதரிக்கும் கொள்கையைக் கட்சி கொண்டிருந்தது.

1950களில் கொம்யூனிஸ்ட் கட்சி வடக்குக் கிழக்கிற்கு பிரதேச சுயாட்சி எனும் தீர்வை முன்வைத்தது. LSSP நாடு பூராவும் சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம உரிமை எனும் தீர்வை முன்வைத்தது. 1948ல் மலையகத் தமிழரின் பிரஜாவுரிமையை சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் பறித்தபோது அதைத் தீவிரமாக இவ்விரு கட்சிகளும் எதிர்த்தன. அதேபோல் 1956ல் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்படுவதை இவ்விரு கட்சிகளும் தீவிரமாக எதிர்த்தன. பாராளுமன்றத்தில் அரசகரும மொழிச்சட்டத்திற்கு எதிராக இக்கட்சிகளின் அங்கத்தவர்கள் சிறந்த ஆழமான உரைகளை ஆற்றினர்.

ஆனால் பின்னர் இவ்விரு கட்சிகளும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி (SLFP) யுடன் கூட்டணியில் சேர்ந்து பெரும்பான்மை வாதத்திற்கு அடிபணிந்து விட்டன. இந்தக் கட்சிகளைப் பொறுத்தவரை SLFP ஒரு முற்போக்கான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சி. அவை அந்தக் கட்சியின் 'தேசிய' மற்றும் அரச முதலாளித்துவம் சார்பான கொள்கையை ஆதரித்த அதே வேளை அதன் பேரினவாதத் தன்மையை காணாதவர் போல் நடந்துகொண்டன. அரசின் இனத்துவ மயமாக்கலை, அதன் பெரும்பான்மை இனமேலாதிக்கத் தன்மையை அந்தக் கட்சிகள் எதிர்க்கவில்லை.

பழைய இடதுசாரிக் கட்சிகளிலிருந்து பிரிந்து சென்ற புரட்சிகர இடதுசாரிக் கட்சிகளுக்குள் அல்லது குழுக்களுக்குள் தேசிய இனப்பிரச்சனை பற்றிய விவாதங்கள் இடம்பெற்றன. அவை பேரினவாதத்தைத் தெளிவாக நிராகரித்தன. இந்த அமைப்புகளுக்குள் கொள்கை முடிவுகள் கூட எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கு அப்பால் என்ன செய்வது எனும் நடைமுறைப் பிரச்சனை எழுந்தவண்ணம் இருந்தது. நடைமுறையில் குறிப்பிடத்தகுந்த எதையும் ஒரு அமைப்பாலும் செய்யமுடியவில்லை என்பதுதான் வருத்தம்மிகு உண்மை. இந்த நிலைமை இடதுசாரி அமைப்புகளுக்குள் விமர்சனரீதியில் சிந்தித்து இயங்கி வந்தவர்களுக்கு அரசியல் செயற்பாட்டுப் பிரச்சனைகளைக் கொடுத்திருக்கலாம்.

இத்தகைய ஒரு பின்னணியிலேதான் தோழர் விசுவானந்ததேவன் அதுவரை தான் இயங்கிவந்த ஒரு ´மாக்சிச லெனினிச´ கட்சியிலிருந்து வெளியேறி NLFT எனும் தமிழ் ஈழ விடுதலை அமைப்பினைக் கட்டியெழுப்ப முயன்றார். அது பிளவடைந்த பின்னர் அதே நோக்கில் PLFT எனும் அமைப்பினை உருவாக்க முயன்றார். மிகக்குறுகிய துன்பியல் வரலாற்றினைக் கொண்டிருந்த NLFT/PLFTன் தோற்றத்தின் அரசியல் பின்புலமும் அவை தேசிய இனப்பிரச்சனைக்குக் கொடுத்த விளக்கமும் திறந்த விவாதத்திற்குரிய முக்கிய விடையங்களாகும். சமீபத்தில் விசுவாவை நினைவுகூரும் நோக்கில் வெளியிடப்பட்ட ஒரு நூலில் அவரின் அரசியல் முன்னெடுப்புப் பற்றி விமர்சனரீதியான மதிப்பீடுகளைச் சிலர் செய்துள்ளார்கள். நானும் அதேநூலில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளேன். இந்த

நூல் தொடக்கி வைத்துள்ள விமர்சனரீதியான ஆய்வும் விவாதமும் தொடரவேண்டும்[4].

பெரும்பான்மை இனத்துவக் கருத்தியல் படிப்படியாக வர்க்க அரசியலை ஆழமாக மழுங்கடித்து ஸ்தாபனரீதியில் மேல்நிர்ணய (overdetermining) பலத்தைப் பெற்றுக்கொண்டது. மறுபுறம் அதற்கெதிரான தமிழ் குறுந்தேசிய வாதம் தமிழ் மக்கள் மீது தன் மேலாட்சியை உறுதிப்படுத்திக்கொண்டது. இந்தச் சூழலில் பல்வேறு குழுக்களாகச் சிதறுண்டு போன புரட்சிகரச் சிந்தனை கொண்ட இடதுசாரிக் குழுக்கள் தனித்தனியாகத் தமது நிலைப்பாடுகளைப் பிரகடனப்படுத்துவதைத் தவிர வேறெதையும் செய்ய முடியாத நிலையில் இருந்தன. ஒரு குறைந்தபட்ச அரசியல் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபட்ட ஒரு முன்னணியை அமைக்க இவை முயற்சிக்கவில்லை. புரட்சி பற்றிய கருத்தியல் வேறுபாடுகளினால் இவை ஒருமுனைவாதப் போக்கில் விடாப்பிடியாக நின்றன. இத்தகைய காலகட்டத்தில் விசுவாவின் முன்னெடுப்பு ஒரு தோல்வியடைந்த எதிர் நீச்சல் என்ற முடிவுக்குவர நிர்ப்பந்திக்கப் படுகிறோம். NLFT போன்ற ஒரு இயக்கம் தோன்றுவதற்கு இலங்கையின் ´மாக்சிச - லெனினிச´ இயக்கத்தின் அரசியல் குறைபாடுகளும் ஒரு காரணம் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

வேறுசில தமிழீழ அமைப்புகள் தம்மை இடதுசாரிகளாக சோஷலிச ஆதரவாளர்களாகக் கூறிக்கொண்டன. இந்த அமைப்புகளில் சில இடதுசாரிகள் முக்கிய பங்குகளை வகித்தனர். ஆயினும் இவை இந்திய வல்லரசின்

4 1952-1986 தோழர் விசுவானந்ததேவன் நினைவு நூல், ஆய்வகம் வெளியீடு

செல்வாக்குக்குள்ளாயின. மறுபுறம் இவையும் விடுதலைப் புலிகளின் கோர இராணுவவாதத்திற்குப் பலியாகின.

பின்நோக்கிப் பார்க்கும்போது சுதந்திரமாக இயங்கவல்ல மாற்றுக் கொள்கையுடைய ஒரு இயக்கம் வளரக்கூடிய இடைவெளி 1983க்குப்பின் துரிதமாகச் சுருங்கி மறைந்தது என்பது நன்கு தெரிகிறது. தமிழரின் போராட்டம் தடுக்க முடியாதபடி ஒரு அழிவுப்பாதையில் நகர்ந்த வண்ணமிருந்தது. இடைக்கிடை இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிக இடைவேளைகளாகவே இருந்தன. போராட்டமோ தொடர்ச்சியாக சர்வதேசரீதியிலும் நாட்டிற்குள்ளேயும் தன்னைத் தனிமைப் படுத்தியவாறு அதே அழிவுப் பாதையில் பயணித்தது.

## அரச நிர்மாணம், பிரஜாவுரிமை, தேசியம்

1948ல் பிரித்தானிய காலனித்துவம் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய போது நாட்டை ஆள அது உருவாக்கிய காலனித்துவ அரசை விட்டுச் சென்றது. முழு இலங்கைத் தீவையும் ஒன்றிணைத்து தனது தேவைகளுக்கேற்ப மத்தியமயப்படுத்திய ஒரு ஆட்சியமைப்பை காலனித்துவம் கட்டமைத்தது. 1948ல் ஒரு இலங்கை அரசு இருந்தது ஆனால் நாட்டின் சகல மக்களையும் உள்ளடக்கிய ஒரு ´இலங்கைத் தேசியம்´ அல்லது நாட்டின் பல இனங்களையும் இணைக்கும் ‘இலங்கையர்’ எனும் பொது அடையாளம் இருக்கவில்லை. சுதந்திர இலங்கையில் அத்தகைய ஒரு பல்லின அல்லது பல்தேசிய ஒருமைப்பாட்டையும் பொது அடையாளத்தையும் கற்பிதம் செய்து கட்டி வளர்க்கும் வரலாற்றுத் தேவை இருந்தது. அது அப்போதைய அரசியல் வர்க்கத்தினதும் நாட்டின் முற்போக்கு சிந்தனையாளர்களினதும் பிரதான கடமையாயிருந்தது. அது நடை பெறவில்லை. அன்றைய இடதுசாரிக் கட்சிகளுக்கும் இந்தக் கடமை இருந்தது.

அப்போது அவர்களிடம் நியாயமான கொள்கைகள் இருந்தன ஆனால் இயக்கபூர்வமான நடைமுறை இருக்கவில்லை.

சுதந்திரத்துக்குப்பின் தொடர்ந்து நடைபெற்றது என்னவெனில் ஒரு நவீ ன சிங்கள பௌத்த தேசியத்தின் உருவாக்கமே. இதையே 'இலங்கைத் தேசியம்' என சிங்களத் தேசியவாதிகளும் அரசும் பிரகடனப்படுத்துகின்றன. ஆட்சியாளர் அரசை இந்தத் திட்டத்திற்கேற்ப மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இது தாராள ஜனநாயகப் பாரளுமன்ற அமைப்பிற்ககூடாக அரசின் இனத்துவ மேலாதிக்கமயமாக்கலின் (ethnocratisation ன்) வரலாறாயிற்று. இந்தத் திட்டத்திற்கு உதவிய 19ம் நூற்றாண்டுக் கருத்தியல் பின்னணி மற்றும் 1956க்குப் பின் அது எப்படி நகர்ந்தது என்பது பற்றி எனது 1983 கட்டுரையில் ஓரளவு விளக்கியுள்ளேன். இங்கு மேலும் சில விடயங்களை சேர்ப்பது தகும்.

சிங்கள பௌத்த தேசிய அடையாள உருவாக்கச் செயல்முறை நாட்டின் மற்றைய இனங்களை வெளிவாரிப் படுத்தும் அதேவேளை அதுதான் இலங்கைத் தேசியம் என எல்லா இனங்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதான் பெரும்பான்மைவாதிகளின் கொள்கை. இது மற்றைய இனங்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கும் கொள்கை. அவர்கள் இதை ஏற்றுக் கொண்டால் நீண்ட காலத்தில் தமது மொழி, மத, இன அடையாளங்களை இழக்க நேரிடும். இத்தகைய நிர்ப்பந்த மாற்றத்தை - அதாவது தமது விருப்பிற்கு மாறாக பெரும்பான்மை இனத்தின் அங்கமாவதை (assimilation ஐ) - ஏற்காத இனத்தவர்கள்

தமது கூட்டு அடையாளங்களுக்காகப் போராட முற்படுவார்கள். இலங்கைத்தீவில் தனிமனித அல்லது சிறு குழு மட்டத்தில் இன, மொழி, மத அடையாளங்களின் மாற்றம் ஒன்றும் புதிதானதல்ல. இது பண்டைக் காலம் தொட்டு நடைபெறுகிறது. இந்தப் போக்குத் தொடரும் என எதிர்பார்க்கலாம். அதுவல்ல பிரச்சனைக்குரிய விடயம். நடைபெறுவது என்னவெனில் பெரும்பான்மைவாத அரச மற்றும் தேசியத்தின் உருவாக்கத்தால் இனரீதியில் வெளிவாரிப் படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களின் இன அடையாளங்களுக்காக, கூட்டு உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்.

## தாராளவாத ஜனநாயகத்தின் மறுபக்கம்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் 1931 ஒரு முக்கிய ஆண்டெனலாம். அந்த ஆண்டு நியமிக்கப்பட்ட டொனொமோர் ஆணைக்குழு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்தது. அதுவரை இலங்கையின் ஜனத்தொகையின் நான்கு வீதத்தினருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. இந்த உரிமை கல்வித் தராதரம் மற்றும் சொத்துடைமை அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. அப்போதைய உயர்வர்க்க சிங்கள, தமிழ் தலைவர்கள் சர்வஜன வாக்குரிமையை எதிர்த்து நின்ற போதும் டொனொமோர் ஆணைக்குழு தனது சிபார்சைப் பலமாக முன்மொழிந்தது. அதுவரை இருந்து வந்த இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தையும் அகற்ற வேண்டுமெனவும் பல்கட்சி அரசியல் வரவேற்கப்பட வேண்டும் எனவும் தாராளவாத நோக்கில் ஆணைக்குழு சிபார்சு செய்தது. ஆயினும் ஏற்கனவே காலனித்துவத்தின் ஆட்சிமுறை இனப் பிரிவுகளை ஆழமாக்கிவிட்டது. எதுவித போராட்டமும் இன்றி (அதற்குமாறாக நாட்டின் உயர்வர்க்கத்தினரின் எதிர்ப்புக்கிடையே) வயதுவந்த

இலங்கையருக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கபட்டது. டொனொமோர் யாப்பு அமுலுக்கு வந்தது.

நவீ ன முதலாளித்துவ சமூகத்தில் சர்வஜன வாக்குரிமை ஒரு அடிப்படை ஜனநாயக உரிமை. அது பிரஜாவுரிமைக்கு அர்த்தம் கொடுக்கும் உரிமைகளில் ஒன்று. இங்கிலாந்து உட்பட பல நாடுகளில் இந்த உரிமை நீண்ட போராட்டங்களுக் கூடாகவே வென்றெடுக்கப்பட்டது. அதுவும் பெண்களின் வாக்குரிமைக்கான போராட்டங்கள் மிக நீண்டவை. இலங்கைக்கு அது காலனித்துவத்தின் தாராளவாதக் கருணையால் சுலபமாகவே கிடைத்துவிட்டது. அப்படிக் கிடைத்த சர்வஜன வாக்குரிமை பல்லின இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பிற்குள் இனத்துவ அரசியலின் கருவியாக்கப்பட்டது. தேர்தல் அரசியலில் வாக்குகள்பெற இனத்துவ மற்றும் அதற்குக் கீழ்ப்பட்ட சாதி அடையாளங்கள் மற்றைய அடையாளங்களையும் - வர்க்கம், பால் போன்றவற்றையும் - விட முக்கியத்துவம் பெற்றன. ஜனத்தொகைரீதியில் ‘பெரும்பான்மை இனம் - சிறுபான்மை இனங்கள்’ எனும் வேறுபாடு நாட்டின் அரசியல் அரங்கை ஆக்கிரமித்துக் கொண்டது. பாராளுமன்ற அரசியலில் இனத்துவப் பெரும்பான்மைவாதம் சிங்களத் தேசியவாதிகளின் பலமான கருத்தியல் ஆயுதமாகியது. அளவுரீதியில் சிறுபான்மையாயுள்ள இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் பொறிமுறைகள் இல்லாத அமைப்பில் பாராளுமன்ற அரசியல் அதிகாரம் இனத்துவ மயப்படுத்தப்பட்ட எண்களின் விளையாட்டாகியது. இந்த விளையாட்டின் விதிகளை மாற்றத் தேவையான எண்களைப் ‘ஜனநாயக வழியில்’ பெறுவதில் பெரும்பான்மை வாதிகளுக்குப் பிரச்சனையில்லை. இது தாராளவாத ஜனநாயகத்தின் (liberal democracy ன் ) ஒரு இருள் மிகுந்த பக்கம் என்பதில் சந்தேகமில்லை.

அன்றைய காலகட்டத்தில் தாராளவாத விழுமியங்களால் ஆகர்ஷிக்கப்பட்ட பிரஜாவுரிமை, சர்வஜன வாக்குரிமை ஆகியன முற்போக்கு அம்சங்கள் கொண்டவை என்பதை மறுப்பதற்கில்லை. தனிமனித உரிமைகளைப் பொறுத்தவரையில் முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது இது தெளிவாகிறது. ஆயினும் தாராளவாதம் பேசும் தனிமனித சமத்துவம் மேலெழுந்த வாரியானது. அது அதிகார உறவுகளுக்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுப்பதில்லை. இந்த உறவுகளின் பரிமாணங்களான வர்க்கம், இனம், ஆணாதிக்கம், சாதி போன்றவற்றின் தாக்கங்களைக் கணக்கில் எடுக்காத ‘சமத்துவம்’ என்பதைக் கூறியாகவேண்டும்.

1947ல் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் அகில இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆறு மலையகத் தமிழரினதும் மலையகப் பகுதிகளில் பல இடதுசாரிகளினதும் வெற்றிக்கு உதவின. 95 ஆசனங்களில் D. S. சேனாநாயக்கவின் தலைமையிலான UNP 42 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியது. 10 ஆசனங்களைப் பெற்று சமசமாஜக் கட்சி இரண்டாம் இடத்தைப் பெற்றது. கொம்யூனிஸ்ட் கட்சி மூன்று மற்றும் போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சி ஐந்து ஆசனங்களையும் பெற்றன. ஏழு ஆசனங்களைப் பெற்ற G.G. பொன்னம்பலத்தின் இலங்கை தமிழ் காங்கிரசினதும் சில சுயேட்சை அங்கத்திரனதும் ஆதரவுடன் சேனாநாயக்கா சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்தார். ஆட்சி அமைத்ததும் அவர் மலையகத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் சட்டத்தை

நிறைவேற்றினார்[5]. நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்ற கூலி அடிமைகள் ஆக்கப்பட்டனர். நாட்டின் பிரஜைகள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு, மற்றும் கல்வி, சுகாதாரம் தொடர்பான உரித்துடைமைகள் (entitlements) எல்லாம் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவர்கள் தொடர்ந்தும் குறைந்த கூலிபெறும் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இலங்கையின் பொருளாதார விருத்திக்குத் தம் உழைப்பைக் கொடுத்தார்கள். இந்தச் சட்டத்தின் வருகை பாராளுமன்ற ஜனநாயகத்திற்கூடாக அடிப்படை தாராளவாத நியமங்களைக் கூட மதிக்காத ஒரு இனத்துவ மேலாதிக்கம் (Ethnocracy) உருவாகப்போவதன் அறிவிப்பு என்பதைப் பின்னைய வரலாறு காட்டியது.

மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சனைக்கு 1964ல் வந்த சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஒரு குறைபாடுமிக்க தீர்வானது. இந்த ஒப்பந்தம் பாதிக்கப்பட்ட மக்களின் பங்குபற்றலின்றி உருவாக்கப்பட்டது. அதன்படி ஏறக்குறைய 10 இலட்சம் மலையகத் தமிழரில் அரைவாசிக்கு மேற்பட்டோரை (525,000) இந்தியா ஏற்றுகொள்ளும், 300,000 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கும், 150,000 பேரின் நிலைமை பற்றிப் பின்னர் முடிவெடுக்கப்படும். இந்த ஒப்பந்தத்தின் அமுலாக்க காலம் 15 வருடங்கள். ஆயினும் இந்தியா தனது பொறுப்பை முழுமையாக அமுலாக்கத் தவறியது. இதனால் இலங்கை அரசும் தன் பொறுப்பைப் பின்போட்டது. நீண்ட கால இழுபறிக்குப் பின் இலங்கையில் மிஞ்சியிருந்த மலையகத் தமிழருக்கு 2003ல் இலங்கைப்

5சேனாநாயக்க அரசாங்கம் கொண்டுவந்த பிரஜாவுரிமைச் சட்டங்கள் (1948, 1949) தொடர்பாக அப்போதைய வடக்கு தமிழ் தலைவர்களின் சந்தர்ப்ப வாதம், துரோகம் பற்றி கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. 2003 அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சமாதானம் கிட்டவில்லை. போர் தொடர்ந்தது. அரசின் இனத்துவ மேலாதிக்க மயமாக்கலும் தொடர்ந்தது. 2005ல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றார். விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்குத் தமிழரைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி நிர்ப்பந்தித்தது ராஜபக்சவின் வெற்றிக்கு உதவியது. இதைச் செய்வதற்குப் புலிகள் ராஜபக்சவிடமிருந்து பெருந்தொகையான பணத்தைப் பெற்றார்கள் எனும் செய்தி பின்னர் பகிரங்கமானது.

2009ல் ராஜபக்சவின் தலைமையில் போர் முடிவுக்கு வந்தது. புலிகளை இராணுரீதியில் முற்றாகத் தோற்கடித்த பின்னரும் ராஜபக்ச அரசாங்கம் வடக்கு கிழக்கில் பொது மக்களைக் கட்டியாள்வதற்குப் போரை மாற்று வழிகளுக்கூடாகத் தொடர்ந்தது. இராணுவ மயமாக்கல் மேலும் பலப்படுத்தப்பட்டு பொருளாதாரத் துறைகளுக்குள்ளும் பலமாக ஊடுருவியது. சிவில் நிர்வாகம் தொடர்ந்தும் இராணுவத்தின் அதிகாரத்துக்கு கீழ்ப்படுத்தப் பட்டது. புலிகளைத் தோற்கடித்த தலைவன் என ராஜபக்ச சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தார். ஆனால் ராஜபக்சவின் ஆட்சி அதிகாரவாத ஆட்சியாக, ஒரு குடும்ப ஆட்சியாக, ஊழல் மிகுந்த ஆட்சியாக மாறியது. அந்த ஆட்சியில் முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்முறைகளும் அதிகரித்தன. ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் ஆதரவு இருந்தது. மூன்றாம் முறையும் ஜனாதிபதியாகும் ஆசையில் யாப்பிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தார். ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்கள் முன்போட்டு 2015 ஜனவரியில் மீண்டும் வெற்றிபெறும்

நம்பிக்கையில் தேர்தலில் நின்றார். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளரான அவரது முன்னைய சுகாதார மந்திரி சிறிசேனாவால் தோற்கடிக்கப்பட்டார். சிங்கள வாக்குகளின் பெரும்பான்மை ராஜபக்சவிற்குக் கிடைத்த போதும் தமிழரும் முஸ்லிம்களும் பெருந்தொகையில் அவருக்கு எதிராக வாக்களித்ததே அவரின் தோல்விக்குக் காரணம்.

பல்லினப் பெரும்பான்மையால் பொது வேட்பாளரான சிறிசேனா பெற்ற வெற்றியும் அதைத் தொடர்ந்து வந்த பாராளுமன்ற ஆட்சி மாற்றமும் மக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்புகளை உருவாக்கின. சோதனைச் சாவடிகளின் நீக்கம் மற்றும் பேச்சு, எழுத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் போன்றவற்றை மக்கள் அனுபவிக்கிறார்கள். ஆனால் கொடுத்த பல வாக்குறிதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசாங்கம் தடுமாறுகிறது. புதிய யாப்பினை உருவாக்கும் முயற்சி ஸ்தம்பித்துள்ளது. ராஜபக்ச தலைமையில் இயங்கும் சிங்களத் தேசியவாத சக்திகளின் எதிர்ப்பைக் கண்டு அரசாங்கம் அஞ்சுகிறது. அரசின் இனத்துவ மேலாதிக்கத் தன்மையை மாற்றுவது சுலபமல்ல.

ETHNOCRACY[6] எனப்படுவது நீண்ட காலமாகச் சில நாடுகளில் இருந்து வரும் ஆட்சிமுறை (regime) பற்றி, அது எப்படி அரசைக் கையாளுகிறது என்பது பற்றி,

6 Ethnocracy க்கு தமிழில் இனநாயகம் எனும் சொல்லைச் சிலர் பயன்படுத்துகிறார்கள். நான் முன்பிருந்தே இனத்துவ மேலாதிக்க ஆட்சி எனும் பதத்தையே பயன்படுத்தி வந்துள்ளேன். எனது அபிப்பிராயத்தில் இந்தப் பதம் ஆங்கிலப் பதத்தின் கோட்பாட்டுரீதியான அர்த்தத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

சமீபகாலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு கோட்பாடாகும்[7]. ஆட்சிமுறை அரசுக்கூடாகவே செயற்படுகிறது. அது தன் நோக்கங்களை அடைய அரசின் பல்வேறு நிறுவனங்களைப் பயன்படுத்துகிறது மாற்றியமைக்கிறது. இனத்துவ மேலாதிக்க ஆட்சியமைப்புப் பலவிதமானது. ஒருவகை, இனத்துவ சர்வாதிகார ஆட்சிமுறைக் கூடாக அரசைக் கையாளுகிறது. இது பலாத்கார வழிகளைப் பயன்படுத்தி இனச்சுத்திகரிப்பு, இனரீதியில் வெளிவாரிப்படுத்தல் போன்றவற்றைச் செய்கிறது. இதற்கு உதாரணங்கள் - முன்னைய Ruwanda, Serbia, 1994க்கு முன்னைய தென் ஆபிரிக்கா.

இன்னொருவகை, இனத்துவ மேலாதிக்கம் முறைசார்ந்த (formal) ஜனநாயக அமைப்புகள் உள்ள பல்லின நாட்டில் ஒரு குறிப்பிட்ட இனத்தின் செல்வாக்குள்ள வர்க்கக் கூட்டு பாராளுமன்ற வழிக்கூடாகச் சட்டங்களை இயற்றி இனத்துவ மேலாதிக்கத்தை நிலைநாட்டுகிறது. அது ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வமான பொறிமுறைகளுக்கூடாகவே அதிகாரத்தை பெற்றுத் தன் திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறது. அரசின் இனத்துவ மயமாக்கல் பல வழிகளுக்கூடாக நடைபெறுகிறது. இந்த நடைமுறையில் பல ஜனநாயக விரோத வழிகளையும் அது பாவிக்கத் தயங்காது. ஆனால் தன் செயற்பாடுகளுக்குப் பராளுமன்ற ஜனநாயக விதிகளின்படி பெரும்பான்மையின் சம்மதத்தைப்பெற்று சட்டபூர்வமான முடிவுகளை எடுக்கும் வல்லமையுடையது. அரசின் தேசிய இறைமை, பயங்கரவாதத்தை இராணுவரீதியில் தோற்கடிக்க

7 2006ல் இஸ்ரேலிய ஆய்வாளரான Oren Yiftachel வெளியிட்ட Ethnocracy – Land and Identity Politics in Israel/Palestine (Pennsylvania University Press) எனும் நூலுக்கூடாக இனநாயகம் எனும் கோட்பாடு ஆய்வாளர் மத்தியில் பிரபல்யமானது.

வேண்டிய அவசியம், ஆள்புலத்தின் பாதுகாப்பு போன்ற காரணங்களைக் காட்டி பலாத்கார அரச இயந்திரத்தைப் பலப்படுத்திப் பயன்படுத்தும் அதிகாரத்திற்கான அங்கீகாரத்தை அது பராளுமன்றில் பெரும்பான்மையான மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து பெறுவதற்குப் பெரும் தடைகள் இல்லை. இலங்கையின் இனத்துவ மேலாதிக்கம் இந்த வகை சார்ந்தது. இது பற்றி வேறொரு கட்டுரையில் (2012) மேலும் விளக்கியுள்ளேன்[8].

ஆகவே இலங்கை அரசு ஒரு ஒற்றை ஆட்சி அரசு மட்டுமல்ல அது இனத்துவ மயமாக்கப்பட்ட, மதச்சார்புடைய, இனங்களுக்கிடையே ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குப் பதிலாகப் முரண்பாடுகளை கூர்மைப் படுத்தும் பெரும்பான்மை இனத்துவ அரசு. இந்த அரசின் அமைப்புரீதியான (structural) சீர்திருத்தமின்றி தேசிய இனப் பிரச்சனைக்கு ஜனநாயகரீதியான தீர்வைக் காணமுடியாது. இது, இனிச் செய்யவேண்டியது என்ன? எனும் கேள்வி எழுப்பும் சவால்களில் முக்கியமான ஒன்று. இது இலங்கையின் பல்வேறு இனங்களின் விசேடமாகச் சிங்கள மக்களின் வெகுஜன ஆதரவின்றி நடக்குமென எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. அதே போன்று தமிழர் தரப்பில் இதற்கு உதவும் வகையில் இன்றைய யதார்த்தங்களை நன்கறிந்து தேசிய இனப்பிரச்சனையை மீள் சட்டகப்படுத்த வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

8 N. சண்முகரத்தினம், 2012, சீவனோபாயத் தேவைக்கும் அப்பால் வடக்கு கிழக்கில் நிலமும் தேசிய இனப்பிரச்சனையும், சமகாலம், ஒக்டோபர் 01/15 / பக்கங்கள் 11/19. இந்தக் கட்டுரை புதினப்பலகை இணையத்தளத்திலும் தமிழ்நாட்டு சஞ்சிகை ‘மணற்கேணி’யிலும் மீள் பிரசுரம் செய்யப்பட்டது.

## தேசிய இனப்பிரச்சனையின் மீள் சட்டகமாக்கலை நோக்கிய ஒரு கலந்துரையாடலுக்கான குறிப்புக்கள்

கடந்த பல தசாப்தங்களாகத் தேசிய இனப்பிரச்சனை தன்மைரீதியான மாற்றங்களைக் கண்டுள்ளது. அரசாங்கங்களின் கொள்கைகள், இராணுவ மயமாக்கலின், நீண்ட உள்நாட்டுப்போரின் விளைவுகள், போரின் இராணுவரீதியான முடிவு, போருக்குப்பின் ராஜபக்ச அரசாங்கம் பின்பற்றிய மாற்று வழிக்கூடாகப் போரைத் தொடரும் கொள்கை போன்றவற்றின் தாக்கங்களால் தேசிய இனப்பிரச்சனையின் உள்ளடக்கங்களும் உருவமும் மாற்றமடைந்துள்ளன. இந்த யதார்த்தத்தை எதிர்கொண்டு அதை ஆழப்புரிந்து மாற்று அரசியலைத் தேடவேண்டும். வடக்கு கிழக்குத் தமிழரின் கோரிக்கைகள் அதே பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளுடனும் தொடர்புடையவை. இனரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மலையகத் தமிழரின் மற்றும் நாட்டின் தென்பகுதியில் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்களின் ( இதில் தமிழர்கள் மற்றும் தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட முஸ்லிம்கள் அடங்குவர்) உரிமைகளுக்கான போராட்டமும் தேசியப்பிரச்சனையின் உள்ளார்ந்த அம்சங்கள் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இந்தப் பல்வேறு சமூகங்களின் பிரச்சனைகளில் வேறுபாடுகள் உண்டு ஆனால் அவர்களின் உரிமைப் போராட்டங்கள் எல்லாம் இலங்கையின் முழுமையான ஜனநாயகமயமாக்கலின் அங்கங்கள்.

தேசிய இனப்பிரச்சனை உள்நாட்டுப் போராக மாறியதற்குக் காரணிகள் இருந்தன. அதே போன்று 30 வருடப் போரினால் பல விளைவுகள் ஏற்பட்டன. இந்த விளைவுகள் போரின் காரணிச் சங்கிலியுடன் (causal chain உடன்) பின்னூட்டப் போக்கினால் (feedback pro-

cess) இணைந்தன. விளைவுகளும் காரணிகளாகும் போக்குத் தொடர்ந்தது, இன்றும் தொடர்கிறது. இது தேசிய இனப்பிரச்சனையை அடிப்படையாக மாற்றியுள்ளது. இந்த வகையில் சில மாற்றங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**அடையாளம் - ஆள்புலம் இணைப்பின்** (identity-territory nexus **ன்**) **உடைப்பு அல்லது பலவீ னமாக்கல்**

வடக்கு கிழக்குத் தமிழரின் தாயகம் எனக் கோரப்பட்ட பிரதேசத்தின் தொடர்ச்சி மீட்க முடியாதவாறு (irreversibly) உடைக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தின் இன்றைய புவியியல் 1970களில் இருந்ததைவிடப் பலவகையில் பாரதூரமாக மாறிவிட்டது. ஆள்புலத்துக்காக இரண்டு இனத்துவ தேசியவாதங்களுக்கு இடையிலான மிகவும் அசமத்துவமான போட்டியின் முடிவு அந்த ஆள்புலத்தின் பேரினமயமாக்கலே.

அரச காணிகளில் குடியேற்றத் திட்டங்கள், நில அபகரிப்பு, இராணுவ வலயங்கள், பொருளாதார மாற்றங்கள், மற்றும் தமிழரின் பெருமளவிலான நிரந்தரப் புலப்பெயர்வு போன்றவற்றால் அந்தப் பிரதேசத்தின் இனக்கூறுகளின் விகிதாசாரம், நிலச் சொத்துரிமைகள், நிர்வாகக் கட்டுமானம், பௌதிக உட்கட்டுமானம், நிலத்தோற்றங்கள் அடிப்படையான மாற்றங்களைக் கண்டுள்ளன. போர்க்காலத்தில் அரச குடியேற்றத் திட்டங்களும் இராணுவமயப்படுத்தப் பட்டன. இன்று வடக்கு கிழக்கு முன்பைவிட பல்லினமயமாகியுள்ளது, பல்லினமயமாகி வருகிறது. அதேவேளை இனங்களுக்கிடையே முரண்பாடுகளும் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

அதிகாரப் பகிர்வு பற்றிப் பார்க்கும்போது வடக்கு-கிழக்கு மீள் இணைப்பின் சாத்தியப்பாடு பற்றி மீள் சிந்திக்க

வேண்டும். எனது அபிப்பிராயத்தில் இன்றைய அரசியல் புவியியல் நிலைமைகளில் மீள் இணைப்புச் சாத்தியமெனப் படவில்லை. கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் மீள் இணைப்பை ஆதரிக்கவில்லை. அங்கு வாழும் சிங்கள மக்கள் முற்றாக எதிர்க்கிறார்கள். இதுதான் இன்றைய யதார்த்தம். இதை நன்கு தெரிந்து மதிப்பது ஒரு நியாயமான அரசியல் தீர்வின் தேடலுக்கு ஆக்கபூர்வமாக உதவும் என நம்புகிறேன். அதுவே இதுவரையிலான பேரின ஆதிக்கக் குடியேற்ற மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள் தொடர்வதைத் தடுப்பதற்கான வழியைத் தேட உதவும்.

### புலப்பெயர்வின் விளைவுகள்

உள்நாட்டு மற்றும் சர்வதேசப் புலப்பெயர்வு வடக்கு கிழக்கின் அரசியல் பொருளாதாரத்தில், இனப்புவியியலில் பலவிதமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. போரினால் ஏற்படும் இடப்பெயர்வுகள் தவிர்க்க முடியாதவை. ஆனால் போர்ப்பிரதேசங்களில் அவற்றின் நீண்டகாலத் தாக்கங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம்.

போரின் விளைவாக வடக்கு கிழக்கிலிருந்து தமிழரின் சர்வதேசப் புலப்பெயர்வு பெருமளவில் இடம்பெற்றுள்ளது பலரும் அறிந்ததே. அப்படிப் புலம்பெயர்ந்தவர்களில் மிகப் பெரும்பான்மையினர் மேற்கத்திய நாடுகளிலேயே குடியேறியுள்ளார்கள். புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்திற்கும் தாயகத் தமிழ் சமூகத்திற்கு மிடையேயான உறவு பல அம்சங்களைக் கொண்டது. இத்தகைய உறவை டயஸ்போறா (diaspora) ஆய்வாளர்கள் நாடுகடந்த சமூகங்களின் (trans-national communities ன்) உருவாக்கமாகக் கோட்பாட்டு மயப்படுத்தி உள்ளார்கள். இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் இருந்தே ஒரு காசாதாரப் பொருளாதாரத்தின் (remittance economy ன்) வளர்ச்சி இந்த

உறவின் ஒரு முக்கிய அம்சமாயிருந்தது. இதைத் தொடர்ந்து சமூக, கலாச்சாரரீதியான சிந்தனைகளின் வருகையும், செயல் திட்டங்களும் அதிகரித்தன. இவற்றின் நன்மை, தீமை பற்றிய ஆழமான ஆய்வுகள் இல்லையாயினும் பல போக்குகளை அவதானிக்க முடிகிறது.

- காசாதாரப் பொருளாதாரம் போர்க் காலத்தில் பல குடும்பங்களைக் காப்பாற்றியது. அதேவேளை அது புலப்பெயர்வையும் மேலும் ஊக்கிவித்தது. வடக்கிலிருந்து தெற்கிற்கும் வெளிநாட்டிற்கும் நிரந்தரமாகப் புலம்பெயரும் போக்குத் தொடர்ந்தது. தெற்கில் குறிப்பாக மேல்மாகாணத்தில் குடியேறியுள்ள வடக்கு கிழக்கு தமிழரின் தொகை அதிகரித்துள்ளது. வெளிநாட்டிலிருந்து உதவி பெறாதோரும் கல்வி, தொழில் காரணமாகத் தெற்கிற்குக் குடியகலும் போக்கும் தொடர்கிறது. தெற்கிலே குடியேறியுள்ள தமிழரின் எதிர்காலம் தெற்குடனேயே பிணைந்துள்ளது. அவர்கள் தமது மொழியுரிமையை அனுபவிக்க, இன அடையாளங்களைப் பேணி வளர்க்கும் உரிமையைப் பெற அங்குள்ள சிங்கள மக்களின் புரிந்துணர்வையும் ஆதரவையும் பெறுதல் அவசியம்.

- வெளிநாட்டில் குடியேறவேண்டும் எனும் ஆவல் தமிழ் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. இதற்கு உதவக்கூடிய கதவுகள் இப்போ மூடப்பட்டுவிட்ட போதும் வெளிநாடு செல்லப் பல இளைஞர்கள் முயற்சித்தவண்ணம் இருப்பதை காணலாம். இருக்கும் வெளி நாட்டுத் தொடர்புகள் மட்டுமன்றி வடக்கு கிழக்கு நிலைமைகளும் இளம் சந்ததியினரின் புலப்பெயர்வை ஊக்கிவிக்கின்றன.

- காசாதாரப் பொருளாதாரம் வடக்கு கிழக்கில் குறிப்பிடத்தகுந்த சமூக-பொருளாதார வேறுபடுத்தலை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டுப் பணம் பெருமளவில் வடக்கிற்குச் செல்வதால் இந்தப் போக்கு அங்கேயே பலமாகியுள்ளது. இது சொத்துடைமை மற்றும் அதிகார உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதற்கும் சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்குமிடையிலான தொடர்பு ஆராயப்படவேண்டியது. இதன் புவியியல் - அதாவது பிரதேசரீதியான தாக்கங்கள் - ஆய்வுகளின் அம்சமாகவேண்டும்.

- நுகர்வின் மட்டுமன்றி நுகர்வுவாதத்தின் அவற்றுடன் தொடர்புள்ள வாணிபத்தின் வளர்ச்சியே காசாதாரப் பொருளாதாரத்தின் தலையாய போக்காகவுள்ளது. வெளிநாட்டு பணத்தின் வருகையால் உருவான சேமிப்பு உபரி வடக்கு கிழக்கில் உற்பத்தி மூலதனமாகப் பெருமளவில் முதலீடு செய்யப்படவில்லை. அத்தகைய முதலீட்டை ஊக்கிவிக்கும் சூழலை அரசாங்கம் உருவாக்கவில்லை.

## போரினால் ஏற்பட்ட அழிவும் அரசியல் தீர்வும்

‘விடுதலைப் போராட்டத்திற்கு’ முன்னர் அனுபவித்த வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகளைக்கூட இழந்த அவல நிலையில் பெருந்தொகையான மக்கள் சீவனோபாய உரிமைப் போராட்டங்களை நாளுக்கு நாள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்று வடக்கு கிழக்கில் பல இடங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது நிலங்களுக்காக, கடல் தொழில் செய்யும் உரிமைக்காகச் செய்யும்

போராட்டங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களின் உறவுகளின் போராட்டங்கள், போர் விதவைகள் சார்பில் எழும் கோரிக்கைகள், இராணுவமயமாக்கலுக்கு எதிரான போராட்டம் எல்லாமே போரின் விளைவுகளால் வந்தவை. இவை எல்லாம் அடிப்படை உரிமைப் போராட்டங்களே. போரின் விளைவுகள் காரணிச் சங்கிலியுடன் இணைந்து புறநிலை யதார்த்தத்தை மாற்றுவது பற்றி ஏற்கனவே கூறியிருந்தேன். இவையெல்லாம் அதன் உதாரணங்கள்.

பல இடங்களில் விசேடமாகக் கிழக்கில் நிலம், நீர் மற்றும் கடற்றோழில் தொடர்பான பிரச்சனைகள் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கிடையிலான முரண்பாடுகளாக உருவெடுத்துள்ளன. இவற்றின் நியாயமான தீர்வுகள் நிலம், மற்றைய வளங்களின், அபகரிப்புக்கு எதிராக இருக்கவேண்டிய அதேவேளை அவற்றின் வெற்றி முன்பிருந்தே அயலவர்களாய் வாழ்ந்துவரும் இனங்களுக் கிடையிலான நல்லுறவையும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புவதிலேயே தங்கியுள்ளது.

வடக்கு கிழக்குக்கு வெளியே, மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வதிவிட நில உரிமைக்கான போராட்டம் புதிய உத்வேகத்தைப் பெற்றுள்ளது. பெருந்தோட்ட அமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அவர்களின் எதிர்காலம் பற்றிக் கேள்விகளை எழுப்புகின்றன. மலையகத்தில் சிங்கள மக்களுடன் சம உரிமை பெற்றுப் பாதுகாப்புடன் வாழ்வதே அவர்களின் போராட்டத்தின் நோக்கம்.

இந்தப் பிரச்சனைகளின் நியாயமான தீர்வுகள் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கு நேரடியாக உதவும். ஏனெனில்

அரசியல் தீர்வுக்கு வெளியே இந்தப் பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்வுகளைக் காணமுடியாது. மறுபுறம் இந்தப் பிரச்சனைகள் தனியே தமிழ் மக்களின் பிரச்சனைகள் அல்ல அவற்றின் நியாயமான தீர்வுகள் மற்ற இனத்தவர்களுடனும் தொடர்புடையன. அவை அடிப்படையில் இலங்கை அரசின் மறுசீரமைப்புடன் தொடர்புள்ள ஜனநாயக உரிமைப் பிரச்சனைகள்.

மேலே இனங்காணப்பட்ட பிரச்சனைகளின் தீர்வுகள் பற்றிப் பார்க்கும்போது அவை தவிர்க்கமுடியாதபடி வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கும் நம்மை எடுத்துச் செல்கின்றன. அது மாத்திரமன்று இவை எல்லாமே பல்லினத் தொடர்புள்ள பிரச்சனைகள். அத்துடன் இவற்றில் எந்தப் பிரச்சனையும் சிங்கள மக்களின் புரிந்துணர்வும் ஆதரவுமின்றித் தீரப்போவதில்லை.

முற்போக்கு சக்திகளின் இன்றைய கடமைகளில் ஒன்று இந்தப் பிரச்சனைகளை ஆழ ஆராய்ந்து அவற்றை மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளாக உள்ளடக்கிய ஒரு திட்டத்தைத் தயாரிப்பதாகும். இப்படிச் சொல்வது எல்லா மக்களுக்கும் ஒரே அரசியல் திட்டமோ தீர்வோ என்பதாகாது. ஒவ்வொரு மக்களின் கோரிக்கைகளுக்கான போராட்டம் மற்றைய மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கு உதவ வல்லது என்பதை உறுதிபடுத்தவேண்டும். இந்தக் கோரிக்கைகள் இலங்கை அரசின் ஜனநாயகரீதியான சீர்திருத்திற்கான முதற்படி. அதேவேளை இந்தக் கோரிக்கைகள் சிங்கள மக்களின் நலன்களுக்குப் பாதகமானவையல்ல, மாறாக அவர்களின் ஜனநாயகப் போராட்டத்துக்கு உதவுவன என்பதை, இலங்கை அரசின் இனத்துவ மேலாதிக்கத் தன்மையை மாற்றி அதை நாட்டின் எல்லா இனங்களையும்

உள்ளடக்கிய ஒரு அரசாக்குவதன் மூலமே இலங்கையின் ஜனநாயகரீதியான மீள் ஒருங்கிணைப்பைத் முன்னெடுக்க முடியும் என்பதை எடுத்துக்கூறவேண்டும். இன்றைய உலகில் பெரும்பான்மையான நாடுகள் பல்லின நாடுகளே. ஒரு நவீன ஜனநாயக அரசில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசியங்களும்/ தேசிய இனங்களும் கூடி வாழ முடியும் என்பது பொதுமக்கள் மத்தியில் கலந்துரையாடப்படும் பொருளாகவேண்டும். எதிர்மேலாட்சிப் போக்கினைப் பலப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

## இதை எப்படிச் செய்வது?

இனப்பிரச்சனை என்று ஒன்றில்லை. இருந்தது பயங்கரவாதப் பிரச்சனையே. அது தீர்க்கப்பட்டுவிட்டது என நம்பவைக்கப்பட்டுள்ள பெருபான்மையான சிங்கள மக்களின் மனதை எப்படி மாற்றுவது?

அத்தகைய ஒரு மாற்றம் இல்லாதவரை, சிங்கள மக்களின் சம்மதம், ஆதரவு, பங்குபற்றல் இல்லாதவரை தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு கிடைக்கப் போவதில்லை. இது ஒன்றும் புதிதாகப் பிறந்த ஞானமல்ல. பழைய செய்திதான். ஆனால் இன்று வடக்கு கிழக்குத் தமிழ்த் தரப்பிலிருந்து மீள்சட்டகமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சனையின் அடிப்படையில் கோரிக்கைகளை முன்வைப்பது சிங்கள மக்களுடன் ஒரு புதிய அரசியல் சம்பாஷணையை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. அதே போன்று முஸ்லிம் மக்களையும் மலையகத் தமிழ் மக்களையும் அணுகும் சந்தர்ப்பம் பிறக்கிறது. இந்த சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது.

இதற்கு அப்பால் செல்வதற்குப் பல திறந்த விவாதங்கள், கலந்துரையாடல்கள் தேவை. அந்த நோக்கிலேயே

1983ல் வெளிவந்த கட்டுரைக்கு இந்தப் புதிய முன்னுரை எழுதப்பட்டது.

சமுத்திரன்
ஒஸ், நோர்வே
April 2017

# முன்னுரை 1983

'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்'
பாரதி [பாஞ்சாலிசபதம்]

தமிழ் சஞ்சிகை ஒன்றினை மனதில் வைத்துச் சிறிய கட்டுரை ஒன்றினை எழுத ஆரம்பித்தேன். அது இப்படி நீண்டு தனிப் பிரசுரமாகிவிட்டது. சிங்களப்பேரின இனவாதத்தின் தோற்றம், வளர்ச்சி, தாக்கம் பற்றி ஒரு விரிவான ஆய்வினைச் செய்ய ஒரு குழுவினைக் கூட்ட வேண்டுமென நானும் நண்பர்கள் சிலரும் நீண்டகாலமாகக் கருதியிருந்தோம். ஆனால் அதை நடைமுறைப்படுத்த முன்பு யதார்த்த நிகழ்வுகள் பயங்கரமாக முந்திக் கொண்டன. இந்தக் கட்டுரை ஒரு ஆய்வுக்கட்டுரையல்ல. வரலாற்று ரீதியில் அரசியல் பொருளாதார அடிப்படையில் ஆழ, அகல ஆராயப்பட வேண்டிய ஒரு விடயம் பற்றி அவசரத்தில், கடும் தாக்கத்திற்குள்ளான என் உள்ளுலக உந்தலால், மூன்றே நாட்களில் வேறு வேலைகளுக்கு மத்தியில் சுருக்கமான இக்கட்டுரையை எழுதி முடித்தேன்.

அந்த அவசரத்திற்கு என்ன காரணம்? இதை எழுதும் உடனடி உந்தலாக அமைந்தவை; நமது நாட்டின் சமீபத்திய இனவாதக் கொடுமைகளும் அநாகரிகங்களும், இரத்தக்களரி

நடைபெறும் போது இலங்கையின் ஜனாதிபதியும் அவரது மந்திரி பிரதானிகளும் வெளியிட்ட கருத்துக்களும் என்றே சொல்ல வேண்டும். சில வருடங்களாக என் மனதிற்குள்ளேயும், வெளியே நண்பர்கள் மத்தியிலும் விவாதித்து வந்த சிந்தனைகளை மேலும் நிரூபிப்பவையாக இவை அமைந்தன. ஆகவே சுருக்கமாகவும், இலகுவான விதத்திலும் என் கருத்துக்களை இப்போது நம் மக்கள் மத்தியில் முன்வைப்பது பரவலாக இடம்பெறும் விவாதங்களில் இடம் பிடிக்க உதவும் எனக் கருதினேன். பல்லாயிரம் மைல்களுக்கப்பால் வளர்ச்சி பெற்ற ஒரு நாட்டின் விவசாய மாற்றங்கள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருந்த என்னைத் திடீரெனக் குபுகுபுவென வந்த செய்திகள் பலமாகத் தாக்கின. கொடுமையும் கோரமும் இலங்கையை உலுப்பிய அந்த ஏழு நாட்களும் உலகப்பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் இந்திய சமுத்திரத்தின் நம் தீவுக்கு முன்பக்க முக்கியத்துவத்தைத் தேடிக் கொடுத்தன. ‘பூவுலகின் சொர்க்கம்’ என்று தன்னைத் தானே வெளிநாடுகளில் விளம்பரம் செய்து கொள்ளும் நம் தாய்நாட்டின் குரூர, மனிதத்துவமிழந்த யதார்த்ததைக் கண்டு உலகம் அதிர்ந்தது. ஆத்திரமடைந்தது, பாதுகாப்பற்ற தமிழர்கள் புகலிடம் தேடி ஓடினர். மனிதத்துவத்தை இழக்காத சிங்களச் சகோதரர்கள் தலை குனிந்தனர்.

இந்தச் செய்திகளின் தாக்கம் இக்கட்டுரைக்குத் தூண்டுகோலாக அமைந்தது. இருந்த இருப்பில் போதியளவு ஆதார நூல்கள் இல்லாத நிலையில் தான் எழுதினேன். இந்தக் குறைபாட்டினைப் பின்னர் நிவர்த்தி செய்வோம். ஒரு முக்கியமான விடயத்தை அழுத்திக் கூறவேண்டும். இங்கு தெரிவிக்கப்படும் கருத்துக்கள் சமீபத்திய தமிழர் எதிர்ப்புக் கொடுமைகளின் உணர்ச்சி வசத் தாக்கத்தின் வெளிப்பாடுகள் அல்ல. கடந்த சில ஆண்டுகளாக இந்தக் கருத்துக்களை

நான் ஆங்காங்கு முன்வைத்துள்ளேன். இவற்றிற்கு ஆதரவும் எதிர்ப்பும் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக என் சிங்கள நண்பர்களிடமிருந்து வெளிப்பட்டிருக்கின்றன. அவர்களின் விமர்சனங்களால் நான் பயனடைந்திருக்கிறேன். அதே நேரத்தில் அவர்களில் சிலர் தமது சிங்கள இனவாதச் சார்பினை மூடி மறைக்க மார்க்சிச, இடதுசாரிப் போர்வைகளைப் பயன்படுத்தி வருவதையும் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். இந்த விமர்சனத்தை விரும்பாத சிலர் என்னை ஒரு 'தமிழ்த் தேசியவாதி' என்று 'குற்றம் சாட்ட ' முற்பட்டனர். அவர்களின் கண்களுக்கு நான் எப்படிப் படுகிறேன் என்பது பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை.

சமீப காலங்களில் ஒரு சில இடதுசாரி ஆய்வாளர்கள் பெருந்தேசிய இனவாதம் பற்றி வரலாற்று ரீதியில் அணுக முற்பட்டுள்ளனர். கொழும்பில் இயங்கும் இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினர் (Social Scientists´Asssociation) இந்த வகையில் சில நல்ல முயற்சிகளை எடுத்துள்ளனர். இந்தச் சங்கத்தின் அங்கத்தவனாயிருப்பதால் நானும் இதன் முயற்சிகளால் பயன் பெற்றுள்ளேன். இனவாதம் ஒரு கருத்தமைவு (Ideology) வடிவத்தைப் பெறும் பரிணாமம் பற்றிய விவாதம் நமது நாட்டில் சமீபத்திலேயே ஆரம்பித்துள்ளது.

வர்க்கப்போராட்டத்திற்கும் இந்தக் கருத்தமைவுக்குமிடையிலான உறவு, இன வர்க்கம் பற்றிய உறவு, குறைவிருத்தி- இனவாதம் பற்றிய தொடர்பு போன்றவை இன்றைய விவாதங்களில் ஒரளவு இடத்தைப் பிடித்துள்ளன. இவை பற்றிய எனது கருத்துக்கள் உருப்பெறவும் இவ்விவாதங்கள் உதவியுள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களின் வரலாற்றசைவின் விளைவாகவே சிங்களப் பெருந்தேசிய இனவாதம்(Sinhala Great Nation Chauvinism) மிகவும் ஸ்தாபன மயமாக்கப்பட்ட கருத்தமைவாகிவிட்டது என்பது எனது முடிவான கருத்து. இந்த ஸ்தாபன மயமாக்கல் சமூகத்தின் சகல மட்டங்களையும் உள்ளடக்கியதாய் வளர்ந்து விட்டதால் சிங்களப் பெருந்தேசிய இனவாதம் நமது இன்றைய அரசியல் அமைப்பில் ஒரளவு சுயாதீனத்தையும் (Autonomy) பெற்றுள்ளது என்பது எனது முடிவாகும். பொருளாதாரத்துக்கும் கருத்தமைவு மட்டங்களுக்கும் இடையிலான உறவு ஒற்றை வழியானதல்ல. அது இரு வழியானது. பொருளாதாரக் காரணங்கள் அடிப்படையானவை என்பதை மறுக்க முடியாது. ஆனால் இவற்றுக்கு இன, மத அடிப்படையிலான வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டு அவை கருத்தமைவு வடிவம் பெற்று வெகுஜன சிந்தனைகளிலும், நம்பிக்கைகளிலும் ஒரு பலமான இடத்தைப் பெற்றுவிடும் போது இனவாதக் கருத்தமைப்பின் ஜனரஞ்சகமான ஆதிக்கத்திற்கு வேண்டிய சமூக உளவியல் ரீதியான அடித்தளம் உருவாகி விடுகிறது.

இலங்கையின் இனவாத அரசியலுக்கும் குறைவிருத்திப் பொருளாதாரத்திற்கும் நேரடித் தொடர்புண்டு. நமது சமூகத்தில் முதலாளிவர்க்கம்- தொழிலாளி வர்க்கம் என்ற இரு வர்க்கப் பிரிவுகளை மட்டுமே காண்பவர்கள், இனவாதம் முதலாளிவர்க்கம் தொழிலாளி வர்க்கத்தைப் பிரிக்கப் பயன்படுத்தும் கருத்தமைவெனக் கூறுவர். உண்மை தான். இனவாதம் தொழிலாளர் வர்க்கத்தைப் பிரிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அதேயளவு மறுக்க முடியாத இன்னொரு உண்மையைச் சில இடதுசாரி நண்பர்கள் போதியளவு கவனிப்பதாகத் தெரியவில்லை. இனவாதத்தின் வர்க்க அடிப்படை குட்டி முதலாளி வர்க்கமும் அதன் ஒரு அம்சமான நடுத்தர வர்க்கமும் என்பதைக் காணுதல் அவசியம்.

இதனால் தான் சிங்களப் பெருந்தேசிய இனவாதம் ஒரு பரந்த வெகுஜன அடித்தளத்தைக் கொண்டிருக்கிறது. இன்று சிறிய, மத்தியதர வர்த்தகர்கள், சிறிய பண்ட உற்பத்தியாளர்கள், மத்தியதரப் புத்திஜீவிகள், மாணவர்கள் மட்டுமின்றித் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும் பகுதியையும் சிங்களப் பெருந்தேசியவாதம் பலமாகப் பற்றியுள்ளது. இதற்கு உதாரணம் வேண்டுவோர் இலங்கையின் இன்றைய யதார்த்தத்தை அறியாதோர் மட்டுமே. இத்தகைய பரந்த அரசியல் ஆதரவை சிங்கள இனவாதக் கருத்தமைவு பெற்றிருப்பதால், தமிழ் மக்கள் மீதான ஒடுக்குதலுக்குப் பரவலான எதிர்ப்பு சிங்கள மக்கள் மத்தியில் இதுவரை தோன்ற முடியவில்லை. இனவாதக் கருத்தமைவின் செல்வாக்கை இலங்கையின் ஆளும் கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைகளிலும் நன்கு காண்கிறோம். இவை சிங்கள பௌத்தர்களுக்கு முதலிடம் கொடுப்பவை என்ற ஜன ரஞ்சக சுலோகத்தினால் சிங்கள மக்களைக் கவர்கின்றன. பொருளாதாரம் அடித்தளமாகவும் மற்றவை(அரசியல், மதம், கலாச்சாரம், சட்டத்துறை, நீதி பரிபாலனம் போன்றவை) மேல்மட்ட அமைப்புக்களாகவும் கருத்தப்படுவது சமூகத்தை விபரிக்கும் ஒரு பயனுள்ள முறை. இத்தகைய பகுப்பு, ஸ்தாபன ரீதியான தொழிற்பாட்டு வேறுபாடுகளை நன்கு புலப்படுத்த உதவுகிறது. இதையே மார்க்ஸ் செய்ய முற்பட்டார்.

ஆனால் இத்தகைய விவரணம் குறிப்பிட்ட ஒரு அமைப்பின் சமூக உறவுகளின் தன்மைகள், சந்தர்ப்பங்கள், காலங்களுக்கேற்ற முக்கியத்துவ வேறுபாடுகள் பற்றிய விளக்கத்தின் பிரதியீடாகாது. சமூக உறவுகளைப் பொதுவாக விளக்கும் சக்தியைப் பொருளாதாரத்தால் மட்டும் விளக்க முற்படுவது மார்க்சின் முழுமையான அரசியல் பொருளாதார அணுகுமுறையைக் கொச்சைப்படுத்துவதாகாதா?

எல்லாவற்றையுமே விளக்குவது பொருளாதாரம் என்றால் பொருளாதாரத்தைத் விளக்குவது எது? பொருளாதார அடித்தளம் என்பது என்ன மனித உறவுகளைத் தவிர்த்த சுய இயக்கம் கொண்ட ஒன்றா? பொருளாதார அடித்தளத்தை உற்பத்தி சக்திகள் பற்றிய அறிவில்லாமல் விளக்கவோ ஊகிக்கவோ முடியாதென்றால், அது சமூக உணர்வுடன் பின்னிப்பிணைந்ததாகாதா? இப்படிப் பார்க்கும் போது பொருளாதாரத்திற்கும் 'மற்றவை ' எனப்படுபனவற்றிற்கும் இடையே ஒரு சுவர் இருக்க முடியாது என்பது தெளிவாகிறது. ஒரு குறிப்பிட்ட சமூக, பொருளாதார அமைப்பு உருப்பெற்ற நிலையில் அதன் இயக்கத்தில் பொருளாதாரம் கருத்தமைவு மட்டங்களால் நேரடியாகப் பாதிக்கப்படும். பொருளாதாரக்கொள்கைகளை அன்றாட அரசியல் அதிகார நிர்வாகத்தையொட்டிய, தேர்தல்களையொட்டிய, காரணங்கள் நிர்ணயிக்கின்றன. இங்கு பல சந்தர்ப்பங்களில் முதலாளித்துவ வர்க்க நலன்களுக்கும் குட்டி முதலாளித்துவ ஆதிக்கம் மிகுந்த அரசியல் நடைமுறைக்குமிடையே முரண்பாடுகள் தோன்றுவது இயல்பு.

சிங்களப் பெருந்தேசிய இனவாதம் தனக்கென ஒரு தேசிய ரீதியான, மதரீதியான, பொருளாதார ரீதியான நியாயப்பாட்டினை வகுத்துக் கொண்டுள்ளது. இதற்கூடாக இது நமது சமூகத்தின் பொருளாதார, அரசியல், கலாச்சார மட்டங்களைக் கட்டுப்படுத்துகிறது. இந்தக் கருத்தமைவின் புறநிலை பூர்வமான செயற்பாடுகள் நமது சமூகத்தின் வர்க்க முரண்பாடுகளை ஊடுருவும் சக்தி பெற்றவை. இந்த ஊடுருவலுக்கூடாக இவை வர்க்கப்பிரிவினையை மறைத்து இனப்பிரச்சனையை நிதர்சனமாக்குகின்றன. சமூக உணர்வினை வர்க்க உணர்வு மட்டும் நிர்ணயிப்பதில்லை. இத்துடன் இனம், மதம், சாதி, நிறம், பால் போன்ற பல காரணிகளும் உண்டு. ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் சமூக

உணர்வில் எந்த அம்சம் அல்லது அலகு மேலோங்கி நிற்கிறது என்பதை அவர்களின் நடைமுறைக்கூடாக, சிந்தனை வெளிப்பாடுகளுக் கூடாகவே அவதானிக்க வேண்டும். தொழிலாளர்களிடம் வர்க்க உணர்வு மட்டுமே பிறக்க முடியும். அதுவும் முதலாளிவர்க்கத்தை எதிர்த்துப் போராடும் வர்க்க உணர்வு மட்டுமே என்று யாராவது கருதினால் அது மிகத் தவறானது. தொழிலாள வர்க்கத்தின் சமூக உணர்வில் அவர்களின் வர்க்க உணர்வுகளையும் விட வேறுவர்க்கத்தின் உணர்வுகள் - இன,மத,பிரதேச உணர்வுகள் - மேலோங்கி நிற்பது சாத்தியமானது என்பதை நாம் நடைமுறையில் காணவில்லையா? சமூக உணர்வு ஆதிக்கம் செலுத்தும் கருத்தமைவோடு நெருங்கிய தொடர்பு கொண்டது.

தன் பூரணத்துவமான வர்க்க மேலாதிக்கத்தை நிலைநாட்டக் கூடிய முதலாளித்துவ வர்க்கம் நமது நாட்டில் உருவாக்க முழுமை பெறவில்லை. இதைப் புரிந்து கொள்ள நமது குறைவிருத்தியின் வரலாற்றைப் பார்த்தல் அவசியம். குறைவிருத்தி எனப்படுவது அடிப்படையில் விரிவும் ஆழமும் தரவல்ல முதலாளித்துவ மாற்றமின்மையைக் குறிக்கிறது. குறைவிருத்தியின் இயக்கவிதிகள் முதலாளித்துவ வளர்ச்சியின் இயக்க விதிகளிலிருந்து வேறுபட்டவை. குறைவிருத்தி அமைப்புக்களில் பண்டமயமாக்கல்(Commoditization) பரவும் போது சிறிய பண்ட உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் முக்கியத்துவம் பெறுகின்றனர். இங்கு வர்த்தக மூலதனத்தின் தனியாதிக்கத்துக்கு உற்பத்தி கீழ்ப்படுத்தப்படுகிறது. இத்தகைய குறைவிருத்தி நிலையில் பாராளுமன்ற அரசியலும் சேர்ந்து விட்டால் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும் அதன் புத்திஜீவிகளினதும் பொப்பியூலிஸ்ட்(Populist) கருத்தமைவுக்குச் சாதகமான நிலைமைகளும் உருவாகின்றன. இன, மத, பிரதேச ரீதியான பொருளாதார

வரலாற்று வியாக்கியானங்கள் இந்தக் கருத்தமைவுக்கு அடிப்படையாகின்றன.

பின்தங்கிய பொருளாதார அமைப்புக்குள் அதுவும் குறிப்பாக குறைவிருத்திப் போக்கிலிருந்து விடுபடாத சமூகத்தில், குட்டிப்பூர்ஷ்வாத்தன்மை மிகுந்த கற்பனாவாதப் பொப்பியூலிஸ்ட் சிந்தனைகள் ஆதிக்கநிலை பெறுவது இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. குட்டிப்பூர்ஷ்வா புத்திஜீவிகள் கலாச்சார தேசியவாதத்திற்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுக்கிறார்கள். மறைந்த கால வரலாற்றினைத் தம் கற்பனை மிகுந்த பார்வையால் உருவாக்குகிறார்கள்.அங்கே பொற்காலமெனும் வண்ணக் கோட்டையைக் கட்டி எழுப்புகிறார்கள். அங்கே அமைதி,சுபீட்சம்,வீரம்,பெருமை மிகுந்த ஒரு சமூகத்தை சிருஷ்டிக்கிறார்கள். இது ஒரு பின்னோக்கிய ஊர்வலம். இதில் வெகுஜனங்களைப் பங்குபற்ற வைக்க வேண்டிய கவர்ச்சிகளை எல்லாம் கண்டு பிடிக்கிறார்கள். இந்தப் பின்னோக்கிய ஊர்வலம். மனித அந்தஸ்து இழந்து தாழ்த்தப்பட்ட நிலையில் உழலும் மக்களுக்கு ஒரு வித நம்பிக்கையையும், தற்காலிக கர்ப்பனார்த்த விமோசனத்தையும் கொடுக்கிறது. ஏகாதிபத்தியத்தின் காலடியில் மிதிபட்டுக் கிடக்கும் மக்கள் மனிதத்துவப் பெருமையை வேண்டி நிற்கிறார்கள். அவர்களுக்கு கடந்த ஒரு பொற்காலத்துடன் தம்மை இணைத்துக் கொள்வது ஒருவித விமோசனப் பிரமையைக் கொடுக்கிறது. அவர்களின் ஆக்கசக்தியில் ஒருவித நம்பிக்கையைக் கொடுக்கிறது.

ஆனால் ஊர்வலம் உண்மையில் விடுதலையை நோக்கிப் போகவில்லை. மனிதத்துவத்தின் மீட்சியை நோக்கிப் நகரவில்லை. முன்நோக்கிப் போகும் சக்தி அதற்குக் கிடையாது. யதார்த்தத்தில் அதன் நகர்ச்சி

பிரமைகளை மறுதலிக்கும் துன்பியல் நாடகமாகவே இருக்க முடியும். ஆனால் பிரமைகள் சில சந்தர்ப்பத்தில் கருத்தமைவுக்குள் அசாதாரண வலுவைப் பெறுகின்றன. குட்டிப்பூர்ஷ்வா வர்க்கத் தேவைகளுக்குள் அடைப்பட்டுக் கிடக்கும் கலாச்சாரத் தேசியவாதம் இத்தகையதே. சிங்கள பௌத்தவாதம் இத்தகைய கட்டுப்பாட்டுக்குள் தோன்றி இனவாதமாகப் பரிணமித்தது. சிங்கள பௌத்தத்தின் பெருமையெல்லாம் கடந்த 2500 வருடங்கள் பற்றியது. அதன் பார்வை பெருமைகளைத் தேடி பின்னே பின்னே பாய்கிறது. ஆரிய சிங்கள பௌத்தத்தின் 'தூய்மையான, அடிமைக் கலப்பற்ற இரத்தத்தை ' நிலைநாட்ட அது 'திராவிடப் படையெடுப்பாளர்களின் ' வழிவந்த தமிழர்களையும், வர்த்தகம் செய்து வந்த 'அழையா விருந்தினராய்' குடியேறிவிட்ட முஸ்லீம்களையும் வெளிவாரிப்படுத்துகிறது. ஆனால் இந்தப் பின்னோக்கிய தன்மை கொண்ட கருத்தமைவு முதலாளித்துவ வளர்ச்சி விதிகளுடன் முரண்படுகிறது. விடுதலைபற்றி, சுபீட்சம் பற்றி, பொற்காலம் பற்றிக் கூச்சல் போடும் இந்தக் கருத்தமைவு உண்மையில் குறைவிருத்தியை மாற்றாது அதைத் தொடர வைக்கிறது. பாராளுமன்றவாதத்தினாலும், குட்டிப்பூர்ஷ்வாத் தேவைகளினாலும் தொடரும் இந்தப் பொப்பியூலிசப் போக்குள்ள அரசியல், மூலதனத்தின் வீரியம் கொண்ட வளர்ச்சிக்கும் குவியலுக்கும் பங்கம் விளைவிக்கிறது. இங்குதான் அபிவிருத்தியின் முரண்பாடு வெளிப்படுகிறது. மூலதனத்தின் தர்க்க ரீதியான தேவைகள் இத்தகைய வளர்ச்சி விரோதக் கருத்தமைவை ஏற்க மறுக்கின்றன. ஆனால் இதை நடைமுறைப்படுத்தும் பூரண அரசியல் மேலாதிக்கத்தை முதலாளிவர்க்கம் தனியாகக் கொண்டிருக்கவில்லை.

முதலாளி வர்க்கம் குட்டிப்பூர்ஷ்வா கருத்தமைவின் உதவியின்றி அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியாத

நிலையில் உள்ளது. நமது பாராளுமன்ற அமைப்பில் இதுதான் நடைமுறை சார்ந்த உண்மை. பெரு மூலதனத்தின் உடைமையாளர்களின் இந்தச் சமரசம் அவர்களின் வர்க்க ரீதியான பூரண மேலாதிக்கத்தை உறுதியாக்க முடியாத ஒரு நிலைக்கே வழிவகுக்கிறது. ஆளும் கட்சியின் இரட்டைநிலைத் தன்மைகள் இதை நன்கு காட்டுகின்றன. இன்றைய அரசாங்கம் ஒருகால் சிங்கப்பூரையும், நவீனப்படுத்தும் மற்றைய நாடுகளையும் உதாரணம் காட்டும். மறுகால் துட்டு கெமுனுவின் சாம்பரைக் கண்டு பிடித்து அதன் சிங்கள பௌத்த தூய்மைக்கு விழாவெடுத்து நாடெல்லாம் ஊர்வலம் நடத்தும். இந்த நாடு எல்லாப் பிரஜைகளுக்கும் சொந்தம் என்று ஒரு தடவை சொல்லும் அதே மூச்சில் சிங்கள பௌத்தத்திற்குப் பிரத்தியேக இடம் என்று பத்துமுறை பிரகடனப்படுத்தும். திறமை, தகைமை, சமசந்தர்ப்பம் என்ற பூர்ஷ்வா ஜனநாயக விதிகளைப் பறைசாற்றும். மறுகணம் நாட்டின் 'சொந்தக் காரர்களான ' சிங்கள இனத்திற்கு- பூமி புத்திரர்களுக்கு- உரிய இடம் கொடுப்போம் என்று புத்தபிக்குகளுக்கு முன்னால் மண்டியிட்டு ஆசிர்வாதம் பெறும். இந்த முரண்பாடு நமது சமூகத்தின் அடிப்படையான வர்க்க முரண்பாடுகளின் மழுங்கடிப்பினையும், இனவாதிக்க மேலாதிக்க சுயாதீனத்தையும் பிரதிபலிக்கிறது.

1977ல் யு. என். பி. அமோக வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்தது. அப்போது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆளுமை முதிர்ச்சி, முதலாளித்துவ வர்க்க உணர்வு மிகுந்த தலைமை பற்றியெல்லாம் சில அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர். இதன்படி ஜயவர்த்தனாவே இலங்கையின் முதலாவது அனுபவ முதிர்ச்சியும், பூர்ஷ்வா வர்க்கப் பார்வைத்திறனும் கொண்ட தலைவர். இத்தகைய ஆளுமையைக் கொண்டவரெனக் கருதப்பட்ட ஜே.ஆர். அவருடைய வர்க்க உணர்வினால் மூலதனத்தின்

குவியலையும் வளர்ச்சியையும் மனதில் கொண்டு இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கு நடைமுறை சார்ந்த ஒரு தீர்வினைக் காண்பார் என்று பேசப்பட்டது. இதுவரை ஆதிக்கம் செலுத்தி வந்த குட்டிப்பூர்ஷ்வாக் கூட்டத்தின் இனவாத அரசியல், யு.என்.பி. முன் வைத்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளும், அது வளர்க்க விரும்பும் முதலாளித்துவ அமைப்புக்கும் பாதகமானதென்பதை உணர்ந்தே ஜே.ஆர் தன் தேர்தல் கொள்கைப் பிரகடனத்திலும் தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குவதாகக் கூறியுள்ளார் என்றும் வாதாடப்பட்டது. உலக வங்கியும், பல தேசக்கூட்டுத்தாபனங்களும் மற்றைய விதமான முதலீட்டாளரும் விரும்பும் அரசியல் ஸ்திரப்பாட்டினை ஏற்படுத்த தமிழர் பிரச்சனைக்கும் ஏதோ ஒருவழி பிறக்க வேண்டுமெனச் சில தமிழ் உயர் வர்க்கத்தினரும் அரசாங்க ஆதரவாளர்களும் அபிப்பிராயப்பட்டனர்.

மேலும் சில நியாயங்களும் வழங்கப்பட்டன. சிங்கப்பூரின் லீ குவான் யூ நடத்தும் அடக்குமுறை மூலதனத்தின் வளர்ச்சிக்கு உதவுவது. அது இனவாதம், பொப்பியூலிசம் போன்றவற்றைத் தூக்கிக் குப்பையில் வீசி விட்டு லாப நோக்குக்குப் பங்கம் விளைவிக்கும் எந்தவிதமான அரசியல் போக்குகளையும் அடுக்காது, ஜனநாயக சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வர்க்கப் போராட்டத்தை நசுக்கும் ஒரு விதமான சர்வாதிகாரம். இந்தச் சர்வாதிகாரம் இராணுவச் சர்வாதிகாரம் போலல்லாது மூலதனத்தின் நலன்களைக் கண்ணாகக் கொண்ட, ஊழல்களற்ற நவீன சர்வாதிகாரம் என்றும் இத்தகைய ஒரு 'போதனை ஒளி' மிகுந்த பாதையே ஜே.ஆரின் பாதை என்றும் சிலர் கூறினர். எனது தமிழ் நண்பரொருவர் 'ஜே.ஆர் இலங்கையின் முதலாவது பூர்ஷ்வா இராஜதந்திரி ' எனக் கூறினார்.

ஜே.ஆர். இத்தகைய ஆளுமையைக் கொண்டிருந்தாரா என்பதைவிட அவரின் 1977 பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த இத்தகைய தன்மைகளைக் கொண்ட தலைமை ஒன்று முழு முதற் தேவை என்று கூறுவதே உண்மையில் பொருத்தமானது. யு.என்.பி. ஆட்சிக்கு வந்து சில வாரங்களிலேயே ஜே.ஆர். பற்றிய இந்த மதிப்பீடு அளவுக்கதிகமான தென்பதையும் அது இலங்கை அரசியலின் சில அடிப்படையான நடைமுறை விதிகளை, போக்குகளை நிராகரித்த மதிப்பீடு என்பதையும் பல சம்பவங்கள் நிரூபித்தன. 1977 எட்டாம் மாதத்தில் ஏற்பட்ட தமிழர் எதிர்ப்பு வன்செயல்களை மேலும் மோசமாக்கும் வகையில் அமைந்தது ஜயவர்த்தனாவின் 'யுத்தமா, சமாதானமா' என்ற வானொலிப் பேச்சு. அவரும் ஒரு சராசரிப் பாராளுமன்ற அரசியல்வாதிதான் என்பது தெளிவாகியது. அவருடைய கடந்தகால இனவாத அரசியலும் எல்லோருக்கும் நினைவு வந்தது.

சமீபத்திய அக்கிரமங்கள் உச்சகட்டத்தில் இருந்தபோது ஜனாதிபதி ஜயவர்த்தனாவும் அவருடைய மந்திரிமாரும் பேசிய பேச்சுக்களும் இதையே மேலும் நிரூபித்தன. வரலாற்று ரீதியில் இவர்களும் இவர்களின் ஆசனங்களில் முன்பு அமர்ந்திருந்தோரும் உருவாக்கிய இனவாதம் இப்போது இவர்களைப் பணிக்கும் அந்தஸ்தைப் பெற்றுவிட்டது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்குத் தலைவணங்காது, அதைத் திருப்திப்படுத்தாது ஆட்சியில் யாருமே இருக்க முடியாது என்ற ஒரு நிலை ஏற்பட்டு விட்டது போல் தெரிகிறது. இந்த நிலை நான் குறிப்பிடும் சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் ஒரு வித சுயாதீனத்தின் வெளிப்பாடாகும். ஜயவர்த்தனாவின் ஆறாவது திருத்தமும் அதற்கு எதிர்க்கட்சியிலுள்ள சுதந்திரக்கட்சியினர், புதிதாகப் பாராளுமன்றம் சென்ற மக்கள் ஐக்கிய முன்னணி என்ற

கட்சியின் தினேஷ் குணவர்த்தனா போன்றோர் வழங்கிய ஆதரவும் இதை மேலும் விளக்குகிறது. ஆறாவது திருத்தம் பற்றி ஜேயவர்த்தனா என்ன கூறினார்? சிங்கள மக்களின் 'இயற்கையான விருப்பினைத்' திருப்திப்படுத்தவே பிரிவினைக் கோரிக்கையைத் தடைசெய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டது எனக் கூறினார். ஆளும் கட்சியும் சிங்கள எதிர்கட்சிகளும் முதல்தடவை இப்படியாக ஒன்றுபட்டுள்ளன. காரணம் 'சிங்கள மக்களின் இயற்கையான விருப்பு'.

சிங்கள மக்களின் இந்த ' விருப்பு' எப்படித்தான் இயற்கையானதோ? தமிழர் எதிர்ப்பு உணர்வுகளும் செயல்களும் எப்படி ' இயற்கையானவை ' என்ற கேள்வி கேட்க முடியாத நிலையை அடைந்தன? சிந்தனைகள், விருப்புக்கள், வெறுப்புக்கள் வானத்திலிருந்து விழுபவை அல்ல சமூக வாழ்விற் கூடாகவே தோன்றுகின்றன. இங்குதான் பிரச்சாரமும் கருத்தமைவும் முக்கியத்துவம் அடைகின்றன. ஜயவர்த்தனா சிங்கள மக்களின் பிரிவினைக்கெதிரான 'இயற்கையான' விருப்பினை மிகத்துரிதமாகத் திருப்திப்படுத்த முனைந்தார். ஆனால் அதே ஜனாதிபதியினால் சிங்கள மக்களின் மிகவும் அடிப்படையான பல ' இயற்கை' விருப்புக்களை ஏன் திருப்திப்படுத்த முடியவில்லை? இந்த விருப்புக்கள் எல்லாமே பொருளாதார ரீதியானவை. தொழில் வாய்ப்பு,சம்பள உயர்வு,விலையிறக்கம்,வீட்டுவசதி,சுகாதாரவசதி இப்படியே பல. இந்த இயற்கையான தேவைகளைப் பூர்த்தி செய்வதாக வாக்குறுதி கொடுத்தே ஜயவர்த்தனா ஆட்சிக்கு வந்தார். 1977ல் சிங்கள மக்கள் கேட்டவை இவைதான். இந்த இயற்கையான விருப்புக்கள் பெரும்பான்மையான இலங்கையரைப் பொறுத்தவரை நிறைவேற்றப் படவில்லை. வாக்குறுதிகள் காற்றிலே பறந்து விட்டன. இதை மூடி மறைக்க ஜயவர்த்தனா சிங்கள மக்களின் வேறொரு 'விருப்பினைக்' கண்டு பிடித்தார்.

ஜனாதிபதியின் அரசியல் அகராதியில் சிறுபான்மையினருக்கு இயற்கையான விருப்புக்கள் கிடையா.

சமூகத்தைப் பற்றி ஒவ்வொருவரும் கொண்டுள்ள விளக்கம் அவரவர் பார்வையைப் பொறுத்தது. இனவாதக் கருத்தமைவின் ஆதிக்கத்துக்குள்ளானவர்கள் அந்தப் பட்டகத்துக் கூடாகவே சமூகத்தைப் பார்க்கிறார்கள். இன்று இனவாதப்பார்வை வர்க்கப்பார்வையை இடம் பெயர்த்துக் கீழே தள்ளி விட்டுள்ளது. தொழிலாளவர்க்கத்திடமும் இனவாதத்தின் செல்வாக்கே அதிகம். இனம், மதத்தையும்விட மிஞ்சிய ஒரு உணர்வாக வர்க்க உணர்வு சமீப காலங்களில் தொழிலாளர் அமைப்புக்களுக்கூடாக வெளிப்படவில்லை. வர்க்க ரீதியில் தொழிலாளர்கள் ஒன்றே. ஆனால் அவர்கள் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள் என்றும் ஆண், பெண் என்றும் பலவாறாகப் பிரிந்துள்ளார்கள். இந்தப் பிரிவுகள் யதார்த்தபூர்வமானவை. இந்தப் பிரிவுகளில், குறிப்பாக, இன்று இனப்பிரிவுகளில், அவர்கள் மற்றய வர்க்கத்தினருடன் இலம்பனமாய் (Vertical ஆக) இணைக்கப்படுகின்றனர். வர்க்க எல்லைகளையும் தாண்டிய ஒருங்கிணைப்பினைக் கருத்தமைவு வழங்குகிறது. இதுவே சமூக உணர்வின் மேலோங்கிய அம்சமாகவும் விளங்குகிறது.

ஆரம்பத்தில் இனவாதம் தொழிலாள வர்க்கஸ்தாபனங்களை இடதுசாரிகளினதும், அவர்களுக்கு முன் A.E குண சிங்கா போன்ற தொழிற்சங்கத் தலைவர்களினதும் சந்தர்ப்பவாத அரசியலுக்கூடாகப் பற்றிக் கொண்டது. பின்னர் கலாச்சார,கல்வி ஸ்தாபனங்களுக்கூடாகப் பரவிய இனவாத சிந்தனைகள் தொழிலாளர்களின் சமூக உணர்வுகளையும் உருப்படுத்தத் தொடங்கின. 1958ல் சிங்களத் தொழிலாளர்கள் தமிழ்த் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க

வேலைத்தலங்களில் சமசமாஜ, கொம்யூனிஸ்ட் கட்சிகளின் உதவியுடன் விசேட குழுக்கள் அமைத்தனர். ஆனால் 1983ல் ஆளும் கட்சியின் மந்திரியார் ஒருவர் தொழிற்சங்கங்களை தனது அனாச்சாரங்களுக்குப் பயன்படுத்தியுள்ளார் என இலங்கையில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் கருதப்படுகிறது. 25 வருடங்களுக்குள் எவ்வளவு மாற்றம். அன்று இடதுசாரி இயக்கத்தின் இனவாத எதிர்ப்புத் தலைமையின் செல்வாக்கினால் வர்க்க உணர்வு இரு இனத் தொழிலாளர்களையும் பிணைக்கும் சக்தியைக் கொண்டிருந்தது. இன்று இனவாதம் அவர்களைப் பிரித்து எதிரிகளாக்கிவிட்டது.

இனவாதத்தைப் பயன்படுத்திய ஜயவர்த்தனாவின் வர்க்க உணர்வும் ஒரு விடயத்தில் பளிச்சிட்டது. சமீபத்திய வன்செயல்களுக்கு சில இடதுசாரிகள் தான் காரணம் என்று கூறிய அவர் சோஷசலிச நாடுகளையும் குற்றஞ்சாட்டினார். சோவியத்யூனியன், ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு போன்ற நாடுகள் பின்னணியில் என்ற பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இது அர்த்தமற்றது என்பதை இலங்கை அரசியலை நன்கறிந்தவர்கள் நம்புவர். ஆனால் இந்தப் பிரச்சாரம் வாஷிங்டனைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் நடத்தப்பட்டது என்பதே உண்மை. ஜனாதிபதி அத்துடன் நின்றுவிடவில்லை. வடபகுதி ‘பயங்கரவாதி’களுக்கும் தென்பகுதி தீவிர இடதுசாரிகளுக்குமிடையே உறவு உண்டு என்றும் தெரிவித்தார். இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. ஆனால் இத்தகைய ஓர் வர்க்க அடிப்படையிலான ஒருமைப்பாடு தர்க்க ரீதியானது, சாத்தியமானது என்பது ஜயவர்த்தனாவின் வர்க்க உணர்வுக்குப் புலப்படத் தவறவில்லை. எதிர்காலத்தின் காட்சியை அவரால் உருவகிக்க முடிகிறது.

ஆனால் சிங்கள இனவாதக் கருத்தமைவு அமைப்புக்களுக்கு எதிரான போராட்டம் சிங்கள ஜனநாயகவாதிகள்,புரட்சிவாதிகள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு பலம் பெற்றுப் பரவாதவரை ஜனாதிபதியின் அந்தப் பயங்கரக் கனவு நனவாகிப் பொதுமக்களுக்குப் பலனிளிப்பது கஷ்டம். சிறுபான்மையினரை வேண்டாதவராய், நசுக்கப்பட வேண்டியவராக காட்டும் ஒரு கருத்தமைவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடாதவரை சிங்கள் மக்கள் சுதந்திரமடைந்த மனிதர்களாக உலவ முடியாது.

மற்றைய இலங்கை இனத்தவரின், அதாவது தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமை அந்தஸ்தினைத் தாழ்த்தி சிங்கள பௌத்தத்திற்குக் கொடுக்கப்படும் பொய்யும் புரட்டும் மிகுந்த வரலாற்று முக்கியத்துவத்தின் நிராகரணத்தை உருவாக்க வேண்டும். வரலாறு திருப்பி உண்மைக்கமைந்த மக்கள் வரலாறாக எழுதப்பட வேண்டும். இது நடைபெற்றால் இன்று விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட புனிதக் கோபுரங்களில் அமர்த்தப்பட்டிருக்கும் தேசிய வீரர்கள் கீழே இறக்கப்படுவார்கள். மக்களால் மீள் மதிப்பீடு செய்யப்படுவார்கள். இத்தகைய உண்மையின் தேடல் மிகுந்த காலம் பிறக்கக் கடினமான உழைப்பு வேண்டும். சிங்கள இனத்தின் புத்திஜீவிகள் இத்தகைய உழைப்பாளர்களாக இயங்க வேண்டும். சிங்கள இனவாதத்தின் நிராகரணம் அந்த இனத்தின் மக்களிடமிருந்துதான் தோன்ற வேண்டும். இதற்கான விதைகள் ஏற்கனவே மண்ணுக்குள் இருக்கின்றன. அவற்றின் முகிழ்ப்புக்கும் வளர்ச்சிக்கும் புரட்சிகர ஸ்தாபன ரீதியான, தொடர்ச்சியான செயற்பாடுகள் வேண்டும்.

இங்கு நான் பெரும்பான்மை இனவாதம் பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்கள் சிறுபான்மையின் இனவாதத்திற்கும்

பொருந்தும். தமிழர்களும் தம் பின்நோக்கிய ஊர்வலங்களைப் பெருமையுடன் நடத்துகிறார்கள். இது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பாழடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நமது இளம் தலைமுறைகள் மத்தியில் முன்நோக்கிய இலட்சியப் பார்வையே பலம் பெறுகிறது. அவர்களின் இந்த இலட்சியப்பார்வை வரவேற்கப்பட வேண்டியது. எதிர்கால விடுதலை நோக்குடன் நமக்கு ஓர் வரலாற்று ரீதியான ஜனநாயகமான தனித்துவத்தை அவர்கள் தேடுகிறார்கள். இந்தத் தேடலின் நடைமுறையின் சில அம்சங்கள் சிங்களப் பகுதியில் இயங்கும் புரட்சிவாதிகளையும் ஆகர்ஷித்துள்ளன. இதுவே இலங்கை ஜனாதிபதியின் சிம்மசொப்பனம். இந்த சிம்ம சொப்பனம் இயக்க பூர்வமாக நிஜமாவது இலங்கை மக்களின் பூரண விடுதலைக்கு அவசியம். தமிழ்தேசியவாதம், தமிழ் இனவாதம், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பற்றிப் பிறிதொரு கட்டுரையில் எழுத எண்ணியுள்ளேன். இதனால் இவை பற்றி இங்கு தொடப்படவில்லை. நமது நாவலர்களைப், பொன்னம்பலங்களை, செல்வநாயகம்களை மீள் மதிப்பீடு செய்தல் அவசியம். இந்தப் போக்கு நம் இளம்தலைமுறை மத்தியில் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. இதை நெறிப்படுத்தி வெகுஜன இயக்கத்தோடு இணைப்பது இன்றைய தேவை. இவை பற்றிய கருத்துப்பரிமாறல்கள் ஜனநாயக ரீதியில் ஊக்குவிக்கப்பட வேண்டும். உரிமைப்போராட்டம் என்ற நடைமுறையின் நிர்ப்பந்தத்தால் ஏற்படும் இத்தகைய விமர்சனப் போக்கு நிச்சயம் பெரும்பான்மை இனத்தின் முற்போக்காளரையும் ஆகர்ஷிக்கும். இவை பற்றி அடுத்த கட்டுரையில் எனக்குப் படும் கருத்துக்களை முன்வைப்பேன்.

இந்த முன்னுரையை முடிப்பதற்கு முன் இந்தக் கட்டுரையில் பாவித்துள்ள சொற்பிரயோகங்கள் சிலபற்றிய ஒரு குறிப்பு அவசியம். Ideology என்ற ஆங்கிலப் பதத்திற்குக் கருத்தமைவு எனும் சொல்லைத் தமிழில் உருவாக்கியுள்ளேன். வழக்கிலிருக்கும் தமிழ்ப்பதங்களை விட இது Ideology என்ற பிரயோகத்தின் நடைமுறைப் பயன்பாடு சார்ந்த கருத்தினைத் தருகிறது என்பது எனது அபிப்பிராயம். கோட்பாட்டு ரீதியில் கருத்தமைவு பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. மார்க்ஸ்- ஏங்கல்ஸ் கருத்தமைவுக்குக் கொடுத்த கோட்பாட்டு ரீதியான விளக்கத்திற்கும் லெனின் கையாண்ட விளக்கத்திற்குமிடையே வேறுபாடுகள் உண்டு. மார்க்சுக்கும் ஏங்கல்சுக்குமிடையேயுள்ள சில வேறுபாடுகளையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். லெனின், கிராம்சி (Gramsci) அல்தூசர் (Althusser)போன்றோரின் விளக்கங்களையே இப்போது மார்க்சிச ஆய்வாளர்கள் பயன்படுத்துகிறார்கள்.

மார்கஸ் கருத்தமைவை யதார்த்தத்தின் தப்பான பிரதிபலிப்பென்ற கருத்திலேயே பயன்படுத்தி உள்ளார். லெனின் கருத்தமைவை அதன் வர்க்க நிலைப்பாட்டைப் பொறுத்து சரியானது- பிழையானது (புரட்சிகரமானது- பிற்போக்கானது ) என வகுக்ககூடிய ஒரு முறையை அறிமுகம் செய்தார். இதுவே தொழிலாள வர்க்க இயக்கங்கள் பயன்படுத்தும் முறையாகும். கிராம்சி இதே முறையை மேலும் தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து விரிவாக்கிப் புதுமைப்படுத்தினார். கிராம்சி கருத்தமைவுக்குச் சமூக மாற்றத்தில் ஓர் பிரதான பங்கினைக் கொடுத்தார். இந்த வகையில் அவர் லெனினுடைய கருத்தையே பின்பற்றினார்.

முதலாளித்துவக் கருத்தமைவு, மதக்கருத்தமைவு பிற்போக்கானவை. பட்டாளிவர்க்கப் புரட்சிகரக் கருத்தமைவு முற்போக்கானது. இதுவே லெனினுடைய நிலைப்பாடு. கிராம்சியின் எழுத்துக்களில் கருத்தமைவு மிகவும் விரிவாக, ஆழமாக ஆராயப்படுகிறது. தொழிலாள வர்க்கக் கட்சியின் கருத்தமைவு மேலாதிக்கம் (Hegemony) பெறத் தொழிலாள வர்க்கக் கட்சியின் புத்திஜீவிகள் தீவிரமாக உழைக்க வேண்டும் என கிராம்சி வாதாடினார். லெனினும், கிராம்சியும் கருத்தமைவு பற்றிய தெளிவான விளக்கங்களைக் கொண்டிருந்தனர். இவை மார்க்சின் கருத்திலிருந்து வேறுபாட்டவை. அல்தூசர் கருத்தமைவு பற்றி மிகவும் தத்துவார்த்த ரீதியான விளக்கங்களைக் கொடுத்தார். ஆயினும் அவர் லெனினுடைய கருத்தையும், மார்க்சுடைய கருத்தையும் சேர்த்தே கையாண்டுள்ளார். இதனால் அல்தூசரின் கோட்பாட்டில் இரட்டைக் கருத்துத் தன்மை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அல்தூசரைப் பின்பற்றுவோர் மத்தியில் கருத்தமைவின் வியாக்கியானம் பற்றி முரண்பாடுகள் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இந்தக் கட்டுரையில் இத்தகைய சர்ச்சைகளைத் தவிர்த்துள்ளேன். இங்கு சிங்களப் பெருந்தேசிய இனவாதம் என்ற கருத்தமைவு பற்றி மட்டுமே பேசப்படுவதால் இதை யதார்த்தத்தின் முழுமையைக் குறிப்பாக வர்க்க வேர்களைப் பிரதிபலிக்காது. குறிப்பிட்ட அரசியல் நோக்குடன் இன ரீதியான வியாக்கியானங்களை முன்வைத்து உருவாக்கப்பட்ட ஒரு கருத்தமைவாகக் கொண்டுள்ளேன்.

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள இனவாதம் Chauvinism என்ற ஆங்கிலக் கருத்தைக் கொண்டுள்ளது. Nation என்பதை தேசிய இனமாகவும், Ethnic Group என்பதை இனமாகவும் கருதியுள்ளேன். Race என்ற கருத்துப்பட ஓரிரு

சந்தர்ப்பங்களில் இனம் என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பங்களில் இனம் (race) என அடைப்புக்குறிக்குள் ஆங்கிலச் சொல் இடம் பெறுகிறது.

இந்தக் கட்டுரை ஒரு ஆரம்ப முயற்சி. ஆதாரங்கள் கைவசமில்லாமையால் சில திகதிகளை மிகவும் குறிப்பாகத் தரமுடியவில்லை. இது ஒரு குறைபாடு. எனக்குத் தெரியாமல் ஏதாவது பிழைகளும் புகுந்திருக்கலாம். இவற்றிற்காக மன்னிப்புக் கேட்கிறேன். இந்தக் கட்டுரை இப்போது நமது மக்கள் மத்தியில் தீவிரமாக இடம்பெறும் சர்ச்சைகளுக்கு ஏதாவது வகையில் உதவ வேண்டும் என்பதே என் தாழ்மையான விருப்பம்.

சமுத்திரன்
August 1983
Tokyo, Japan

# பிற்குறிப்பு (April 2017)

Ideology என்ற ஆங்கிலச்சொல்லுக்கு ‘கருத்தமைவு’ என்ற சொல்லை நானே உருவாக்கி இந்தக் கட்டுரையில் பயன்படுத்தியுள்ளேன். ஆனால் பின்னர் அதைவிட கருத்தியல் எனும் சொல்லே பொருத்தமானது என்பதை அறிந்தேன்.

# சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் அடிப்படைகளும் மேலாதிக்கமும்

சமீபத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் ஓர் திடீர் குமுறல் அல்ல என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அப்படியென்றால் இந்த வன்செயல்களுக்குப் பின்னால் ஒரு அரசியல் வரலாறு இருக்க வேண்டும். அவற்றிற்குச் சில சமூகப் பொருளாதார அடிப்படைகள் இருக்க வேண்டும். இலங்கை சுதந்திரமடைந்த பின் இனவாத அரசியல் தொடர்ச்சியான ஆதிக்கம் செலுத்தவும் தொழிலாளர் வர்க்க இயக்கங்கள் வலுவிழந்து போகவும் சில ஸ்தாபன ரீதியான கராணிகள் பலமடைந்திருக்க வேண்டும். இவை எப்படி நடைமுறையில் உருப்பெற்று வளர்ந்து சிங்களப் பெருந்தேசிய இனவாதத்திற்கு மேலாதிக்க அந்தஸ்தை வழங்கின என்ற கேள்வியின் சில அம்சங்களை விளக்க முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைய இலங்கை அரசியல் அரங்கின் நடுத்தளத்தை ஆக்கிரமித்து நிற்கும் ஒரு முக்கிய கருத்தமைவுச் சக்தியாக சிங்களப் பெருந்தேசிய இனவாதம் இயங்குகிறது. இன்றைய கருத்தமைவு வடிவத்தில் நாம் காணும் சிங்கள பௌத்த இனவாதத்தின் ஆரம்பமும் விருத்தியும் பற்றிய கதை இலங்கை வரலாற்றின் கடந்த நூற்றாண்டுக் காலத்துடன்

பின்னிப்பிணைந்த கதையாகும். முதலில் இத்தகைய பெருந் தேசிய இனவாதத்திற்கும் இன அடிப்படையில் பொதுவாக எழும் தப்பெண்ணங்கள் (prejudices) அற்ப குரோதங்கள் போன்றவற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுதல் அவசியம். பெருந்தேசிய இனவாதம் ஸ்தாபன உருப்பெற்ற கருத்தமைவு. இது இன அடிப்படையில் (மொழி,மதம்,பிரதேசம்) அமைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட இனத்தவரை மற்ற இனத்தவரையும் விட உயர்ந்தவர்களாக, அந்தப் பூமியின் உண்மையான, உரிமை மிகுந்த மைந்தர்களாகக் காட்டி அதன் அடிப்படையில் மற்ற இனத்தவரை ஒடுக்குதலை நியாயப்படுத்தும் ஒரு கருத்தமைவு. இத்தகைய பெருந்தேசிய இனவாதம் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சியில் வேறு இனத்தவர் நசுக்கப்படுவது, இம்சைக்குள்ளாவது அனைத்துமே வழமையான சட்டங்களின் கண்களுக்குப் படுவதில்லை. அதற்கு மாறாகப் பூமி புத்திரர்களின் உரிமைகள், அபிலாஷைகள், முன்னைய இழப்புக்களை நிவிர்த்தி செய்து பெரும்பான்மை இனத்திற்கு இதுவரை மறுக்கப்பட்ட நீதியை நிலைநாட்டல் என்ற போர்வையில் இனப்பாகுபாட்டினை நியாயப்படுத்தும் சட்டங்களும, புதுவழக்குகளும் புகுத்தப்படும்.

இத்தகைய அரசியல் தன்மை கொண்ட இனவாதத்திற்கும் சாதாரண மக்கள் மத்தியில் நிலவும் இனம்,மதம்,பிரதேசம் சார்ந்த தப்பெண்ணங்கள்,சந்தேக உணர்வுகள் போன்றவைக்கு மிடையே முக்கியமான வேறுபாடுகள் இருப்பது வெளிப்படை. சிங்கள,தமிழ் மக்களிடையே பல தப்பெண்ணங்கள் பரவலாகப் பல்லாண்டு காலமாக இருந்து வரலாம். ஆயினும் இவை இனவாதம் என்ற தன்மை பெறும் கருத்துநிலை பெற்றவையாக எப்போதும் இருக்கவில்லை. சிங்கள, தமிழ் இனவாதங்கள் வரலாற்று ரீதியில் சமீபத்திய வெளிப்பாடுகளே. ஆயினும் இனவாதத்தின் பயங்கரமான

பரவலும் சிந்தனை ஆதிக்கமும் இலங்கையின் முழு வரலாற்றையுமே தொடர்ச்சியான சிங்களவர்- தமிழர் மோதல்களின் வரலாறாகக் காட்டுவதில் பெரும் வெற்றி பெற்றுள்ளன.

## சிங்கள இனவாதத்தின் தோற்றமும் வேர்களும்

இலங்கை ஓர் பிளவுண்ட சமூகமாகக் காட்சியளிக்கிறது. இந்தப் பிளவு சிங்களவர்- தமிழர் என்ற அடிப்படையில் ஆழப் பதிந்துள்ளது. இரு மக்கள் மத்தியிலும் வெளிப்படையாகத் தெரிவது வெறும் இன உணர்வு மட்டுமின்றி மற்றய இனம் மீதான வெறுப்பும் கலந்த உணர்வாகும். இந்த உணர்வே அவர்களின் சமூக உணர்வின் ஆதிக்கம் கொண்ட அலகாக விளங்குகிறது. வர்க்க எல்லைகளையும் தாண்டிய உணர்வாக இது இலங்கை அரசியலை சிங்கள- தமிழ் அரசியலாக மாற்றியுள்ளது. இது வெறும் மாயை (illusion) அல்ல. இந்த உணர்வு ஒரு போலி உணர்வென்று (false consciousness) கூறித் தப்பிவிடவும் முடியாது. அது யதார்த்தத்தின் வெளிப்படையான ஒரு அம்சம். நடைமுறையின் வெளிப்பாடு, வர்க்கம் என்பது எவ்வளவு யதார்த்தமோ அதேபோல் இனம் என்பதும் யதார்த்தமே. இவை இரண்டுக்குமிடையே உள்ள உறவின் மாறுபடும் இயங்கியல் தன்மையை இன்றைய இலங்கை அரசியலும் சமுக வாழ்வும் காட்டுகின்றன. இலங்கையரின் மனதில் இன உணர்வு மேலெழுந்து நிற்பது அவர்கள் யதார்த்தம் பற்றிக் கொண்டுள்ள திரிபுபட்ட பார்வையினாலா( distorted perception) அல்லது யாதார்த்தமே திரிபுபட்டுக் கிடப்பதாலா? அல்லது இது ஒரு இரட்டைத் திரிபா?

எனது அபிப்பிராயத்தில் இனவாதம் ஒரு கற்பனா உலகில் அமைந்த போலிவாதம் அல்ல. அது புறநிலையில் வேரூன்றி உள்ளது. அதற்கு வர்க்க நோக்கங்கள் உண்டு.

அது புற உலகைத் திரித்து வழி நடத்தும் சக்தி கொண்டது. பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்க வல்லது. சிங்களப் பெருந்தேசிய இனவாதம் இத்தகைய ஒரு நடைமுறை சார்ந்த கருத்தமைவாகும். இதன் தோற்றத்திற்கான பகைப்புலம் 19 ம் நூற்றாண்டின் காலனித்துவ அரசியல் பொருளாதார அமைப்பு. இதன் அடிப்படை சிங்களக் குட்டி முதலாளி வர்க்கமும் அதன் ஒரு அம்சமான நடுத்தர வர்க்க புத்திஜீவிகளும். குறைவிருத்தி வரலாற்றிலிருந்து விடுபடாத நமது நாட்டில் இந்த வர்க்க அடிப்படையே தொடர்ந்தும் பெருந்தேசிய இனவாத த்திற்கு மாபெரும் உந்துகோலாக இன்று வரை இருந்து வருகிறது.

வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) மாதிரி என்ற போர்வையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நமக்கு ஒரு அரசியல் அமைப்பினை விட்டுச் சென்றது. இனவாத அரசியல் தலைதூக்கி வளரச் சாதகமான ஸ்தாபன அடிப்படைகள் பல இந்த அமைப்பின் உள்ளார்ந்த அம்சங்களாய்ப் புகுத்தப்பட்டிருந்தன. இது ஒரு சதித்திட்டத்தின் விளைவு என்று சொல்ல முடியாது. இத்தகைய அரசியலுக்குச் சாதகமான முக்கிய அடிப்படைகள் இலங்கையின் குறைவிருத்திப் பொருளாதார அமைப்பில் நிறைய இருந்தன. விரிவும் ஆழமும் பெற வல்லமையற்ற ஒரு குறுகிய பொருளாதார அடித்தளமும் அதன் இனம் பிரதேசம் சார்ந்த மாறுபட்ட தாக்கங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. குறைவிருத்திப் பொருளாதாரத்துடன் பாராளுமன்ற அமைப்பும் இணையும் போது குட்டி முதலாளி வர்க்க அரசியல் முதன்மை பெற வாய்ப்புக்கள் பிறக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் இனமத வேறுபாடுகளும் சேர்ந்து விட்டால் இனவாதம் தலைதூக்கும். இவற்றைச் சற்று விபரமாகப் பார்ப்போம்.

**1. காலனித்துவ எதிர்ப்பும் சிங்கள பௌத்தவாதமும்.**

காலனித்துவ எதிர்ப்பு பொதுமக்கள் மத்தியில் கலாச்சார விழிப்புணர்ச்சியாக முகிழ்ப்பதைப் பல நாடுகளின் வரலாறுகளும் காட்டுகின்றன. ஆயினும் கலாச்சார மட்டத்தில் தோன்றும் எதிர்ப்பு அரசியல் மட்டத்திற்கு வளர்ந்து சகல எதிர்ப்புச் சக்திகளையும் உள்ளடக்கிய புரட்சிகரப் போராட்டமாக மாறுவதற்கு வேறு பல தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதையும் தேசிய விடுதலை இயக்க வரலாறுகள் காட்டுகின்றன. இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இயங்கிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்குகளில் முக்கியமானவை கலாச்சார மறுமலர்ச்சிவாதத்திற்குள் கட்டுப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் இன மத வேறுபாடுகளை முக்கியப்படுத்தாது முழுநாடும் சார்ந்த இயக்கத்தை அமைத்தவர்களும் காலப்போக்கில் சிங்கள பௌத்தவாதத்தின் தாக்கத்துக்குள்ளாயினர்.

சமீபத்திய கட்டுரையொன்றில் கலாநிதி குமாரி ஜயவர்த்தனா (1983) குறிப்பிட்டிருப்பதைப் போல் அடக்கப்பட்ட மக்களின் கலாச்சார ஆளுமையை உறுதிப்படுத்தும் இயக்கமாக ஆரம்பித்த இலங்கை ஏகாதிபத்திய எதிர்ப்பு,

> ...'முழுமையான தேசியவாதமாகவோ அல்லது விடுதலை இயக்கமாகவோ மலராது பெரும்பான்மை இனத்தினால் கலாச்சார மதக் கட்டுக் கோப்புக்குள் அடக்கப்பட்டது. பின்னர் இது சிறுபான்மையினருக்கு எதிரான வகுப்புவாதமாக (Communalism) சீரழிந்தது'[1] .

மேலும் குமாரி ஜயவர்த்தனா குறிப்பிடுவது போல் இந்த

1 Kumari Jayawardena, Aspects of Class and Ethnic Consciousness in Sri Lanka, Development and Change, Vol. 14,1983: 9

மாற்றப் போக்கினைப் புரிந்து கொள்ளல், பின்னைய சிங்கள இனவாதத்தினைப் புரிந்து கொள்வதற்கு அவசியமாகும். ஏன் முழு மக்களும் சார்ந்த இயக்கத்தில் நம்பிக்கை வைத்திருந்த பொன்னம்பலம் அருணாசலம் போன்றோர் தோல்வி கண்டனர்? ஏன் பிரிட்டிஷ் எதிர்ப்பு பெரும்பான்மை சிங்கள பௌத்தவாதத்தினால் ஆட்கொள்ளப்பட்டுக் காலப்போக்கில் தமிழர் எதிர்ப்பு இயக்கமாக மாறியது?

இவற்றிற்கு விடைகாணக் காலனித்துவ குறைவிருத்திப் பொருளாதாரத்தின் தன்மையையும் அதன் இனம், மதம், பிரதேசம் சார்ந்த தாக்கங்களையும் மட்டுமல்லாது பிரிட்டிஷ் காலனித்துவம் விட்டுச் சென்ற அரசியல் அமைப்பின் உள்ளார்ந்த இயக்கப்பாடுகளையும் அறிந்து கொள்ளல் அவசியம். இவை பற்றிய முழுமையான ஆய்வினை இங்கு மேற்கொள்ள முடியாது. சில முக்கியமானவற்றைச் சுருக்கி கூற மட்டுமே முடியும்.

i. பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையை ஒரு பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாற்றியமைத்ததால் சில சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாகப் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தேயிலை, இறப்பர் உற்பத்தியின் பெரும்பகுதி, பெருவர்த்தக நிலையங்களின் பெரும்பகுதி, வங்கிகள் அனைத்தும் வெள்ளைக்காரர்களின் கைகளில், கட்டுப்பாட்டில் இருந்தன. மேல்தட்டு இலங்கையர்களும் பெருந்தோட்டங்களின் உடைமையாளர்களாய் இருந்தனர். தென்னைப் பெருந்தோட்டங்கள் உள்நாட்டவர் கைகளிலேயே இருந்தன. இந்தச் சிறிய தொகையினரான இலங்கையரின் வர்க்க நலன்கள் ஆட்சியாளர்களின் நலன்களுடன் இணைந்திருந்தன. வெளிநாட்டு வர்த்தகத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷ்

கொலனிகளில் வேரூன்றி இருந்த இந்தியப் பெரு வர்த்தக நிறுவனங்கள் கட்டுப்படுத்தின. மொத்தத்தில் பொருளாதாரத்தின் முக்கிய கேந்திரங்கள் வெள்ளையர், ஒரு சில இந்தியர், ஒரு சில இலங்கையர் கைகளில் இருந்தன. இவர்கள் அனைவரும் வர்க்க நலன்களால் ஒன்றிணைந்திருந்தனர்.

ii. பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் அமைப்பு, தொடர்ச்சியான, பரவலான பொருளாதார வளர்ச்சிக்குரிய தூண்டுதல் விசைகளை வெளித்தரவில்லை. அதன் ஆரம்பத் தாக்கங்கள் விரைவில் வலுவிழந்து போயின. இந்த நிலையில் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாடுகளின் மத்தியில் இரண்டாந்தரமான, சிறிய அளவிலான பொருளாதாரச் செயற்பாடுகளே உள்நாட்டவர்களுக்கு மிஞ்சியிருந்தன. இவை பெருமளவிற்கு உள்நாட்டு வர்த்தகம், சிறிய பண்ட உற்பத்தி சார்ந்தவைகளாக இருந்தன. இந்த துறைகளில் இலங்கையர்களின் மித மிஞ்சிய போட்டி ஆரம்பித்தது. இங்கு குறிப்பாக உள்நாட்டுச் சிறு வியாபாரத் துறையில் தமிழர்களும் முஸ்லீம்களும் பரவலாக ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்கெதிராகச் சிங்கள வியாபாரிகள் போட்டியிட வேண்டிய நிலையில் இருந்தனர். முஸ்லீம் வியாபாரிகள் கிராமப்புறங்களுக்கும் நகரத்துக்குமிடையேயுள்ள வர்த்தகத்தில் குறிப்பிடத்தகுந்த பங்கினை வகித்தனர். இந்தச் சிறிய வர்த்தகர்களும், செட்டியார்களும் வட்டிக்குப் பணம் கொடுப்பதில் ஈடுபட்டிருந்ததையும் குறிப்பிட வேண்டும்.

iii. காலனித்துவ அரச சேவையின் பல மட்டங்களிலும் (குறிப்பாக லிகிதர்கள், நிர்வாகஉத்தியோகத்தவ ர்கள்,தொழில்நுட்பவியலாளர்)-தமிழர்களோடு சிங்களவர் போட்டியிட வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தின் கல்விவளர்ச்சி, கிறிஸ்துவமத இயக்கங்களின் வேலைகளோடும் அவற்றை எதிர்த்த சைவ, பௌத்த மறுமலர்ச்சி இயக்கங்களுடனும் தொடர்பு கொண்டிருந்த து. கிறிஸ்துவ மிஷனரிமார் மேற்கொண்ட கல்விக்கூடாக மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சில பகுதிகளில் வலுவடைந்திருந்தன. இத்தகைய பகுதிகள் சிலவற்றில் எதிர்ப்பு இயக்கங்களும் வலுவடைந்திருந்தன. எதிர்ப்பு இயக்கத்தினரும் கல்வி ஸ்தாபனங்களை உருவாக்கினர். இந்தப் பிரதேசங்களில் கல்வி வளர்ச்சி அதிகமாயிருந்தது. யாழ்ப்பாணம், கொழும்பு, காலி இவற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன. கல்விக்கூடாக வேலை வாய்ப்புக்களைப் பெறுவதில் சில உள்ளார்ந்த பிரதேசக் காரணிகளால் யாழ்ப்பாணத்தவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். அரச உத்தியோகத் துறையில் மேல் குறிப்பிட்ட மூன்று பகுதிகளிலும் இருந்தே அதிகமானோர் சேர்ந்திருந்தனர். யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் சில அரச துறைகளில் மற்றவர்களையும் விடக் கூடுதலாக இருந்தனர். அரசாங்க உத்தியோகங்களுக்குச் சிங்களவர் தமிழர் போட்டி வளர்ந்த போதும் தொழில் வாய்ப்புக்கள் குறுகியே வந்தன. இதே கல்வியமைப்புக்கூடாக ஒரு உள்நாட்டுப் புத்திஜீவிகள் கூட்டமும் உருவாகியது. இவர்கள் மத்தியிலிருந்து பலவிதமான சமூக அரசியல் கருத்துக்கள் தோன்ற ஆரம்பமாயின.

iv. பெருந்தொகையான சிங்களவர்களும் தமிழர்களும் சிறிய பண்ணை விவசாயிகளாய் குத்தகையாளர்களாய் கஷ்டப்பட்டனர். நகர்ப்புறத்தில், குறிப்பாக கொழும்பில் கிடைக்க கூடிய குறுகிய வேலை வாய்ப்புக்களுக்காக இலங்கையருடன் ( சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள்) தென் இந்தியாவிலிருந்து வந்த தமிழர், மலையாளத் தொழிலாளர்களும் போட்டியிட்டனர். தோட்டத் தொழிலாளர்களாகப் பெரும் தொகையான இந்தியர்கள் வரவழைக்கப் பட்டத்திற்கு அடிப்படைக் காரணம் உள்நாட்டில் தொடர்ச்சியாகத் தொழிலாளர்கள் கிடையாமையே. ஆயினும் காலப்போக்கில் சிங்களக் கிராமங்களில் வேலையின்மையும் பொருளாதார நெருக்கடியும் எழுந்த போதெல்லாம் சிங்கள பௌத்தவாதிகள் இதற்கும் தப்பான வியாக்கியானம் கொடுத்தனர்.

இங்கு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள சில பற்றிய விரிவான தகவல்களை மேலே குறிப்பிட்டுள்ள குமாரி ஜயவர்த்தனாவின் கட்டுரையில் காணலாம். இங்கு முக்கியமாகக் குறிப்பிட்ட வேண்டியது இதுதான். முதலாளித்துவ வளர்ச்சிக்குரிய இயக்க சக்திகள் குன்றிய பொருளாதாரம் பெருந்தொகையானோருக்குச் சிறிய வாய்ப்புக்களை மட்டும் கொடுத்தது. சிறிய பண்ட உற்பத்தி, பரவலாகும் பண்டமயமாக்கல் (commoditisation) இவையோடு சம்பந்தப்பட்ட குட்டி முதலாளி வர்க்கத்தின் பரிணாமப் படிகளைத் தடைப்படுத்திய சுழற்சி மற்றும் வணிக மூலதனத்தின் ஆதிக்கம், இவற்றின் தெட்டம் தெட்டமான தாக்கங்கள் – இவையே காலனித்துவ எதிர்ப்பின் புறநிலை சார்ந்த தளம். இந்தப் புறநிலையோடு ஒரு அங்கமாயிருந்தது கிறிஸ்துவ மயமாக்கல் இயக்கம். இவற்றுடன் இலங்கைச் சமூகத்தின் இன, மத வேறுபாடுகளையும் சேர்த்துத்

தன் இயக்க ரீதியான பரிணாமத்தைச் சிங்கள பௌத்த தேசியவாதம் உருவாக்கியது.

காலனித்துவ அனுசரணையுடன் கிறிஸ்துவ மயமாக்கலில் ஈடுபட்டிருந்த மிஷனரிமாருக்கு எதிராக ஆரம்பித்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் விரைவில் நடைமுறையிலும் பிரச்சாரத்திலும் தமிழர், முஸ்லீம்களை எதிர்க்கும் இயக்கமாகவும் உருவெடுத்தது. கலாச்சார தேசியவாதம் ஒரு குறுகிய அடித்தளத்தைக் கொண்ட கருத்தமைவு. இலங்கை போன்ற பல மதங்களும் இனங்களும் கொண்ட நாட்டில் சிங்கள பௌத்த அடிப்படை வாதம் மற்றய இன, மத இலங்கையர்களான தமிழர்களையும் முஸ்லீம்களையும் வெளிவாரிப் படுத்தியது மட்டுமல்லாது எதிர்க்கப்பட வேண்டியவர்களாகவும் காட்டியது. சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் பெரும் தலைவராக விளங்கியவரான அநகாரிக தர்மபாலா (1864-1933) பௌத்த புனித நகரான அநுராதபுரவிலிருந்து கிறிஸ்துவக் கோவில்களை மட்டுமல்லாது மதுக்கடைகளையும் முஸ்லீம்களின் கசாப்புக்கடைகளையும் அகற்ற வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். அவரது பேச்சிலும் எழுத்திலும் சிங்கள பௌத்தர்கள் அல்லாதோர் குறிப்பாகத் தமிழர், முஸ்லீம்கள், மலையாளத்தார் எல்லோரும் வந்தேறு குடிகள், வெளியார், அகற்றப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தே வலுப்பெற்றிருந்தது. தமிழர்களைத் தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களின் வழித்தோன்றல்களாக, சிங்கள பௌத்த நாகரீகத்தை அழிக்க முயன்ற எதிரிகளின் பரம்பரையினராகக் கண்ட தர்மபாலா முஸ்லீம்களை

வியாபாரம் செய்ய வந்து அழையா விருந்தாளிகளாய்ச் சிங்களத்தில் தங்கிவிட்டவர்களாகக் குறிப்பிட்டார்[2].

இலங்கையின் உண்மையான உரிமையாளர்கள் சிங்கள பௌத்தர்களாயிருக்கும் போது அவர்களுக்குரிய இடங்களைத் தமிழர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் பெற்றிருப்பது அநியாயம் என்ற செய்தியை ஜனரஞ்சகப் படுத்துவதற்கு உதவியாக தர்மபாலா போன்றோர் சில புராணக்கதைகளின் உதவியை நாடினர். முதலில் இந்த நாடு சிங்கள பௌத்தர்களின் நாடு மட்டுமே என்ற உணர்வினை மக்கள் மத்தியில் பரப்புவது அவசியமாயிற்று. சிங்கள பௌத்தர்களின் உரிமைப்பாட்டினையும் ‘ உயர்வான’ இரத்தத்தையும் நிரூபிக்க மூன்று புராணக் கதைகளைப் பயன்படுத்தினர்[3]. முதலாவது கட்டுக்கதை; விஜயன் வட இந்திய இளவரசன் ஒரு ஆரியன்; அவனும் அவனுடைய உயர்வம்ச சகாக்களும் - எல்லாமாக எழுநூறு (700) ஆண்கள் - தர்மபாலாவினால் 1902 ம் ஆண்டு அமெரிக்காவில் வெளியிட்டப்பட்ட பிரசுரம் ஒன்றின்படி 'இரண்டாயிரத்து நானூற்றி நாற்பத்தியாறு' வருடங்களுக்கு முன் இலங்கை மண்ணில் வந்திறங்கினர்[4]. இலங்கைத் தீவின் பூர்வீக குடிகளை அடிமையாக்கிய விஜயன் இன்னொரு 'ஆரிய' மன்னனாம் மதுரைப் பாண்டியனின் மகளை மணம் செய்தான். இதே மன்னன் விஜயனின் சகாக்களுக்கும் 699 உயர்வர்க்கக் கன்னிகளை மணம்

2 அநகாரிக தர்மபாலாவின் சிந்தனைகளை அறிய அவருடைய கட்டுரைகள், கடிதங்கள், பேச்சுக்கள் அடங்கிய பின்வரும் வெளியீட்டினைப் பார்க்கவும். Anagarika Dharmapala, Return to Righteousness, Edited by Ananda Guruge,The Government Press, Colombo 1955

3 Kumari Jayawardena,1983, op.cit

4 Anagarika Dharmapala op.cit.p.4

செய்ய அனுப்பி வைத்தானாம்[5] . ஆகவே ‘இரண்டு ஆரியக் குடும்பங்களின் சேர்க்கையினால் எழுந்தது சிங்கள இனம் ‘[6].

இந்தக் கட்டுக்கதை இரண்டாவது கட்டுக்கதைக்கு வழிவகுத்தது. அதுவே சிங்களவர் பரிசுத்தமான ஆரிய இரத்தத்தைக் கொண்ட உயர் பிறப்புக்கள் என்பதாகும். தர்மபாலாவின் காலத்தில் ஆரியர் மற்றய இனங்களை( races) வெற்றி கொண்ட உயர் இனத்தவர் (race) என்ற கருத்துக்கள் வெளிவரத் தொடங்கி விட்டன. இதற்கேற்பக் கர்ண பரம்பரைப் புராணக் கதைகளுக்குப் புத்துயிரும் புது உருவும் கொடுப்பதில் வெற்றி கண்டார்கள் தர்மபாலா போன்றோர். சிங்கள இரத்தத்தின் தூய்மை பற்றிப் பெருமைப்பட்ட தர்மபாலா தம் இனத்தவர்களிடம் ‘அடிமை இரத்தம்’ இல்லை என்றும், அவர்களைப் புற மதத்தினரான தமிழராலோ அல்லது கலாச்சாரச் சின்னங்களை அழித்தொழிக்கும் ஐரோப்பியர்களாலோ ஒரு போதும் வெற்றி கொள்ள முடியவில்லை என்றும் கூறினார்[7].

5 ibid: 485

6 ibid: 485
தர்மபாலா தன் வசதிக்கேற்ப மதுரை மன்னனையும் ஆரியனாக்கிவிட்டார். விஜயன் கதை கூறும் மகாவம்ச நூலில் இந்தத் தகவல் இல்லை. இது தர்மபாலாவின் கண்டுபிடிப்பு. பாண்டியன் ஆரியனாக்கப்படாவிட்டால் அவருடைய ஆரிய சிங்களத் தூய்மைக் கதைக்கு அடிப்படை இல்லை. அத்துடன் பாண்டியன் திராவிடன் எனக் குறிப்பிட்டால் சிங்கள இனத்தின் ஆரம்பமே ஒரு தமிழ்த்தாயின் கர்ப்பத்தில் என்றாகி விடும். இப்படியாகிவிட்டால் சிங்களவரும் தமிழரும் ஒரு குலத்தோர் எனவும்’ சமவுரிமையாளர்கள்‘ எனவும் ஆகிவிடும். இதெல்லாம் தர்மபாலாவின் நோக்கத்துக்குத் தடைகள். இவற்றை ஒரே அடியில் மாற்றிவிட்டார் அவர்.

7 Ibid p.479

ஆரிய மனப்பாங்கினைப் பரப்பி சிங்களவர் மற்ற இலங்கையர்களையும் விட விசேடமான உயர் இனத்தவர்(race) என்ற சிந்தனையை ஆழமாக்கி, சிங்களவர்களின் தனித்துவத்திற்கு ஒரு வித தார்மீக ஆளுமையையும் கொடுக்கும் நோக்குடன் மூன்றாவது புராணக்கதையைப் பயன்படுத்தினார். அதுவே புத்த பகவானின் இலங்கை விஜயமாகும். புத்த பகவானே நேரில் வந்து ஆசிர்வதித்து அருள் பாலித்த விசேடமான சிங்கள பௌத்தர்களின் நாடு இலங்கை என்பது ஜனரஞ்சக வரலாறாயிற்று.

இந்தப் பிரச்சாரத்தின் நடைமுறை சிங்களக் குட்டி முதலாளி வர்க்த்தினதும் காலனித்துவக் கல்விக் கூடாக வளர்ந்து வரும் நடுத்தர வர்க்க புத்திஜீவிகளினதும் வாழ்நிலைப் பிரச்சனைகளோடு ஒட்டியிருந்தது. சிங்கள பௌத்தர்களின் நாட்டில் ‘வந்தேறு குடிகளான’ தமிழர், முஸ்லீம்கள் அரசாங்கப் பதவிகளையும் உள்நாட்டு வர்த்தகத்தையும் பிடித்துக் கொண்டனர். இவர்களை அகற்றி அனைத்தையும் சிங்கள பௌத்தமயப்படுத்தல் வேண்டும்- இதுவே மேற்குறிப்பிட்ட வர்க்கங்களின் முக்கிய நோக்காயிருந்தது. இலங்கையரல்லாத இந்திய வர்த்தகர்களின் (செட்டிமார்கள் உட்பட ) ஆதிக்கமும் இந்த எதிர்ப்புக்குள் அடங்கும்.

தர்மபாலாவின் தந்தையார் ஒரு பிரபல தளபாடக்கடை உரிமையாளர். டொன்கறோலிஸ் என்று பெயர். உலகின் பொருளாசையையும் சுகபோகங்களையும் நிராகரித்து ஞானமார்க்கத்தில் சென்று உண்மையைத் தழுவி நிர்வாணத்தையடையும் புத்த தத்துவத்தின் பெயரால் குட்டி முதலாளிகளின் போட்டி கழுத்தறுக்கும் போட்டியாக மாறுவதை நியாயப்படுத்தும் முரண்பாட்டினைப் புரிந்து கொள்ள மதத்தின் சமூகப் பணியினையும் அது வரலாற்றில்

புறஉலகு சார்ந்த இயக்கங்களின் கருவியாகவே இருந்திருப்பதையும் நினைவுகூருதல் உதவியாக இருக்கும். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குச் சில பிரபல சிங்கள வர்த்தகர்கள் பண உதவி வழங்கினார்கள். கீழ் நாட்டுச் சிங்கள வர்த்தகர்கள் இந்த இயக்கத்தின் முக்கிய சக்திகளில் ஒன்றாக விளங்கினர்.

சிங்கள வர்த்தகர்களின் பண உதவியால் இயங்கிய பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் அவர்களின் வியாபார வேலைகளுக்கு ஆதரவு வழங்கியது. 'சிங்கள பௌத்தயா ' என்ற பெயரில் தர்மபாலா வெளியிட்ட பத்திரிகை சிங்கள வர்த்தகர்களை தேசபக்தர்கள் என்றும், 'நியாயமான வழியில் பணம் சம்பாதிப்போர்' என்றும் புகழ்ந்தது. அதே தர்மபாலா பம்பாய், தென் இந்தியா போன்ற இடங்களில் இருந்து வந்த வியாபாரிகளையும் முஸ்லீம்களையும் அநியாயமாகப் பணம் சம்பாதிப்போர் எனச் சாடினார். புத்தமதம் சார்ந்த பத்திரிகைகள், வெளியீடுகள் முஸ்லீம் கடைகளைப் பகிஷ்கரிக்கும்படி சிங்களவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தன[8]. இத்தகைய பிரச்சாரங்களின் தாக்கத்தை 1915ல் காணமுடிந்தது. இது பற்றிப் பின்பு பார்ப்போம்.

இந்தக் கலாச்சார தேசியவாதத்தின் வெளிப்பாடுகளைக் கவிதைகள், நூல்கள், நாடகங்களில் நன்கு காணக்கூடியதாக இருந்தது. சிங்கள பௌத்தர்களைப் பெருமைக்குரிய வீர மிகுந்த பூமி புத்திரர்களாகக் காட்டிய சில படைப்புக்கள் மற்றய இனங்களைக் கேவலப்படுத்தின. பேராசிரியர் சரத் சந்திராவினால் சிங்கள நாவலின் தந்தை எனக் கூறப்படும் பியதாச சிரி சேன ' சிங்கள ஜாதிய' என்ற பத்திரிகையை

8 bid p. LIX

நடத்தினார். இதில் இவர் மேலைத்தேசக் கலாச்சாரத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்த அதேவேளையில் சிங்கள பௌத்தர்கள் அல்லாதோரையும் தாக்கினார். இவருடைய கண்மூடித்தனமான ஐரோப்பியக் கலாச்சார எதிர்ப்பு முழுக்க முழுக்கப் பின்நோக்கிய சிங்கள பௌத்த வாதமாகவே அமைந்தது. இவருடைய கடைசிக் காலத்தில் இதே பிற்போக்குக் காரணங்களுக்காக மார்க்சியத்தையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். இந்தக் காலகட்டத்தின் மற்றய படைப்பாளிகளும் ஐரோப்பிய, கிறிஸ்துவ எதிர்ப்பை இதே அடிப்படையில்தான் காட்டினார்கள்.

சிங்கள பௌத்தர்களின் தனித்துவத்தை இனவாதப் போக்கில் வலுச்பெறச் செய்த, குறுகிய பின்நோக்கிய கற்பனைகளில் ஊறிப்போன கலாச்சார மறுமலர்ச்சி வாதம் காலனித்துவ இலங்கையின் சமூகத்தின் ஓர் முழுமைத்துவமற்ற குழப்பம் நிறைந்த பிரதிபலிப்பாகவே இருந்தது. இந்தக் கருத்தமைவு சிங்கள இனத்தின் தனித்துவப் பாரம்பரிய உரிமைப்பாட்டினை நிலைநாட்ட ஆயிரக்கணக்கான வருடங்கள் பின்நோக்கிய தேடல்களில் ஈடுபட்டது. ஆனால் அது இயங்கும் சமகால யதார்த்தத்தைப் பற்றி மிகவும் மேலெழுந்த வாரியான தோற்றங்களை மட்டுமே பார்த்தது.பழமையிடமிருந்து இந்தக் கருத்தமைவு பல வீரமிகுந்த ‘வரலாற்று’ நாயகர்களைக் கண்டு பிடித்தது. தனக்கென ஒரு வரலாற்றுரீதியான நியாயப்படுத்தலையும் வகுத்துக் கொண்டது. ஆனால் இதனிடம் புதுமை இருக்கவில்லை. இதன் எழுச்சியும் இயக்கமும் சமகாலத்து நிலைமைகளைத் திரித்துப் பிரதிபலிப்பதில் தங்கியிருந்தன. இதுதான் குறுகிய கலாச்சாரவாதத்தின் துன்பியல்.

இந்தக் கருத்தமைவு வழி வந்த சமூக ஆய்வு ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கை மக்களுக்குமிடையேயுள்ள

முரண்பாட்டினை இலங்கையருக்கிடையே சிறுபான்மை- பெரும்பான்மைகளுக்கிடையே உள்ள முரண்பாடாகவும் காட்ட முற்பட்டது. இதனால் கருத்தமைவுக்கும் வெளித்தோற்றங்களுக்கப்பால் அமைந்த யதார்த்தத்துக்குமிடையே இடைவெளி இருந்தது. காலப்போக்கில் இது வளர்ந்தது மட்டுமின்றி சிங்கள பௌத்தர்- மற்றையோர் என்ற உள்நாட்டு முரண்பாடே முக்கியத்துவம் பெற்றது. இதை நன்கு புலப்படுத்துவது போல் சிங்கள பௌத்தவாதிகளின் அரசியலும், சுதந்திரம் பற்றிய கொள்கைகளும் அமைந்தன. இவர்களும் உயர் நடுத்தர வர்க்கத்து யாப்பியல்வாதிகள் (Constitutionalists) போலவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற கட்டுக்கோப்புக்குள் பிரிட்டிஷ் அரசின் பாதுகாப்புடனான சுயாட்சியை வேண்டி நின்றனர். 1914 ம் ஆண்டு தர்மபாலா சட்டமா அதிபருக்கெழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> ‘நான் பதவியாளர்களை என் கட்டுரைகளில் விமர்சிப்பது உண்மை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எனது விசுவாசம் கல் போல் உறுதியானது. அரசர் மீதுள்ள விசுவாச உணர்வுகளை நான் தவறாது வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆனால் எனது மதத்தையும் சிங்கள இனத்தையும் நேசிக்கிறேன். எனது சந்தோசம் அவர்களின் நலன்களிலேயே தங்கியுள்ளது’[9]

இத்தகைய விசுவாசத்தை ஏகாதிபத்திய ஆட்சியாளர் மீது காட்டிய தர்மபாலா பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழ் சுயாட்சி பெறுவதே சிங்களவர்களின் அரசியல் நோக்கமாயிருக்க

9 Ibid p LIX

வேண்டுமெனப் பலதடவை குறிப்பிட்டார். பிரிட்டிஷ் போலிஸ் அவரைக் கைது செய்த சந்தர்ப்பங்களில் தன் விசுவாசம் பற்றியும், தான் பிரிட்டிஷ் யுத்த நிதிக்குப் பணம் வழங்கியது பற்றியும் குறிப்பிட்டுத் தன்மீது கருணை காட்டும்படி மனுச் செய்தார்[10]. கிறிஸ்துவ மத ஊடுருவலை வெறுத்த அளவிற்கு அவர் ஏகாதிபத்தியத்தின் முழுத்தாக்கத்தையும் வெறுக்கவில்லை. அவருடைய நோக்கங்களுக்கு அது அவசியமும் இல்லை. அவருடைய கனவெல்லாம் உள்நாட்டு நிர்வாகம் பௌத்தர்கள் வசமாக வேண்டும் என்பதே. இதை அவர் தெளிவாகவே வெளிப்படுத்தினார்.

> ‘எனக்கு வேண்டியது இன்றைய முழு அரசாங்கமுமே பௌத்த அரசாங்கமாய் இருக்க வேண்டும். தேசாதிபதி பௌத்தராயிருக்க வேண்டும். காலனித்துவ செயலாளர் மற்றும் சகல உயர் பதவியாளர்கள் எல்லோரும் பௌத்தர்களாயிருக்க வேண்டும்.[11]’

இதுவே அவர் வேண்டிநின்றது. இதைச் சட்ட ரீதியான

10 Ibid p 755
May 8, 1917 எனக் கல்கத்தாவிலிருந்து தேதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இலங்கையின் தேசாதிபதியின் செயலாளரிடம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

‘நான் மிகுதியாகத் துன்புறுத்தப் பட்டபோதும் யுத்த நிதிக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தலின் மூலம் எனது பணத்தையெல்லாம் யுத்தப் பத்திரங்களிலும் M.B சங்கத்தின் பத்திரங்களிலும்- எல்லாமாக 32,00 ரூபா முதலீடு செய்வதன் மூலமும் பிரிட்ஷ் அரசாங்கத்துக்கு என் கடமையைச் செய்துள்ளேன்’

(கல்கத்தாவில் தனிமையில் சிறை வைக்கப்பட்டிருந்த போது தன் உடல் நிலையைப் பற்றிக் குறிப்பிட்டு விடுதலை கோரிய கடிதத்திலிருந்து)

11 Ibid LXVIII

முறைகளில் அடைய வேண்டும் எனக் கூறினார். ஆகவே ஏகாதிபத்திய எதிர்ப்பினைப் பொறுத்தவரை உண்மையில் கலாச்சார தேசியவாதிகள் மிதவாதிகளே. உள் நாட்டில் மற்றய மதத்தினரை, இனத்தினரை எதிர்ப்பதில் தீவிரவாதிகளாயிருந்தார்கள். இலங்கையில் வெள்ளையர்கள் பெருமளவில் குடியேறவில்லை. உயர்மட்டப்ப பதவிகளில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். இலங்கையர்களைக் கொண்டே ஆயுதப்படை, பொலிஸ் மற்றய அரச அலுவலகங்களை நிரப்பியிருந்தனர். இந்த நிறுவனங்களில் 'பூமி புத்திரர்கள்' தவிர்ந்தோர் கடமையாற்றுவதை சிங்கள பௌத்தவாதிகள் எதிர்த்தனர். காலனித்துவத்தை அகற்றும் நோக்குடன் நடைபெறும் போராட்டம் காலனித்துவ சமூக, பொருளாதார அமைப்பினையே மாற்றியமைக்கும் போராட்டமாக அமையும். ஆனால் கலாச்சாரத் தேசியவாதத்திற்குள் அடைபட்ட இந்தப் போராட்டம் அத்தகையதல்ல.

கலாச்சார சிங்கள பௌத்தவாதத்தின் இன்னொரு வர்க்கத் தொடர்பையும் கவனித்தல் அவசியம். இலங்கையின் கீழ் நடுத்தர மட்டங்களிலேயே காலூன்றி நின்ற இந்தக் குறுகிய வாதம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு இயக்கத்திற்கு வழிவகுத்தது. இரு காலகட்டங்களில் ( 1903-5; 1911-14) உச்ச நிலை அடைந்த மதுவிலக்கு இயக்கத்திற் கூடாகக் கீழ் நடுத்தர மட்டத்து புத்திஜீவிகளுக்கும் 'புதிய' செல்வந்த வர்க்கத்துக்குமிடையே உறவு பிறந்தது. இந்தப் புதிய செல்வந்தர்கள் 'பழைய' உள்நாட்டுச் செல்வந்தர்களின் அரசியல் செல்வாக்கில் தமக்கும் பங்கு பெறும் வழிகளைத் தேடிய சந்தர்ப்பம் அது. பழைய செல்வந்தர்கள் பெருமளவில் கிறிஸ்துவர்களாகவும், மேலைத்தேய வழக்கங்களில் மிகவும் ஆழ்ந்திருப்போராயும் இருந்தனர். புத்தமத மறுமலர்ச்சியோடிணைந்த பரவலான மதுவிலக்கு இயக்கத்தை இவர்களைத் தாக்கும் ஒரு கருவியாக

பயன்படுத்த முனைந்தனர் சிங்களப்பௌத்த செல்வந்தர்கள். உதாரணமாக இலங்கையின் காலனித்துவ கடைசிக் காலங்களின் முக்கிய மந்திரிகளில் ஒருவராகவும் 1948 ல் பிரதமராயும் விளங்கிய டி.எஸ் சேனாநாயக்கவின் தந்தையார் மதுவிலக்கு இயக்கத்திற்கு முழு மூச்சான ஆதரவினை வழங்கினார். இந்த ஈடுபாடே சேனாநாயக்க குடும்பத்தின் அரசியல் செல்வாக்கு வளர்ச்சியின் மிதிகல்லெனக் கருதப்படுகிறது[12].

ஆயினும் அதேநேரத்தில் மதுவிலக்கு இயக்கத்தோடு தொடர்பு கொண்ட சிலரின் அரசியல் பார்வை குறுகிய கலாச்சார தேசியவாத த்திற்கும் அப்பால் சென்றது. இவர்களே 1912-15 காலத்திய தொழிலாளர் இயக்கப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டனர்[13] .

சிங்கள பௌத்த இயக்கத்திற்கும் தொழிலாளர் இயக்கத்திற்குமிடையே இப்படியாக ஆரம்பித்த உறவின் வரலாற்றினை வேறெரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். இங்கு மனங்கொள்ள வேண்டியது இதுவே:பெரும்பான்மை இனத்தின் நடுத்தர கீழ் மட்ட உணர்வுகளைத் தட்டி அவர்களை நெருங்கிய சிங்கள பௌத்த தேசியவாதத்தின் சில செயற்பாடுகள் சில சந்தர்ப்பங்களில் பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை கொண்டதாய் இருந்திருக்கலாம். ஆனால்

12 K.M. De Silva (ed), 1973, Universitty of Ceylon History of Ceylon Vol.3 - From the Begning of 19th Century to 1948, Colombo

13 V.K Jayawardena,1972, The Rise of Labour Movement in Ceylone, Durham N.C

இந்த தேசியவாதம் இனம், மதம் என்ற அடிப்படையில் தனக்குத்தானே வகுத்துக் கொண்ட வரையறைகளே அதன் தடைகளாயின.ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தமிழர்களோ அல்லது முஸ்லீம்களோ தங்களை இத்தகைய ஒரு இயக்கத்தோடு இனங்காண முடியாதவர்களாய் இருந்தார்கள். பல இனத்தவர்களையும் இலங்கையர் மட்டுமன்றி இந்தியர்களையும் கொண்டிருந்த இலங்கைத் தொழிலாளர் வர்க்கமும் இதே நிலையிலேயே இருந்தது.

இலங்கையின் வரலாற்றிலேயே இரு இலங்கைச் சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட முதலாவது கலவரம் 1915ம் ஆண்டின் சிங்கள- முஸ்லீம் கலவரமாகும். இந்தக் கலவரத்தின் சம்பவங்கள் நன்கு விபரிக்கப்பட்டுள்ள போதும் இது பற்றிய ஒரு பூரண ஆய்வு வெளிவரவில்லை என்றே சொல்ல வேண்டும். முஸ்லீம்கள் மீது குறிப்பாக இந்திய வம்சாவழியினரான உள்நாட்டுச் சிறுவர்த்தக முஸ்லீம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை காலனித்துவ அரசு கையாண்ட விதமும் இந்தக் கலவரம் பற்றிய வியாக்கியானங்களைப் பாதித்துள்ளது. சிங்கள தேசியவாதப் போக்குள்ள ஆய்வாளர்களும், சில இடதுசாரிகளும் இன அடிப்படையிலும் ‘வர்க்க’ ‘ஏகாதிபத்திய எதிர்ப்பு’ அடிப்படையிலும் முஸ்லீம்கள் மீதான தாக்குதல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் நியாயப்படுத்தி உள்ளனர். சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்கள் என்ற காரணத்தினால் முஸ்லீம் கடைக்காரர்கள் தாக்கப்பட்டனர். அவர்கள் சொத்துக்கள் பாதிக்கப்பட்டன. இதற்குப் பின்னால் பல சிங்கள வியாபாரிகள் தீவிரமாயிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் கீழ்நாட்டுச் சிங்களவர்களாக இருந்தனர். இந்தச் சிங்கள குட்டி முதலாளிகள் சிங்கள பௌத்த இயக்கதிற்குப் பண உதவியும் வேறு உதவிகளும் வழங்குவோராயிருந்ததால் சில சிங்கள பௌத்தவாதிகள் முஸ்லீம் கடைகள் மீதான தாக்குதல்களுக்கு

ஒருவித தேசியவாத நியாயப்பாட்டினை வழங்கினர்[14].

இந்தக் கலவரத்தின் போது தர்மபாலாவின் இரு சகோதர்கள், மற்றும் F.R.சேனாநாயக்க D.S .சேனாநாயக்க உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர். இவர்களை அரசியல் கைதிகளாக்கியது அரசு. இவர்கள் அரசுக்கெதிராகச் சதி செய்தனர் என்று குற்றம் சாட்டியது. ஆனால் உண்மையில் 1915ம் ஆண்டின் கலவரங்கள் சிங்கள பௌத்த இயக்கத்தின் உள்நாட்டு இனவாதத்தின் ஒரு பயங்கரமான வெளிப்பாடு மட்டுமே என்பதில் சந்தேகமில்லை. இதுவே சிங்கள பௌத்த இனவாதத்தின் இத்தகைய முதலாவது வெளிப்பாடும் ஆகும். முன்பு குறிப்பிட்டதைப் போல இந்த இனவாதம் உள்நாட்டில் மற்றய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மீதான எதிர்ப்பினைத் தீவிரமாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பினை மிதமாகவும் காட்டும் பண்புடையது என்பதற்கு 1915 ம் ஆண்டு ஓர் நல்ல உதாரணம். கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களின் விடுதலையைக் கோரிப் பொன்னம்பலம் இராமநாதன் பிரிட்டிஷ் அரசிடம் வாதிட்டார். சட்டரீதியான முறைகள் மூலம் இந்த தலைவர்களின் விடுதலையை வேண்டி நின்ற சிங்களவர்களோ எதுவித வெகுஜனப் போராட்டத்தையும்

14 K.M.De Silva (ed) op.cit

நடத்த முயலவில்லை[15]. கலாச்சார தேசியவாதிகளும் அப்படியே. இத்தகைய சந்தர்ப்பத்தில் வெகுஜனப் போராட்டம் நேரடியாகவே பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து முகம் கொடுக்க வேண்டியதாக அமையும். அத்தகைய ஒரு நேரடியான பிரிட்டிஷ் எதிர்ப்பு வெகுஜனப் போராட்டத்தை நடத்தக் கலாச்சார தேசியவாதிகள் தயாரக இருக்கவில்லை. 1915 ன் இத்தகைய, மற்றும் முன்கூறிய தன்மைகளை நன்கு அறிந்திருத்தல் சிங்கள பௌத்த இனவாதத்தின் வளர்ச்சியை வரலாற்று ரீதியில் புரிந்து கொள்ள மிகவும் அவசியமாகிறது.

## 2 காலனித்துவ அரசியல் அமைப்பும் இனப்பாகுபாடும்

காலனித்து ஆட்சி புகுத்திய சட்டசபையில் பிரதிநிதித்துவப் பிரச்சனைகள் எழுந்தன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சட்டசபை நியமனங்கள் இன,மத,சாதிப் பிரதேசப் பிரச்சனைகளைக் கிளறியது. பிரிட்டிஷ் அதிகாரிகளின் சாணக்கியம் இந்தப் பிரிவினைகளை வளர்ப்பதிலேயே கண்ணாயிருந்தது. கண்டிய சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர், தமிழர், முஸ்லீம்,பறங்கியர் என சமூகம் பிரிபட்டிருந்தது. இன,பிரதேசப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட சட்டசபை நியமனம் என்ற எலும்பிற்காகப் பல பிரிவுகளையும் சேர்ந்த உயர்தர வர்க்கத்தினர் போட்டி போட்டனர். இத்தனைக்கும் இது

15 இந்தச் சந்தர்ப்பத்தில் தர்மபாலா கல்கத்தாவில் புத்தமத இயக்க வேலைகளில் ஈடுபட்டிருந்தார். சிங்கள- முஸ்லீம் கலவரம் பற்றிய செய்தியை அறிந்ததும் இலண்டனில் வதியும் கொலனிகளின் பொறுப்பதிகாரிக்கு june 15, 1915 ல் ஒரு கடிதத்தை எழுதினார். இதில் முஸ்லீம்களைக் கீழ்மைப்படுத்தி' பூமி புத்திரர்களின்' துன்பங்களுக்கு அவர்கள் எவ்விதம் காரணமாகினார்கள் என்று தெரிவித்தார். ' ஜெர்மனியன் பிரிட்ஷ்க்காரனுக்கு எப்படியோ முகமதியன் சிங்களவருக்கு அப்படியே. அவன் மதத்தால், இனத்தால், மொழியால் சிங்களவனுக்கு வெளியானவன்' என்று குறிப்பிட்ட தர்மபாலா சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென பலமாக வாதிட்டார். (Anagarika Dharmapala op.cit p.541)

மக்களின் பங்குபற்றல் இல்லாத பிரிதிநிதித்துவம். இந்தக் கட்டத்தில் காலனித்துவத்தின் பிரித்தாளும் தந்திரத்திற்கு மிகவும் சாதகமாய் அமைந்தவை குறுகிய கலாச்சார தேசியவாதமும் பிரதேசவாதமும் ஆகும்.1915க்குப் பின் தோன்றிய இலங்கை தேசிய காங்கிரசில் சிங்கள, தமிழ் உயர் நடுத்தர வர்க்க புத்திஜீவிகள் அங்கம் வகித்தனர். இதன் முதல் தலைவராகப் பொன்னம்பலம் அருணாசலம் தெரிவானார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் செல்வாக்குள்ள ஒரு பரந்த தேசியவாதியாக விளங்கிய போதும் மிகவும் குறுகிய காலத்தில் சிங்களவர்-தமிழர் முரண்பாடு சட்டசபை நியமனங்கள் பற்றி வலுத்துத் தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். தேசிய காங்கிரஸ் பிளவுண்டது. காலனித்துவ தேசாதிபதி மானிங் என்பவரின் பிரித்தாளும் தந்திரம் சுலபமாகவே வெற்றி கண்டது. 1921ல் தமிழ் மகாஜனசபை என்ற ஸ்தாபனம் உருவாகியது. சட்டசபை அரசியல் இன அடிப்படையிலமைந்த அரசியலாயிற்று.

இதுவரை சட்டசபை அரசியல் ’படித்த இலங்கையர்‘ மட்டுமே பங்குபற்றும் அரசியலாக இருந்தது. இது ஒரு உயர் நடுத்தர வர்க்கத்து அரசியல். இதன் முக்கியஸ்தர்கள் பலர் பிரிட்டிஷ் ஆட்சியினால் பல பட்டங்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். 1948க்குப் பின் இவர்களில் பலர் தேசிய வீரர்களாயினர். இந்தப் பட்டியல் இன்றும் வளர்ந்து கொண்டே போகுகிறது. காலனித்துவ ஆட்சியினால் கௌரவிக்கப்பட்ட சில சிங்களவரும் தமிழரும் சுதந்திரத்தின் தலைவர்களாகவும் கௌரவிக்கப்படும் முரண்பாட்டினை ஆராய்வதற்கு இது சந்தர்ப்பமல்ல. ஆயினும் இது முக்கியமான கேள்வி.

1931ல் சர்வஜனவாக்குரிமை வழங்கப்பட்ட போது ஏற்கனவே சட்டசபை அரசியல் சிங்கள- தமிழ், கண்டியர்- கீழ் நாட்டவர் மற்றும் சாதிப்பிரிவுகள்

போன்ற பிரிவினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒன்றாக அமைந்திருந்தது. இந்தப் பின்னணியிலேயே இலங்கையின் இடதுசாரி இயக்கம் தேர்தல் அரசியலில் இறங்குகிறது. 1935ம் ஆண்டில் இலங்கையின் முதலாவது இடதுசாரிக்கட்சியான சமசமாஜக்கட்சி இன ஐக்கியம், பூரண சுதந்திரம், மொழிச்சமத்துவம் என்ற அடிப்படையில் நாட்டின் பல பகுதிகளிலும் இயக்கம் நடத்தியது. இனவாத அரசியலை ஸ்தாபன ரீதியாக எதிர்த்த இந்தக் கட்சி கலாச்சார தேசியவாதத்திற்கும் அப்பால் அரசியல் தளத்தில் போராட்டத்தை ஆரம்பித்த பெருமையைக் கொண்டது.1940 களில் சமசமாஜக் கட்சியிலிருந்து ஒரு குழுவினர் பிரிந்து கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தனர். கம்யூனிஸ்டுகளும் இனவாத எதிர்ப்பு அரசியற் கொள்கைகளைப் பின்பற்றினர். இடதுசாரிகளின் ஸ்தாபன ரீதியான வேலைகள் நகர்ப்புறத்தில் தொழிற்சங்கங்களை அமைப்பதிலேயே செறிந்திருந்தன. இங்கு அவர்கள் ஏற்கனவே இனவாதச் சேற்றுக்குள் விழுந்துவிட்ட A.E. குணசிங்காவோடு மோதினர்.

இளமைக் காலத்தில் தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பாளராயும் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் ஆரம்பித்த A.E. குணசிங்கா தேர்தலை மனதிற் கொண்டு இனவாதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தமிழ் மற்றும் மலையாளத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவெறுப்பைக் கிளறினார். தேர்தல் அரசியல் இனவாத அரசியலாக நாடெங்கும் பரவி உருவெடுத்தது. சர்வஜனவாக்குரிமை; கிராமப்புறத்தில் செல்வாக்கு கொண்டிருந்த மதகுருக்கள், ஆசிரியர்கள், உள்நாட்டு வைத்தியர்கள் போன்றோரின் முக்கியத்துவத்தையும் படிப்படியாக உணர்த்தியது. பாராளுமன்ற அரசியல் பெரும்பான்மை இனவாதத்திற்குச் சாதகமாய் அமைந்தது. மலைநாட்டில் ‘இந்திய வம்சாவழித் ‘ தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள பௌத்தப்

பிரச்சாரங்களும் புத்துயிர் பெறத் தொடங்கின. இடதுசாரிகள் எதிர் நீச்சல் போடமுற்பட்டனர். வெற்றி பெற்றார்களா?

பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதித் தசாப்தங்கள் சர்வஜன வாக்குரிமை அரசியலில் சிங்கள தமிழ் வகுப்புவாத(Communalist) சக்திகளின் வளர்ச்சியைக் கண்டன. பல சந்தர்ப்பங்களில் தமிழ் அரசியல்வாதிகள் அர்த்தமில்லாத ஐம்பதுக்கு ஐம்பது போன்ற கோரிக்கைகளை வைத்துத் தமிழ் அரசியலை வகுப்புவாதக் குட்டைக்குள் இழுத்துச் சென்றனர். இந்தக் காலகட்டத்தின் தமிழ்க்கலாச்சார மறுமலர்ச்சி, அரசியல் பற்றிப் பிறதொரு கட்டுரையில் ஆராயப்படும். இங்கு சுருக்கமாக ஒன்றைக் குறிப்பிடுதல் பயன்தரும். சிங்கள பௌத்தவாதத்தின் செல்வாக்கு அரசியலில் வளர்ந்த அதே கட்டத்தில் அதற்கெதிரான தமிழ் வகுப்புவாதமும் தோன்றியது. தமிழ் சட்டசபை அரசியல் தலைவர்கள் சிங்கள வகுப்புவாதம் தம்மினத்தவர்களின் பொருளாதார சமூக நலன்களைத் தாக்குவதை எதிர்த்த வழிவகைகள் வகுப்புவாதப்போக்குள்ளவையாய் மட்டுமல்லாது சில சந்தர்ப்பங்கலில் காலனித்துவ ஆட்சிக்குச் சாதகமானவையாயும் இருந்தன. கண்டிய சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர், தமிழர், சோனகர் எனப் பிரித்தாண்ட காலனித்துவ அரசியலில் இந்தப் பிரிவுகள் எல்லாவற்றிலும் வெள்ளையாட்சியின் விசுவாசிகள் பல்வேறு நோக்கங்களுடன் இருந்தனர். ஆயினும் 1931 சர்வஜனவாக்குரிமை குறிப்பாகச் சிறுபான்மையினருக்கென எதையும் வழங்கவில்லை. சிங்கள- தமிழ்- முஸ்லீம் வலதுசாரிகளின் (பொன். இராமநாதன்,T.B.ஜாயா உட்பட) எதிர்ப்பின் மத்தியில் அமுலான சர்வஜன வாக்குரிமை பொப்பியூலிஸ்ட்(Populist) போக்கினைக் கொண்ட இனவாத அரசியலுக்கும் களம் அமைக்க உதவியது. தொழிலாளர் வர்க்க கட்சிகள் இந்த உரிமையை இடதுசாரி இயக்கத்தை

வளர்க்க உதவும் கருவியாகப் பயன்படுத்த விழைந்தன.

1931-1948 இடைக் காலத்தில் இலங்கை தேசிய காங்கிரசுக்குள் S.W.R.D.பண்டராநாயக்க தலைமையில் இயங்கிய சிங்கள மகாசபை தர்மபாலா காலத்தில் வலுப்பெற்ற சிங்கள பௌத்தவாதத்தினைத் தன் கருத்தமைவாக்கிப் பிரச்சாரம் செய்தது. முதலில் சிங்களவரை ஒன்று திரட்டி அவர்களின் தனித்துவத்தைப் பலப்படுத்திய பின்னரே இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைப் பெற முடியும் என்று தனக்கேயுரிய பாணியில் பண்டாரநாயக்க வாதாடினார். இப்படிக் கூறுவது இன அடிப்படையிலான தனித்தனி அரசியல் ஸ்தாபனங்களை நியாயப்படுத்துவதாகும். உண்மையில் பண்டாரநாயக்க அத்தகைய கருத்தினை1939ல் ஆதரித்தார்[16]. அவருடைய இனஅடிப்படை ஒற்றுமைக் கொள்கை என்பது நடைமுறையில் பெரும்பான்மையின் இனவாத ஒருமைப்பாட்டிற்கூடாக பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றும் ஒரு மார்க்கம் என்பதை பின்னைய சம்பவங்கள் காட்டின.

1931-1948 கால வெளியில் இடம்பெற்ற ஓர் முக்கிய அரசியல் நிகழ்வு 1948 ல் இலட்சக்கணக்கான தோட்டத்தொழிலாளர்கள் D.S.சேனாநாயக்க அரசாங்கத்தினால் நாடற்றவர்களாக்கப்பட்டதாகும். ‘ சுதந்திர ஜனநாயக‘ இலங்கையின் ஆரம்ப விழாவின் பேரிகையின் ஓசை ஒரு புறம், மலையகத்தமிழரின் அடிப்படை உரிமை இழப்பின் ஓலம் மறுபுறம். வாக்குரிமை பெற்றிருந்த தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் தலைவர்கள் அறுவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பினர். மற்றும்14 தொகுதிகளில்

16 K.M. De Silva (ed) op.cit

D.S.சேனாநாயக்கவின் யு.என்.பிக்கு எதிராகத் தம் வாக்குகளை வழங்கி முற்போக்காளரை வெற்றி பெறச் செய்தனர். இந்தத் தேர்தலின் பின் இடம்பெற்ற கண்டித் தேர்தலில் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகளின் உதவியோடு அப்போது சோஷலிசவாதியாக இருந்த T.B இலங்கரத்தினா வெற்றி பெற்றார். வழமையாக கண்டிய சிங்கள பௌத்த நிலவுடைமையாளர்கள் அரசியல் அதிகாரம் செலுத்திய பிரதேசங்களில் இத்தகைய தமிழ்ச் செல்வாக்கும் யு.என்.பி எதிர்ப்பும் வளர்வதைக் கண்டிய சிங்கள உயர்வர்க்கமும் D.S. சேனாநாயக்கவும் விரும்பவில்லை. ஆகவே 1948ல் சுதந்திர இலங்கையின் பிரதமரான சேனாநாயக்க மலையகத் தமிழர்களை ஒரு அற்ப சட்டத்தின் மூலம் நாட்டற்றவர் ஆக்கிவிட்டார். சிங்களஇனவாத அரசியலின் வளர்ச்சியில் 1915ம் ஆண்டையும் விட 1948ன் இரத்தம் சிந்தாத வெற்றி மிகவும் முக்கியம் பெறுகிறது[17].

1948 பிரஜாவுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து 1949ல் இந்திய மற்றும் பாகிஸ்தானிய வதிவிடவாளர்களின் பிரஜாவுரிமை தொடர்பான இன்னொரு சட்டம் வந்தது. இது இவர்கள் இலங்கைப் பிரஜாவுரிமை கோருவதற்கான

17 தோட்டத்தொழிலாளர்கள் நாட்டற்றவர்களாக்கப்பட்ட அரசியல் பின்னணி பற்றிய விளக்கத்தை ஏறக்குறைய 20 வருடங்களுக்கு முன் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான நா. சண்முகதாசன் நடத்திய ஒரு அரசியல் வகுப்பில் முதன் முதலாகக் கேட்டேன். இது பற்றிய அவரது சமீபத்திய பின்வரும் கட்டுரையைப் பார்க்கவும். N.Shanmugathasan-The Plight of the Plantation Worker and the Role of Thondaman. Saturday Review April 30, 1983

இந்தக் கட்டுரையோடு சில விடயங்களில் முரண்படும் பின்வரும் கட்டுரையையும் பார்க்கவும். T.Subramaniam, Is Sri Lanka A Slave- owning Democracy; Saturday Review May 21, 1983.

மிகக் கடினமான நிபந்தனைகளை விதித்தது. நீண்டகாலம் இலங்கையில் தொடர்ச்சியான வசிப்பு, வருமான மட்டம் போன்றவை இதில் அடங்கும். அந்தக் காலத்தில் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் இடைக்கிடை இந்தியாவிற்குச் செண்ரு திரும்புவது வழக்கம். இதனாலும் அவர்களின் குறைந்த வருமானத்தாலும் 1949ல் வந்த சட்டத்தின் நிபந்தனைகளை அவர்களால் பூர்த்தி செய்யமுடியவில்லை. 1948 சட்டத்தை அப்போது சேனாநாயக்க அரசங்கத்தில் மந்திரியாயிருந்த C. சுந்தரலிங்கம் ஆதரித்து வாக்களித்தார். G. G. பொன்னம்பலமும் அவரின் கட்சியினரும் எதிர்த்து வாக்களித்தனர். சுந்தரலிங்கம் 1949 சட்டத்தை எதிர்த்து வாக்களித்துத் தனது பதவியிலிருந்து வில்கினார். பொன்னம்பலம் தன் இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக ஆதரித்து வாக்களித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் செல்வநாயகம் தலைமையில் ஒரு குழுவினர் தமிழ் காங்கிரசிலிருந்து விலகி தமிழ் அரசுக் கட்சியை அமைத்தனர்.

அப்போது அரசியல் செல்வாக்குள்ள வடக்குத் தமிழ்த் தலைவர்கள் சிலரின் ஆதரவுடன் மலையகத் தொழிலாளர்களின் உரிமையை யு.என்.பி அரசு பறித்தது. தோட்டத் தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்பட்டதை இடதுசாரிகள் தீவிரமாகப் பாராளுமன்றத்தில் எதிர்த்தனர். ஆயினும் இந்த ஜனநாயக விரோதச் சட்டத்திற்குப் பரந்த எதிரிப்பினை நாட்டில் காட்ட ஒரு இயக்கமும் தயாரக இருக்கவில்லை. இந்தியப் பத்திரிரிகையாளர் பிராங் மொறாயஸ் என்பவர் தனது நூலொன்றில் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை பற்றி S.W.R.D பண்டார நாயக்க கூறியவற்றை வெளியிட்டுள்ளார். ‘இலங்கையிலுள்ள இந்தியர்கள்‘ தெற்கைத் தவிரந்த வேறு எந்தப்

பகுதியிலிருந்து வந்திருந்தாலும் நாம் பிரச்சனையைத் தீர்த்து வைத்திருப்போம்[18].

இவ்வாறு பண்டார நாயக்க கூறியிருப்பது சேனாநாயக்க போன்ற சிங்களத் தலைவர்களின் சிந்தனையையும் விளக்கவில்லையா? சிங்கள இனவாதம் நூறு வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தின் இயக்க சக்தியாய் விளங்கிய தோட்டத்தொழிலாளர் மீது நடத்திய இரத்தம் சிந்தாத 'பாரளுமன்ற பயங்கரவாதத்துடன்' சுதந்திர இலங்கையின் அரசியல் வாழ்வு ஆரம்பித்தது.

கண்டிய சிங்கள பிரதேசவாதிகள் தமிழ் தொழிலாளர்கள் சிங்கள மண்ணில் வாழ்ந்து சிங்கள விவசாயிகளின் வேலை வசதிகளைப் பறித்துக் கொண்டனர் என்ற பிரச்சாரத்தையும் ஆரம்பித்தனர். இத்தகைய பிரச்சாரத்தின் வெளிப்பாடுகளை 1951ல் வெளிவந்த கண்டிய விவசாயிகள் ஆணைக்குழுவின் அறிக்கையிலும் காணலாம். இந்த உயர்மட்ட அரசாங்க ஆணைக்குழுவின் கருத்தில்,

நவீனகால இந்தியப் படையெடுப்பு - இந்தியத் தோட்டத் தொழிலாளரின் படையெடுப்பானது- பண்டைக் காலத்தில் தமிழர் தென் இந்தியாவிலிருந்து நடத்திய படையெடுப்பு 13ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஸ்தாபிக்கும் உச்சநிலையை அடைந்து தீவின் வரலாற்றல் பெற்ற முக்கியத்துவத்தையும் விடக் குறைந்த முக்கியத்துவம் கொண்டதல்ல[19].

18 Cited in T.Subramaniam above

19 Report of the Kandyan Peasantry Commission Government Press 1951, p 70

ஆணையாளர்களின் இந்தக் கருத்து தமிழர்களை எப்போதுமே ஆக்கிரமிப்புடனும், படையெடுப்புடனும் தொடர்பு படுத்திப் பார்க்கும் சிங்கள பௌத்தவாதத்தின் பார்வையின் விளைவே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தோட்டத்தொழிலாளர்கள் நாடற்றவர்களாகப்பட்டதிற்கு இத்தகைய உயர்மட்ட அரச நிறுவனங்களின் கருத்துக்கள் வலிந்து நியாயம் வழங்குவது மட்டுமல்லாது அவர்கள் உண்மையிலேயே அப்புறப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்ற ஒரு மறைமுக நியாயப்பாட்டினையும் தருகின்றன.

தோட்டத் தொழிலாளர் இன அடிப்படையில், அரசியல் ரீதியில் வேண்டாதவர்களாயிருந்த அதே நேரத்தில் அவர்களின் உழைப்பு இலங்கையின் சுரண்டல் அமைப்புக்கு வேண்டியிருந்தது. உழைப்பு இயந்திரங்களாக அவர்களைப் பயன்படுத்தினர். 1948ன் உரிமையிழப்பு அவர்களின் சுரண்டலை மேலும் அதிகரிக்க உதவியது. பிரிட்டிஷ் காலத்திய சுமைகளுடன் இப்போது அரசியல் அந்தஸ்து அற்றவர்கள் என்ற கூடுதலான சுமையும், அவர்களை அழுத்தியது. முன்பை விட உரிமைகள் மேலும் பறிபோயின. இன அடிப்படையில் ஒதுக்கப்பட்டு வர்க்க அடிப்படையில் சுரண்டப்பட்டு மனித உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு கூட்டம்தான் தோட்டத் தொழிலாளர்கள்.

**சுதந்திரத்திற்குப் பின் பெருந்தேசிய இனவாதத்தின் ஸ்தாபனமயமாக்கல்**

மனிதர்களே வரலாற்றினை உருவாக்குகிறார்கள் என்று குறிப்பிட்ட மார்க்ஸ், மனிதர்கள் தாமே தேர்ந்தெடுத்த சூழ்நிலைகளில் இதைச் சாதிப்பது சாத்தியமில்லை என்றும் கூறினார். ஏற்கனவே வரலாறு கையளித்த நிலைமைகளுக்குள்ளேயே அரசியல் போக்குகள் இயங்குகின்றன. இலங்கையின் 1948 சுதந்திரத்திற்குப்

பின்பான வரலாறு பொதுவாக இலங்கையின் அபிலாஷைகளைப் பொறுத்தவரை மிகவும் ஏமாற்றம் தருவதாய் அமைந்துவிட்டது. சிறுபான்மை மக்களையும் இடதுசாரி இயக்கத்தையும் பொறுத்தவரை கடந்த மூன்று தசாப்தங்களின் மொத்த விளைவு துக்ககரமானது. இந்தக் காலகட்டத்தில்தான் சிங்கள பௌத்த தேசியவாதம் சிங்களப் பெருந்தேசிய இனவாதமாகப் பூரணமான ஸ்தாபன ரீதியான வளர்ச்சியையும் ஆட்சிச் செல்வாக்கையும் பெறுகிறது.

1956ம் ஆண்டு சில முக்கிய காரணங்களினால் 1948ஐ முக்கியத்துவமிழக்கச் செய்தது. ஒருபுறம் இது நீண்டகால சிங்கள இனவாதக் கனவுகளை நனவாக்கும் காலத்தின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தியது. மறுபுறம் இது சகல மக்களையும் தழுவிய சில ஜனநாயக உரிமைகளின் முகிழ்ப்பினையும் அறிவித்தது.1956 எனும் போது S.W.R.D பண்டாரநாயக்கவின் முரண்பாடும், சந்தர்ப்பவாதமும், ஈடாட்டமும் மிகுந்த அதே நேரத்தில் வெகுஜனக் கவர்ச்சியும் அரசியல் அறிவும் மிகுந்த ஆளுமையே அரசியில் அரங்கின் மையத்தே தெரிகிறது. இந்த ஆளுமையே ஒரு யுகத்தின் சிக்கலின் பிரதிபலிப்பு. இங்கே ஒரு சாரார் புதுமையைக் கண்டனர். மற்றொரு சாரார் புதுமையைத் தடைசெய்யும் கற்பனை மிகுந்த பயங்கரமான பழமையின் பலப்படுத்தலின் அறிகுறிகளைக் கண்டனர். 1956க்குப் பின் வரலாறு எப்படி நகர்கிறது என்பதை நாம் காண்கிறோம், அனுபவிக்கிறோம். இதைப் பற்றி பார்க்குமுன் 1956க்கு முந்திய சில சம்பவங்களைச் சற்று நினைவுகூருதல் பயன்தரும்.

1951ல் பண்டாரநாயக்க யு.என்.பியிலிருந்து வெளியேறி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அமைத்தார். இவரின் வெளியேற்றத்திற்குக் கொள்கை வேறுபாடுகளையும் விடத் தனிப்பட்ட அரசியல் நோக்குகளே காரணம் என இவரது

சமகால யு.என்.பி முக்கியஸ்தர்கள் கூறியுள்ளார்கள். தனக்குப் பிரதமராகும் வாய்ப்புக்கள் சேனாநாயக்க குடும்பத்தின் ஆதிக்கம் அந்தக் கட்சியிலிருக்கும் வரை மிகக் குறைவு என பண்டாரநாயக்க உணர்ந்திருக்கலாம். D.Sசேனாநாயக்க அவருடைய மகனான டட்லியைப் பிரதமராக்கப் பல ஆயத்தங்களையும் செய்து கொண்டிருந்தார். புதிய கட்சி -சிறிலங்கா சுதந்திரக்கட்சி (சு.க)- அமைத்த போது யு.என். பியிடமிருந்து வேறுபட்ட சில கொள்கைகளையும் கையாண்டார். இவற்றை இவர் தேர்ந்த விதமும் அவற்றிற்கு வடிவம் கொடுத்த முறையும்அவருடைய அரசியல் உணர்வுத்திறனையும் தந்திரத்தினையும் காட்டின. பொதுமக்களுக்கு நெருங்கிய அர்த்தமுள்ள ஒரு அரசியல் பிரச்சாரத்தை இவர் மேற்கொண்டார்.

1951ல் சு.க ஆங்கிலத்தில் வெளியிட்ட அதன் கொள்கைப் பிரகடனத்தைப் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியம். சிங்கள தமிழ் மொழிகளுக்கு சமத்துவ உரிமை,வெள்ளையர் உடைமைகள், தளங்கள் தேசியமயமாக்கல், விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தி, தேசிய கலாச்சார விருத்தி இவை போன்ற ஜனநாயகக் கொள்கைகளை சு.க முதலில் வெளியிட்டது. கட்சியின் ஆரம்பகர்த்தாக்களில் தமிழர்களும் இருந்தனர். உப தலைவராக ஒரு தமிழர் தெரியப்பட்டார். ஆனால் இரண்டே வருடங்களுக்குள் - 1953 ல் பண்டாரநாயக்கவின் மொழிக்கொள்கை முழு மாற்றம் பெற்றது. 1956 பாராளுமன்றத்தேர்தலை மனதில் கொண்டு இயங்கிய அவரது கட்சி ஆட்சியமைக்கக் கூடிய பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் மார்க்கத்தைப் பற்றியே கண்ணாயிருந்தது. சிங்கள பௌத்தர்களே பெரும்பான்மையினர். இவர்களில் பெரும்பான்மையினர் கிராமப் புறங்களில் வாழ்ந்தனர். சிங்களப் பொதுமக்களின் ஆதரவைப் பெற அவர்கள் மீது

ஆழ்ந்த செல்வாக்கினைக் கொண்டிருந்த மரபு ரீதியான நிறுவனங்களின் உதவியை அவர் நாடினார். புத்தமத குருக்கள், கிராமத்துப் பள்ளி ஆசிரியர்கள், உள்நாட்டு வைத்தியர்கள், செல்வாக்குக் கொண்ட விவசாயிகள் இவருடைய அரசியல் கருவியாகினார்கள். அதேநேரத்தில் அவரும் இந் நிறுவனங்களுக்குள் அதி செல்வாக்கு மிகுந்த பிக்கு பெரமுன(பிக்குகள் முன்னணி) வின் கருவியானார். 1953ல் சிங்கள மட்டும் அரச கரும மொழியாதலே தன் முதல் இலட்சியமென சுதந்திரக்கட்சி பிரகடனப் படுத்தியது. கிறிஸ்துவ - ஆங்கில ஆதிக்கம் ஒழிய, ஆங்கிலத்துக்கூடாக சிங்களவரல்லாதோர் செலுத்தும் ஆதிக்கம் ஒழிய, சிங்களப் பொதுமகன் தன் உரிமையான மண்ணில் சுதந்திரமடைய இதுவே வழியெனப் பிரச்சாரம் ஆரம்பித்தது.

பிறப்பால் நிலப்பிரப்புத்துவ, வெள்ளையாட்சியின் நெருங்கிய சகாவான கிறிஸ்துவக் குடும்பத்தைச் சேர்ந்த பண்டாரநாயக்க, இங்கிலாந்தில் வாழ்ந்து கல்வி கற்று ஐரோப்பிய மயப்படுத்தப்பட்டவர். இவர் சிங்கள பௌத்தரானார். சிங்கள தேசிய உடையை அணிந்தார். அவருடைய புகழ் வாய்ந்த நாவன்மையால் சிங்கள இனவாதப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார். அவருடைய பிரச்சாரம் வெறும் சுலோகங்களல்ல. சிங்களப் பொதுமகனின் சகாப்தத்தைத் தோற்றுவிக்க, மொழிக்கும் மதத்திற்கும் முதலிடம் கொடுத்து ஒரு சிங்கள பௌத்த ‘சோஷலிஸ ஜனநாயக்கதை’ ஏற்படுத்தப் போவாதாக அவர் பிரச்சாரம் செய்தார். கல்வி, தொழில், கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் சிங்கள பௌத்தர்களுக்கு ‘உரிய இடம்‘ என்ற அவரது உறுதிமொழி அநகாரிக தர்மபாலாவின் கனவுகளை நினைவூட்டின. தர்மபாலா சமகால மயப்படுத்தப்பட்டார்.

இலங்கையை அதன் 'உரிமையாளர்களான' சிங்கள பௌத்தவர்களுக்கு மீட்டுக் கொடுப்பது என்ற கோஷத்தைப் பரந்த மட்டத்தில் சிங்களப் பொதுமக்களுக்கு நெருங்கிய மரபு ரீதியான நிறுவனங்களுக் கூடாக முன்வைத்ததன் மூலம் பண்டார நாயக்க யு.என்.பியை விடப் பல படிகள் முந்திக் கொண்டார். அத்துடன் தரகு முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்த யு.என்.பி செய்யத் துணியாத சிலவற்றையும் பண்டாரநாயக்க செய்வதாக உறுதிப் படுத்தினார். பிரிட்டிஷ் தளங்களை அகற்றல், தேசியமயமாக்கல், தொழிற்சங்க உரிமைகளை மேலும் ஜனநாயகமயப்படுத்தல், கூட்டுச்சேரா வெளிநாட்டுக் கொள்கை போன்றவை யு.என்.பியினால் எண்ணிப் பார்க்க முடியாத கொள்கைகளாயிருந்தன. பண்டார நாயக்க தர்மபாலாவின் ஆத்மாவைப் பின்பற்றிய அதே நேரத்தில் ஒரு நவீன சிங்கள பௌத்தவாதியாயுமாயிருந்தார். மேல் நாட்டுக் கல்விக் கூடாகப் பெற்ற பூர்ஷ்வா லிபரல் கருத்துக்களை அவர் தன் அரசியல் கொள்கைகளை வகுக்க நன்கு பயன்படுத்தினார். தர்மபாலாவின் தோள்களில் அமர்ந்திருந்த பண்டாரநாயக்க தன் சமகாலத்து சமூகத்தின் அரசியல் தேவைகளைப் பற்றிய கணிசமான கிரகிப்பைக் கொண்டிருந்ததால் அவரால் சிங்கள பௌத்தவாதத்திற்கு மேலும் வலுவளிக்க முடிந்தது. இதுவே அவரின் சந்தர்ப்பவாதம். இதுவே அவரின் பலம். இதுதான் அவரின் கொலைக்கும் வழிவகுத்த பயங்கரப் பலவீனமும் என்றால் மிகையாகாது.

முழுக்க முழுக்க சிங்கள பௌத்தத் தோற்றத்துடன் பண்டார நாயக்கவின் தலைமையில் அமைந்த புதிய கூட்டான மக்கள் ஐக்கிய முன்னணி 1956ல் தேர்தல் களத்தில் இறங்கியது. இந்தக் கூட்டில் இலங்கையின் மார்க்சிச இயக்கத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் பிலிப் குணவர்த்தனாவின் புரட்சிகர சமசமாஜக்கட்சி அங்கம் வகித்தது. தமிழர்களைக் காலிமுகத்

திடலில் போட்டுத் தோலுரிப்பேன் என்று சபதம் செய்த K.M.P ராஜரத்தினாவின் குழுவும் இதில் சேர்ந்திருந்தது. சிங்கள பௌத்தத்தை 2500 வருடங்கள் பேணிக் காத்தவர்கள் என்ற புனிதப் பெருமைக்குள்ளான புத்த சங்கத்தின் பிக்கு பெரமுனவே பிரச்சாரத்தின் முக்கிய சக்தியாய் விளங்கியது.

1953 ஆகஸ்ட் 12ம் திகதி யு.என்.பி அரசுக்கெதிராக இடதுசாரிகள் மாபெரும் ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்தினர். இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கண்டனர். ஏழுபேருக்கு மேல் உயிரிழந்த இந்த ஒருநாள் போராட்டத்தின் எழுச்சி டட்லி சேனநாயக்கவைப் பிரதமர் பதவியிலிருந்து இராஜினமாச் செய்ய வைத்தது. அரிசி விலையேற்றமே ஹர்த்தாலுக்குக் காரணமாக இருந்தது. சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்னின்று தலைமை தாங்கிய இந்த ஹர்த்தாலில் பண்டார நாயக்க குறிப்பிடத்தக்க ஒரு பங்கையும் வகிக்கவில்லை. ஆனால் யு.என். பி எதிர்ப்பினை உயர் மட்டத்துக்கு எடுத்துச் செல்ல உதவிய இந்தப் போராட்டத்தின் பரிசை அவரே 1956ல் தட்டிக் கொண்டு போய்விட்டார். பிலிப் குணவர்த்தனா போன்ற பிரபல இடதுசாரித் தலைவர் ஒருவரும் அவருடைய அணியில் 1956ல் இருந்ததும் அவருக்கு மிகவும் சாதகமாயிருந்தது. சிங்கள பௌத்தமும் சோஷலிசமும் இணைந்தது போல் அந்தக் காட்சி பொதுமக்கள் கண்களுக்குப் பட்டது போலும். இந்த இணைவு குறியீட்டு முக்கியம் வாய்ந்தது.

1956 தேர்தலில் சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமஉரிமை என்ற கொள்கையை முன்வைத்தனர். பண்டாரநாயக்கவின் இருபத்திநாலு மணித்தியாலங்களில் சிங்களம் மட்டும் என்ற கர்ஜனை 1953க்குப் பின் எழுந்த போது யு.என்.

பியும் தனது கொள்கையும் சிங்களம் மட்டுமே என்று கூற ஆரம்பித்தது. ஆனால் இன்னும் அகற்கிருந்த தமிழ்ப் பகுதித் தொடர்புகளும் அதன் கிறிஸ்துவ ஆங்கில வெளித் தோற்றங்களும் யு.என். பிக்கு உண்மையான சிங்கள பௌத்தத் தோற்றத்தைக் கொடுக்கவில்லை. மக்கள் ஐக்கிய முன்னணியோடு ஒப்பிடும் போது யு.என்.பி ஓர் பரிசுத்தமற்ற, கவர்ச்சியற்ற தோற்றத்தையே கொண்டிருந்தது. யு.என். பித் தலைவர்களில் அந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா மட்டுமே தேசியஉடையில் காட்சியளித்தார். ஆனால் ஜெயவர்த்தனா வெகுஜனக் கவர்ச்சியைப் பொறுத்தவரை பண்டாரநாயக்கவுடன் ஒப்பிடக் கூடியவரல்ல. முன்பு குறிப்பிட்டது போல் பல கராணங்களால் 1956ன் அரசியல் திருப்பத்தைச் சாதிக்கக் கூடிய நிலையில் யு.என்.பி இருக்கவில்லை. எல்லா நிலைமைகளுமே பண்டாரநாயக்கவின் தலைமைக்குச் சாதகமாயிருந்தன.

மக்கள் முன்னணி வெற்றி பெற்றது. சிங்கள பௌத்த பொதுமக்கள் ' அப்பே ஆண்டுவ' (நமது அரசாங்கம்) எனக் கோஷமிட்டு வீதிதோறும் வலம் வந்து தம் ஆர்ப்பரிப்பைக் காட்டினர். பண்டாரநாயக்கவின் வெற்றி இந்த மக்களைப் பொறுத்தவரை ஓரு நூற்றாண்டின் கனவு நனவாகியது போல். இதுவரை எதுவித அந்தஸ்துமின்றி ஆங்கில கிறிஸ்துவ ஆதிக்கத்தின் கீழ் வீழ்ந்து கிடந்த தம் மொழியும் மதமும் ஆட்சிபீடம் ஏறிவிட்டன என்ற எக்காளம் மிஞ்சி வழிந்தது. இத்தகைய ஒரு மனோநிலை வெகுஜன மட்டத்தில் வெளிப்படையானது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரச்சாரத்தின் தாக்கத்தினையும் நன்கு புலப்படுத்தியது. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களே பொதுமக்களின் அரசியல் பள்ளிக்கூடங்களோ எனக் கருதும் வகையில் அவர்கள் அறிவூட்டப்பட்டிருந்தனர். 'அப்பே ஆண்டுவ' ஆர்ப்பரிப்பில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகள் பளிச்சிட்டன. ஆனால்

‘ சிங்களம் மட்டும் ‘ கோஷம் தமிழ் மக்களையும் இதில் பங்குபற்ற முடியாத நிலைக்குத் தள்ளிவிட்டது.

இடதுசாரிகள் தமிழுக்கும் சமஉரிமை என்ற கொள்கையை முன்வைத்த போதும் தமிழ்ப் பிரதேசங்களில் அவர்களால் ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே பெறமுடிந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் பொன். கந்தையா பருத்தித்துறையில் வெற்றி பெற்று இலங்கையின் முதலாவது தமிழ் இடதுசாரி எம் பியானார். சமஷ்டிக் கட்சியும்( தமிழரசுக் கட்சியும்) தமிழ் காங்கிரசும் தமிழ்ப் பகுதியில் வெற்றி பெற்றன. தமிழரசுக் கட்சியினரின் தேர்தல் பிரச்சாரங்களில் மக்கள் ஐக்கிய முன்னணியின் பெரும்பான்மை இனவாதத்திற்குப் பதில் கொடுப்பது போல் தமிழ் இனவாதம் அமைந்திருந்தது.

1956 யூன் மாதம் ‘ சிங்களம் மட்டும்‘ சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மிகவும் சுருக்கமாக ஒரு சில வரிகளில் எழுதப்பட்டிருந்தது இந்தச் சட்டம். இடதுசாரிகளும் தமிழ் அங்கத்தவர்களும் சட்டத்தை எதிர்த்து வாதாடி வாக்களித்தனர். தமிழ் அங்கத்தவர்கள் பாராளுமன்றத்திற்கு முன்னே காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். அரசாங்க ஆதரவாளர்களான சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டனர். அன்று சிறிய அளவில் நடந்த அந்தத் தாக்குதல் வரப்போகும் இரத்தக்களரியையும் சாம்பலையும் அறிவிப்பது போல் அமைந்துவிட்டது. மறுபுறம் சிங்களம் மட்டும் சட்டம் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பத்தை அறிவித்தது. குட்டி முதலாளி வர்க்கத்தினதும் பெரும் சொத்துடமைகளற்ற சிங்கள பௌத்தவாதப் புத்திஜீவிகளினதும் அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்தும் ஒரு திருப்புமுனையாகிறது அந்தச் சட்டம். இதுவரை எழுந்து நிற்கத் திராணியற்றிருந்த ஒரு தேசிய முதலாளி வர்க்கத்தின் நலன்களையும் புதிய அரசு

பிரதிபலித்தது. ஆனால் அரசின் பொருளாதாரக் கொள்கை அதற்குள் அரசியல் பலம் கொண்டிருந்த குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும் அதன் புத்திஜீவிகளினதும் நலன்களையே கூடுதலாகப் பிரதிபலித்தது.

தேசியமயமாக்கல் மூலமும் வெளிநாட்டு உதவியுடனும் புதிய அரசுசார் பொருளாதாரத்துறை ஒன்றினை விருத்தி செய்வதில் பண்டாரநாயக்க அரசாங்கம் கவனம் செலுத்தியது. இதன் மூலம் இரண்டு உடனடி நோக்கங்களை மக்கள் ஐக்கிய முன்னணி அரசு நிறைவேற்ற விழைந்தது. ஒன்று தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதாரப் பலத்தைக் கட்டுப்படுத்தல், மற்றது வளரும் புதிய அரச கூட்டுத்தாபனங்களில் முடிந்தவரை அரசாங்கத்துக்குச் சார்பான சிங்கள பௌத்த புத்திஜீவிகளுக்குமம் கீழ்மட்ட ஆதரவாளர்களுக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்குதல். அரச கூட்டுத்தாபனங்களே புதிய சிங்கள பௌத்த உணர்வுள்ள முகாமையாளர்களை உருவாக்கும் கூடங்களாயின. இத்தகைய அரச முதலாளித்துவம் தோன்றச் சில புறநிலைக் காரணிகள் இருந்தன. சில முக்கிய உற்பத்தித் துறைகளுக்கு வேண்டிய மூலதனக் குவியலும் ஈடுபாடும் தனியார் துறையில் இருக்கவில்லை. அரசின் நேரடி உதவியுடன் தனியார்துறை இந்தத் துறைகளுக்குள் செல்லக்கூடிய கொள்கை ரீதியான சாத்தியப்பாடுகள் இருந்தன. ஆயினும் பண்டார நாயக்க அரசு அந்த வழியைப் பின்பற்றவில்லை. அரச மூலதனம் மட்டுமே இருந்த முதலீட்டுச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியது. இந்த நடவடிக்கை தரகு முதலாளி வர்க்கத்தை எதிர்ப்பதாக, கட்டுப்படுத்துவதாக அமைந்த போதும் அதன் தன்மையை மாற்றுவதாக அமையவில்லை. ஆயினும் மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனரஞ்சக அரசியலுக்கு இது தற்காலிகமாகப் பயன்பட்டது. அரச முதலாளித்துவத்துறையின் வளர்ச்சி குட்டி முதலாளி வர்க்கப் புத்திஜீவிகளின் அபிலாஷைகளைத்

திருப்திப்படுத்துவதாக அமைந்தது. இவர்கள் இந்தப் பொருளாதாரப்போக்கினை ‘சோசலிஷம்’ என்றும், 1956ல் ஒரு இரத்தம் சிந்தாதபுரட்சி ஏற்பட்டதென்றும் பிரச்சாரம் செய்தார்கள்.

பண்டார நாயக்க அரசின் பொருளாதாரக் கொள்கைகள் இலங்கையின் குறைவிருத்தியைப் போக்க வழிவகுக்கவில்லை என்பதை அனுபவ ரீதியாக நாம் அறிந்துள்ளோம். ஆனால் இலங்கையின் பாராளுமன்ற அரசியல் கட்டுக்கோப்புக்குள் யு.என்.பி செய்யத் தயாராயில்லாத ஒன்றை ம.ஐ.மு 1956ல் செய்யத் தயாராயிருந்தது. இந்த வேறுபாட்டினை நினைவுகூருதல் அவசியம். தேர்தல் அரசியலுக்கு உதவக்கூடிய ஒரு பொருளாதாரக் கொள்கை அளவு ரீதியிலும் செல்வாக்கிலும் முக்கியத்துவம் பெறும் குட்டி முதலாளி வர்க்கத்துக்கும், அதன் புதிய புத்திஜீவிகளுக்கும் உடனடியான நன்மைதருவதாக இருக்க வேண்டும். தரகுமுதலாளி வர்க்கத்தின் நலன்களைக் குறிப்பிடத் தகுந்தளவு தியாகம் செய்தே இதை அன்றைய நிலையில் அடைய முடியும். யு.என். பியின் வர்க்கப் பிணைப்புகள் தேசியமயமாக்கலையும் அரசகூட்டுத்தாபனங்களை அமைத்தலையும் ஏற்க முடியாக் கொள்கைகளாக்கின. 1956ல் யு.என்.பியின் அரசியல் பாங்கு இலங்கை நிலைமைகளில் சற்றுப் பின்னடைந்ததாயிருந்தது. இதைப் பின்னர் அதன் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். அதற்கமைய அவர்கள் தமது கட்சிக்குப் புதிய தோற்றத்தையும் கொடுத்தனர்.

பண்டாரநாயக்க அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை சோஷலிச நாடுகளின் ஆதரவைப் பெற்றது. 1956 க்குப் பின்புதான் இலங்கை சோஷலிச நாடுகளுடன் இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. இதன் விளைவாக சோஷலிச நாடுகளின் பொருளாதார உதவிகள்

வரத் தொடங்கின. இவை அரச கூட்டுத்தாபனங்களின் வளர்ச்சிக்கு உதவின. ஆயினும் அரச முதலாளித்துவத்துறை பெரும் பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறியது. இந்தக் கூட்டுத்தாபனங்களின் செயற்பாடுகள் பொருளாதார அமைப்பின் தன்மைகளையும் இயக்கத்தையும் மாற்றத்தவறின. 1970 களில் இந்த நிலைமை நன்கு தெளிவாகியது. இதுவே 1977ல் வந்த பொருளாதாரக் கொள்கையை நியாயப்படுத்தியது.

சிங்கள பௌத்தவாதமும் பொருளாதாரக் கொள்கையும் இணைந்த இன்னொரு முக்கிய பகுதி விவசாயக் குடியேற்றத் திட்டங்களாகும். வரண்ட பிரதேசத்தில் காடுகள் வெட்டப்பட்டு, நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு நீர்ப்பாசன வசதிகளுடன் அரச செலவில் நிலமற்ற விவசாயிகளைக் குடியேற்றும் கொள்கை சுதந்திரத்திற்கு முன்பிருந்தே ஆரம்பித்திருந்தது. 1938ம் ஆண்டில்தான் இந்தக் கொள்கை அப்பொழுது விவசாய அமைச்சராயிருந்த D.S சேனாநாயக்கவினால் முழு உருப்பெற்றது. சுதந்திரத்திற்குப் பின் சகல அரசாங்கங்களும் இந்தக் கொள்கையைப் பின்பற்றின. சிங்களப் பகுதிகளிலுள்ள பெருநிலச் சொந்தக்காரர்களின் உடமை உறவுகளை மாற்றுவதைத் தவிர்க்கும் ஓர் வழியாகவும் இந்தக் கொள்கை அமைந்தது. நிலமற்ற சிங்கள விவசாயிகளை அரச செலவில் அரச காணிகளில் குடியேற்றும் திட்டங்கள் பல சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே தமிழ்ப் பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றிற்கூடாகக் கீழ்மாகாணத்தில் பெருமளவு புவியியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழ்ப் பிரதேசங்கள் புவியியல் ரீதியான தொடர்பினைப் பல இடங்களில் இழந்துள்ளன.

இந்தக் குடியேற்றத் திட்டங்கள் சிங்கள பௌத்தர்கள் தங்களின் பழைய நாகரீக ஸ்தானங்களுக்குத் திரும்பும் ஒரு சரித்திரக் கைங்கரியமாக ஆளும் கட்சியினால் கருதப்படுகிறது. தமிழர்கள் மத்தியில் குடியேற்றப்படும் சிங்கள விவசாயிகளுக்கு இன ஐக்கியம், சகோதரத்துவம் பற்றிய சிந்தனைகளை ஊட்டுவதற்கு மாறாகச் சிங்களப் பெருந்தேசிய இனவாதச் சிந்தனைகளையே ஊட்டியுள்ளனர் பல சிங்கள் பௌத்த ஸ்தாபனங்களைச் சேர்ந்தோர். பல சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளும் இத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபடுவதுண்டு. விவசாயிகள் மீது கணிசமான செல்வாக்கினை மரபு ரீதியாகக் கொண்டுள்ள புத்த பிக்குகளில் பெரும்பாலானோர் இனம், மதம், நாடு என்ற இனவாதப் போதனையையே செய்வார்கள். புதிய குடியேற்றத்திட்டங்களில் வாழும் சிங்கள மக்களுக்கும் அயல் பகுதிகளின் தமிழ் மக்களுக்கும் முற்றிலும் நல்ல உறவு இல்லையென்று சொல்வதற்கில்லை. அவர்களிடையே ஏற்படும் இயற்கையான நட்புறவைப் பலப்படுத்துவதையும் விட பலவீனமாக்குவதாயும் குரோதத்தை வளர்ப்பதாயுமே பிரச்சாரங்கள் உள்ளன. குடியேற்றத் திட்டங்களினால் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்ட சிங்கள-தமிழ் குரோத உணர்வுகள் பரம்பரையாகப் பல்லாண்டுகள் தமிழ் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்களுடான உறவுகளையும் பாதித்ததுள்ளன. நீண்டகாலம் சகோதரத்துவ உணர்வுடன் வாழ்ந்த சிங்கள-தமிழச் சமூகங்களிடையே புதிய பிரச்சாரங்கள் புகத் தொடங்கிய பின் உறவுகளும் மாறிப்போயின.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையான பிரதேச ஒருமைப்பாட்டினை முறியடிப்பதே அவர்களின் சுயாட்சி, சமஷ்டி, பிரிவினைக் கோரிக்கைகளை முறியடிக்க

மிகவும் உறுதியான வழியென்பதை அரசாங்கங்கள் நன்கு உணர்ந்து செயற்பட்டு வந்திருக்கின்றன. இந்த நீண்ட கால அரசியல் சதியில் நிலமற்ற வறிய சிங்கள விவசாயிகள் பகடைக்காய்களாகவும் பயன்படுகிறார்கள். துரதிஷ்டவசமாகத் தமிழ் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள விவசாயிகளை 'பாதுகாப்பு' என்ற காரணத்தினால் பொலிசாரும் ஆயுதப்படையினரும் தம்வசமாக்கியுள்ளனர். இன ஒதுக்கலின் கருவிகளான இவ்விரு படைகளும் பல சந்தர்ப்பங்களில் சிங்கள விவசாயிகளைத் தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்டுள்ளன. தொடர்ந்தும் இதைச் செய்து வருகின்றன. ஒருபுறம் 'இனம்-மதம்-நாடு' என்ற சிங்கள பௌத்தப் பிரச்சாரம் மறுபுறம் ஆயுதப்படைகளின் தூண்டுதல் இவற்றிற்கிடையே அகப்பட்டுள்ள சிங்கள மக்கள் தமிழர்களை எதிரிகளாகக் கருதுவது இயற்கையே. இனவாதக் கருத்தமைவின் தாக்கம் நண்பர்களை எதிரிகளாகவும் எதிரிகளை நண்பர்களாகவும் மாற்றி விட்டது.

### இனவாதமும் கலாச்சார அமைப்புக்களும்

1956லிருந்து இன்றுவரையிலான வரலாற்றில் சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் மிகவும் ஒழுங்கான தொடர்ச்சியான வளர்ச்சியைக் கலாச்சாரத் துறைகளிலே காணலாம். சிங்களம் அரசகரும மொழியானதைத் தொடர்ந்து சிங்கள, தமிழ் மொழிகள் பாடசாலைகளில் போதனா மொழிகளாயின. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுகம் வரை பாடப்புத்தகங்கள் சுயமொழிகளில் ஆக்கப்படும் பணியினைக் கல்வி அமைச்சு மேற்கொண்டது. பாடநூல்களில் வகுப்புவாதம் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் சில சமீபகாலத்தில் நடைபெற்றுள்ளன. இவை முன்பிருந்தே பொதுவாக நம்பப்பட்ட பல உண்மைகளை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன. இது தொடர்பான ஓர் அறிக்கையையும் சில கட்டுரைகளையும் ஒரு குறிப்பிட்ட

ஆய்வுக்குழுவின் தலைவரான றெஜி சிறிவர்த்தன வெளியிட்டுள்ளார்[20].

இந்த ஆய்வுகளின்படி சிங்களக்குழந்தைகள் தொடர்ச்சியான ஒரு சிங்கள இனவாத சிந்தனை மாற்றத்திற்கு ஆளாகிறார்கள். சிங்கள பௌத்தவாதத்தின் அத்துடன் இணைந்த ஆரியவாதத்தின் அடிப்படையிலான வரலாற்று வியாக்கியானமும் சமூகக் கல்வியும் இளம் தலைமுறைக்கு ஊட்டப்பட்டு வருகின்றது. அதேநேரத்தில் தமிழ்பாடநூல்களில் தேசிய ஒருமைப்பாடு பற்றி அழுத்திக் கூறப்படுகிறது.றெஜி சிறிவர்த்தனாவின் ஆய்வுக்குழுவின் கருத்துப்படி,

> 'தமிழ்ப்புத்தகங்கள் தமிழரல்லாத, இந்துக்கள் அல்லாத மொழி மதப்பிரிவுகளின் வாழ்முறை, கலாச்சாரம் பற்றிய விளக்கத்தையும் அதன் மீது மதிப்பினையும் ஏற்படுத்த விழைகின்றன. அவை ஒரு பொதுத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை முன்வைக்கின்றன. சிங்கள நூல்கள் பிரத்தியேகமாக ஒற்றைக்கலாச்சார (monocultural) உள்ளடக்கத்தையே கொண்டுள்ளன - அதாவது அவை காட்டும் வாழ்முறை முழுக்க முழுக்கச் சிங்களவர்களினது மட்டுமின்றி சிங்கள பௌத்தர்களினது. மற்றய சமூகங்களின் வாழ்முறை, கலாச்சாரம் பற்றிய விளக்கத்தையும் அனுதாபத்தையும் வளர்க்க முயற்சி எடுக்கப்படாதது மட்டுமின்றி இந்த நூல்கள் பூராவிலும் தமிழர்கள் மரபு ரீதியான எதிரியாகவே இனங்காட்டப்பட்டுள்ளனர்[21].'

20 இந்தக் குழுவின் வெளியீடு: School Text Books and Communal Relation in Sri Lanka (Part I Analysis of Text Books). Council for Communal Harmony,23/A Milagiriya Avenu Colombo 4

21 Reggie Siriwardene School Books, Communalism and National unity,

புதிதாக எழுதப்பட்டுள்ள பாடநூல்களிலும் இதே தன்மை தொடர்வதையும் றெஜி சிறிவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு சிங்கள நூலில் தீபாவளி பற்றி ஒரு பாடம் இடம் பெற்றுள்ளது. இது பற்றி சிறிவர்த்தன பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> 'ஒரு புத்தகத்தில் தீபாவளி பற்றி ஒரு பாடம் இருக்கிறது. முதற் பார்வையில் இது தமிழ் இந்துக் கலாச்சாரத்தைச் சிங்களக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் ஒரு வரவேற்க கூடிய புது உத்தி என்றே படுகிறது. ஆயினும் இந்தப் பாடத்தை வாசிக்கும் போது இதில் இருக்கும் ஒரு விடயத்தினால் இந்த நோக்கம் திசை திருப்பப் படுகிறது. தீபாவளி இந்தியாவிலிருந்து வந்த தமிழர்களின் சந்ததியினரான இலங்கையில் வாழும் மக்களால் கொண்டாடப்படுகிறது என்றே குறிப்பிடப்படுகிறது. இந்த வசனத்தில் ஒரேஅடியில் தமிழர்கள் இந்நாட்டைச் சேரா ஒரு வெளியார் என்று சிங்களக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர்'[22] .

சிங்களப் பாடநூல்களின் இந்த ஒற்றைக் கலாச்சார இனவாதம் சார்ந்த போக்கினை மேலும் உரப்படுத்துபவையாக மற்றய கலாச்சாரச் சாதனங்கள் அமைந்துள்ளன.1956க்குப் பின் சிங்கள கலை இலக்கியத்திற்கு விசேஷ ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இதன் ஓர் நல்ல அம்சம் சிங்கள நாடகம், இசை, நடனம் போன்றவை நன்கு வளர்ந்துள்ளன. சிங்கள அரங்கியலின் வளர்ச்சி குறிப்பாக உத்திகள், தமிழ் அரங்கியல் வளர்ச்சிக்கு

Saturday Review February 12, 1983 p.8

22 ibid p.8

உதவியுள்ளன என்பதும் உண்மை. அதே நேரத்தில் இந்த சிங்கள கலை இலக்கிய வளர்ச்சியின்முதலாய செல்வாக்கு மிகுந்த போக்கு சிங்கள பௌத்த இனவாதத்தின் கருவியாகவே அமைந்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனமும் பல ஜனரஞ்சகப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இனவாதப் பிரச்சாரச் சாதனங்களாக இயங்குகின்றன. இந்தப் பிரச்சாரத்தில் ஆரிய சிங்கள பௌத்தத்தின் தனித்துவப் பெருமை மட்டும் கூறப்படவில்லை. தமிழர், இந்தியர் விரோத உணர்வுகளும் வளர்க்கப்படுகின்றன. பிரபல சிங்களப் பாடகி நந்தா மாலினி பல ஆண்டுகளுக்கு முன்பு மிக அழகாகப் பாடியுள்ள 'இது எங்கள் சிங்கள நாடு' என்ற பாடல் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினால் தினமும் ஒலிபரப்பப்பட்டு ஜனரஞ்சகப்படுத்தப்பட்டுள்ளது. இதே நந்தா மாலினி 1977ம் ஆண்டுக்குப் பின் சிங்கள இளைஞர்களுக்குச் சிங்கத்தின் வீரத்தை நினைவூட்டும் இனவாதப் பாடல்களைப் பாடியுள்ளார். நந்தா மாலினி ஒரு உதாரணம் மட்டுமே. இவரைப் போன்று பலர் உள்ளார்கள்.

இன்றைய சிங்கள நாடகங்களில் தமிழர் நாட்டைப் பிளக்க முயலும் துரோகிகள் என்ற கருத்தும் ஆங்காங்கே வெளிப்படுகின்றன. முற்போக்காளர்கள் என்று பிரபல்யமான சில இளங் கலைஞர்கள் கூட இத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபடுவது வருந்தத்தக்கது. அதுமட்டுமல்ல நாடகங்களில் சிரிப்புக்கிடமான கோமாளிப் பாத்திரங்களைத் தமிழர்களாக்கும் ஒரு மலிந்த உத்தியையும் பலர் கையாளுகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் இந்தச் செயல் இனவெறுப்புக்கு மேலும் உதவுவதாக இருக்கிறது. ஏற்கனவே மற்றய பிரச்சாரச் சாதனங்களால் ஆழ்ந்த இனவாத உளவியலைக் கொண்டுள்ள இரசிகர்களின்

கீழ்மட்ட ரசனைக்குத் தீனி போட்டுப் புகழும் பணமும் தேடும் குறுக்குவழியைப் பல சிங்கள கலைஞர்கள் பின்பற்றுகிறார்கள். அரச உடைமைகளான தொடர்பு சாதனங்களை இவர்கள் நன்கு பயன்படுத்துகிறார்கள். கலைஞர்களின் இந்தக் குறுக்குவழிப்போக்கு அரசியல்வாதிகளின் போக்கிலிருந்து வேறுபட்டதல்ல.

1960 களில் நான் பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாயிருந்தேன். அப்பொழுது சிங்கள, தமிழ் மாணவர் மத்தியில் நட்புறவை குரோத உண்ரவையும் விட மிஞ்சியிருந்தது. இன்று அதே பேராதனை வளாகத்தில் பல சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தாக்கி அவமதிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். இந்த மாற்றம் கலாச்சார சாதனங்களுக்கூடான பிரச்சாரத்தின் ஒரு நேரடி விளைவு என்றே சொல்ல வேண்டும். பாலர் வகுப்பிலிருந்து பூச்சி புழுக்களைக் கொல்வது பாவம் என்ற புத்த போதனையைப் பெறும் அதே நேரத்தில் ‘இனம்-மதம்-நாடு’ என்ற புனிதத்துவமான மூன்றின ஐக்கியத்தினையும் பற்றிய போதனை தமிழர்களைத் தாக்குவதை, அவமதிப்பதை நியாயப்படுத்துவதாகவும், தூண்டுவதாகவும் இருக்கிறது. கொழும்பு மருத்துவபீடச் சிங்கள மாணவர்கள் தம்முடன் ஒரே விடுதியில் வாழ்ந்த தமிழ் மாணவர்களை மோசமாகத் தாக்கி விரட்டிய சம்பவம் பல இலங்கையரைத் தலைகுனிய வைத்தது. இவர்கள் தான் எதிர்கால வைத்தியர்கள், உயிர் காக்கும் மனித தெய்வங்கள். அவர்களின் இந்த நடத்தையை நாம் அரசியல்-கலாச்சார-உளவியல் பின்னணியில் வைத்தே பார்க்க வேண்டும். அப்போதுதான் மனிதர்களின் மனிதத்துவமற்ற நடத்தையைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். 1983 ன் வன்செயல்களில் கொழும்பில் 14-15 வயதில் சிங்கள இளைஞர்கள் பலரும் பெருமளவில்

ஈடுபட்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது. கொழும்பின் பிரபல பௌத்த பாடசாலை ஒன்றின் மாணவர்களின் காடைத்தனம் பற்றி மிகவும் விசனத்துடன் சிலர் பேசினார்கள். இந்த மாணவர்களின் நடத்தைக்கு உடனடிக் காரணம் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட 13 இராணுவ வீரர்களில் ஒருவர் அவர்களின் பாடசாலைப் பழைய மாணவர் என்ற செய்தி எனக் கூறப்படுகிறது. இப்படி அநாகரீகமாக, அவமானத்துக்குரிய முறையில் நடந்து கொள்ளும் ஒரு இனவாதம் மிகுந்த இளம் சந்ததி எப்படி உருவானது? இதை உருவாக்கிய சக்திகள் எவை? இன்று அவமானத்தில் தலைகுனியும் மனித த்துவம் கொண்ட இலங்கையர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்போதுதான் கடந்த 30 வருடங்களாகப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பெருமளவில் உடந்தையாக இருந்த கலாச்சார 'மறுமலர்ச்சி' பற்றி அவர்கள் மறுபரிசீலனையைச் செய்ய முடியும்.

கல்வி கலாச்சார சாதனங்களுக்கூடாகப் புகுத்தப்படும் இனவாத உணர்வு சமூக மட்டத்தில் ஆழப்பதிந்து அரசியலின் உதவியுடன் ஒருவித சுயாதீன இயக்கப்பாட்டினைப் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். இன்றைய முக்கிய அரசியல் கட்சிகள் - அதாவது பாராளுமன்ற அரசியலில்- சிங்கள பௌத்த தனித்துவம் என்ற அடிப்படையை மீறி ஆளும் கட்சிகளாவது சுலபமான காரியமில்லை. சிங்கள சமூக உணர்வின் தலையாய அம்சமாக இத்தகைய ஒரு போக்கு அரசோச்சும் வரை வர்க்கப்போராட்டம் மழுங்கடிக்கப்படும். இன்றைய இலங்கை அரசியலில் பாட்டாளி வர்க்க இயக்கங்களின் வீழ்ச்சியின் ஒரு முக்கிய காரணம் வர்க்க உணர்வுகளை மழுங்கடிக்கும் இனவாதத்தின் ஆதிக்கமே. இங்கு விபரிக்கப்பட்டது போல் இந்த ஆதிக்கம் வெறும் மேடைப்பேச்சு மட்டத்தில் மட்டுமல்ல, இளம் சந்ததிகளின் அன்றாட சமூக வாழ்வில் அவர்களின் சமூக நோக்கில்

அவர்களின் தம்மைப் பற்றிய மற்றய இனத்தவர் பற்றிய கணிப்பீடுகளில் எல்லாம் பரந்த முற்போக்கான வர்க்கப் பார்வைக்கு இடமில்லாத வகையில் மேலாதிக்கம் செய்கிறது.

இந்த மேலாதிக்கத்தை ஒரு இயற்கையான நிலைமையாக ஏற்றுக் கொண்டு சில மனிதாபிமான இயக்கங்கள் வேலை செய்கின்றன. இதனால் மறைமுகமாக இவை இந்த மேலாதிக்கத்தை மேலும் பலப்படுத்துகின்றன. மற்றய நாடுகளில் 'சர்வதோயம்' போதித்துப் பரிசு பெறும் 'மக்கள் மட்ட' சிந்தனையாளர்களும் இலங்கைக்குள் இந்த மேலாதிக்கத்துக்கு கட்டுப்பட்டவர்களே. 1983ன் கொடுமைகளுக்குப் பின் ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தன நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள், தத்துவம் பற்றிய, நாகரீகம் பற்றிய ஒரு பிரச்சனை என்ற மாபெரும் கருத்தினை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி அவர்களே தனது கருத்தினைச் சற்று ஆழமாக அலசிப்பார்த்தல் அவசியம். நாகரீகத்தையும், அநாகரீகத்தையும் தோற்றுவிப்பவர்கள் மனிதர்களே. ஜனாதிபதி பெருமைப்படும் 2500 வருட கால சிங்கள பௌத்த நாகரீகம் ஏன் ஒருவருடைய தலைமையின் கீழ் இப்படியாகி விட்டது? தமிழர்கள் மீது கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட உச்சக்கட்டத்தில் ஜனாதிபதி அவர்களே 'சிங்கள மக்களின் இயற்கையான ஆவலைத்' திருப்திப்படுத்த யாப்பில் ஆறாவது திருத்தத்தைக் கொண்டு வர வேண்டியிருந்தது. இயற்கையான ஆவல் விருப்பம் என்றால் என்ன? அத்தகைய விருப்பங்கள் சிங்களவர்களுக்கு மட்டும்தானா உண்டு? 77 வயதினரான மிகவும் படித்த ஜனாதிபதி அவர்கள் 'சிங்கள மக்களைத்' திருப்திப் படுத்த விழைந்தாரே ஒழிய இம்சைக்குள்ளான தமிழர்களுக்காக ஒரு அனுதாப வார்த்தையைக் கூட வெளியிடவில்லை. 2500 வருடங்கள் மட்டுமல்ல, பல்லாயிரம் வருடங்கள் நீண்ட மனித

நாகரீகத்தின் அடிப்படை அலகான மனிதாபிமானம் ஏன் ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கே வரவில்லை. கருணையின் உருவான புத்தபகவானே நேரில் வந்து ஆசிர்வதித்தவர்களாகக் கருதப்படும் இலங்கைச் சிங்கள பௌத்தர்களின் தலைவர் நடந்து கொண்ட விதம் அவர் எழுப்பியுள்ள அதே கேள்விக்கு நம்மை மீண்டும் கொண்டு செல்லவில்லையா? ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் இனவாதியா இல்லையா என்பதல்ல முக்கியம். அவருடைய அரசியல், அவருடைய தலைமையில் உள்ள கட்சியின் அரசியல் இதுதான் முக்கியம். அப்படிப் பார்க்கும் போது ஜனாதிபதியும் அவருடைய அகங்காரம் கொண்ட மந்திரிகளும் அவர் குறிப்பிட்ட நாகரீகம் பற்றிய பிரச்சனையின் அங்கங்களேயொழிய தீர்வின் பக்கத்தினர் அல்ல.

சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் இத்தகைய பரவலான ஆழமான ஸ்தாபனமயமாக்கல் குட்டிப்பூர்ஷவா அரசியலின் பொப்பியூலிஸ்ட் தன்மையினையும் தெளிவாகக் காட்டியது. அநகாரீக முதல் பண்டாரநாயக்க வரை ‘மக்கள் மட்டத்திற்கு’ ஜனரஞ்சகப்படுத்தப்பட்ட யு.என். பியின் தலைவர்கள் வரை பழையதொரு சிங்கள பௌத்த பொற்காலம் பற்றிய பின் நோக்கிய கற்பனார்த்தவாதம் மேடைப் பிரச்சாரத்துக்கு நன்கு உதவியது. ஆனால் இத்தகைய குட்டிப்பூர்ஷவாக் கருத்தமைவு ஜயவர்த்தனாவின் பொருளாதாரக் கொள்கைக்கும் அது சார்ந்து நிற்கும் பூர்ஷவா வர்க்கத்தின் நலன்களுக்கும் உண்மையில் ஒத்துவராதது. இந்த முரண்பாடு ஒருபுறம் இலங்கைப் பாராளுமன்ற அரசியலுக்கு அவசியமான ஜனரஞ்சக சந்தர்ப்பவாதத்திற்கும் மறுபுறம் மூலதனக்குவியலின், பொருளாதார வளர்ச்சியின் தேவைகளுக்குமிடையிலான முரண்பாடெனக் கூறினால் அது மிகையாகாது.

## இனவாதமும் இடதுசாரி இயக்கமும்

இனவாதம் என்ற பேய்க் காற்றால் ஏற்படுத்தப்பட்ட பிரவாகத்தில் எதிர்நீச்சல் போட முற்பட்ட இடதுசாரிகள் வெற்றி பெற்றனரா என்ற கேள்வியை ஏற்கனவே எழுப்பியிருந்தேன். இப்போது அதைப் பற்றிச் சிலவார்த்தைகள் கூறுவது பொருந்தும்.1958ல் இனக்கலவரம் - அதுதான் நமது 2500 வருடங்களுக்கும் மேலான சிங்கள தமிழ் உறவின் வரலாற்றில் முதலாவது சிங்கள- தமிழ் இனக்கலவரம் - தோன்றிய போது சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும் துணிவுடன் தமிழ் மக்களைப் பாதுகாத்தனர்.வேலைத்தலங்களில் விசேட குழுக்கள் அமைத்துத் தமிழ்த் தொழிலாளர்களைக் காப்பாற்றினர். கொழும்பில் தெருக்களிலும், சந்திகளிலும் சிங்களக் குண்டர்களுக்கு முகம் கொடுத்தனர். கோவிந்தன்கள், தங்கவேலுகள், கந்தசாமிகள் சிங்களத்தோழர்களுடன் ஒன்றிணைந்து வர்க்கப்போராட்டத்தில் உயிரைத் தியாகம் செய்து கட்டி வளர்த்த இயக்கத்தின் இடதுசாரிகள் தமிழ்மக்களைப் பாதுகாத்தனர். இது தொழிலாளவர்க்கத்திற்குப் பெருமையைத் தேடித் தந்தது. ஆனால் இதுவே இடதுசாரிகளின் எதிர்நீச்சலின் கடைசிக் காட்சியாகவும் அமைந்தது[23].

1957ன் பிற்பகுதியில் பண்டார நாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. இதன்படி பிரதேசசபைகள் மூலம் தமிழ் மக்களுச் சில அடிப்படை உரிமைகள்-

23 இந்தப் பகுதி இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றின் சில சந்தர்ப்பங்களை மட்டுமே தொட்டிருக்கிறது.

இடதுசாரி இயக்கமும் தேசிய இனப்பிரச்சனையும் பற்றிய பல கட்டுரைகளை 1982- 83 ல் Lanka Gurdian வெளியிட்டுள்ளது. குறிப்பாக பின்வருவோரின் கட்டுரைகளைப் பார்க்கவும். Samudran, Gowrie Kanthan, Chintaka, Dayan Jayatilleka, Shanta de Alwis, V.I.S.Jayapalan

குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களின் நிர்வாகமொழி தமிழாகவும், குடியேற்றக் கொள்கை தமிழ் மக்களின் தனித்துவத்தைப் பாதிக்காத வகையிலும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் மை காய்வதற்கு முன் அதை பண்டார நாயக்கவே கிழித்தெறிய நிர்ப்பந்திக்கப்பட்டார். இன்றைய ஜனாதிபதி ஜயவர்த்தன அன்று எதிர்க்கட்சியிலிருந்தவர். இந்த ஒப்பந்தம் சிங்கள மக்களின் உரிமைகளையும் பிரதேசங்களையும் தமிழ் மக்களுக்குப் பேரம்பேசி விற்றுவிட்டது என்று கூறி அவர் கண்டியாத்திரை ஆரம்பித்தார். இது முடிவு பெறாத யாத்திரை ஆகிய போதும் இதன் மூலம் யு.என்.பி சிங்கள பௌத்த தன்மையில் ஆளும் கட்சியையும் மிஞ்சியது என்பதை ஜயவர்த்தன எடுத்துக் காட்டிவிட்டார். தக்க சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்துவதில் தந்திரமிக்க ஒரு அரசியல் நரி என்ற அவரைப் பற்றிய பரவலான கருத்தினை அவர் ஊர்ஜிதம் செய்துவிட்டார்[24].  ஆயினும் சிங்கள இனவாதத்தில்

24 ஜே.ஆர். ஜயவர்த்தனாவே இலங்கை அரசியலில் முதல்முதலாக சிங்களம் மட்டும் பற்றிப் பேசியவர். 1943 லேயே இவர் இந்தக் கொள்கையை முன்வைத்தார். யு.என்.பி கட்சிக்குள்ளே நீண்டகாலமாக சிங்கள பௌத்தக் கருத்துக்களைக் கொண்டு இயங்கியவர். இதனாலேயே இவருக்கு, பின்னர் சிறில் மத்தியூ போன்ற இனவாதிகளின் பூரண ஆதரவு கிடைத்தது. இன்று சிறில் மத்தியூ போன்றோர் பேசுவது போல் 1958ல் ஜே. ஆர் பேசினார். அவரது கட்சிப் பத்திரிகையான சியரட்ட 1958ல் இனக்கலவரத்தைப் பரப்புவதில் தீவிரமாக இயங்கியது. பொதுவாக இந்தப் பத்திரிகை 1958க்குப் பின் சு.க. பத்திரிகைகளையும் விட தீவிரமான இனவாதப் போக்கினை எப்போதுமே காட்டி வந்துள்ளது. பண்டார நாயக்க தமிழ் மக்களுக்குப் பாரம்பரியமான பிரதேசங்கள் உண்டு என்பதைக்( வடகிழக்கு மாகாணங்கள்)கொள்கையளவில் ஏற்றுக் கொண்டவர். ஆனால் ஜே.ஆர்.இதை ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. பாரம்பரிய வாழிடம் என ஒன்று தமிழர்களுக்குக் கிடையாது என்பதே அவருடைய வெளிப்படையான நிலைப்பாடு. இதனால்தான் பண்டார நாயக்கவினால் பிரதேச சுயாட்சியைக் கொள்கையளவில் (1958)ஏற்றுக் கொள்ள முடிந்த போதும் ஜே.ஆரினால் அத்தகைய ஒரு கருத்தினை ஏற்க முடியவில்லை. அவர் ஏற்கப்போவதுமில்லை

பண்டார நாயக்கவுக்கு ஈடுகொடுக்க கூடிய நிலையில் யு.என்.பி இருந்த போதும் அவருடைய ஜனரஞ்சகமான சில ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளை இந்தக் கட்சி பின்பற்றத் தயாராகவில்லை. அதேபோல் நெற்காணி மசோதா போன்ற உள்நாட்டுச் சீர்திருத்தங்களையும் யு.என்.பி முற்றாக எதிர்த்தது. இந்த வகையில் செல்வநாயகத்தின் சமஷ்டிக்கட்சி யு.என்.பியின் நெருங்கிய ஆதரவாளனாக விளங்கியது.

பண்டாரநாயக்க அரசாங்கம் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்ட தேசிய முதலாளி வர்க்கத்தின் அரசாங்கம் என்ற கொள்கை அடிப்படையில் அதன் முற்போக்குக் கொள்கைகளை மட்டும் ஆதரிப்பதெனக் கம்யூனிஸ்ட்கட்சி 1958ல் முடிவு கட்டியது. சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் தமது மொழிக்கொள்கை பாராளுமன்ற அரசியலுக்கு ஒத்துவராது என்ற ஒரு எண்ணத்துக்குள்ளாயின. இவ்விரு கட்சிகளுக்குள்ளேயும் உண்மையில் ஆரம்பத்தில் இருந்தே சிங்களத் தேசியவாதிகள் சமஅந்தஸ்துக் கொள்கை சிங்கள மக்கள் மத்தியில் விலைபோகாத ஒன்று என வாதிட்டு வந்திருக்கின்றனர் என்பது உண்மை. கம்யூனிஸ்ட்கட்சிக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது தந்திரோபாயமற்ற செயல் என்ற கருத்துடையோர் 1956ல் இருந்தனர். ஆயினும் கட்சியின் மத்தியகுழுவில் பெரும்பான்மையினர் இச்சட்டத்தை எதிர்ப்பது கம்யூனிஸ்ட் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் கட்சியின் கடமை எனக் கருதினர்.

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி கொழும்பு நகர மண்டபத்தில் நடத்திய. முதலாவது கூட்டத்தில் அரசாங்கக் கட்சி ஆதரவாளர்கள் சில பிக்குகள் உட்பட பலாத்காரமாகக் கட்சியின் பேச்சாளர்களையும் சில அங்கத்தவர்களையும் தாக்கினர். இந்தப் பலாத்காரத்தில்

முதலில் அடிவாங்கியவர்களில் ஒருவரான பிரேமலால் குமாரசிறி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துப் பேசிய முக்கியமான பேச்சாளர். ஆனால் உண்மையில் பிரேமலால் கட்சியின் மொழிக்கொள்கை எழுந்துவரும் சிங்கள தேசியவாதப் பேரலையை மதிக்காத தப்பான செயல் என்ற கருத்தினை தனிப்பட்ட முறையில் கொண்டிருந்தார் என்பதைப் பின்னர் தான் அறியமுடிந்தது. இரு இடதுசாரிக் கட்சிகளுக்குள்ளும் வகுப்புவாத உணர்வுகள் பல மட்டங்களிலும் 1956 காலகட்டத்திலிருந்து தோன்ற ஆரம்பித்து விட்டது. ஆயினும் இதற்கு எதிரான சக்திகள்1960 களின் ஆரம்பத்தில் ஓரளவு பலம் கொண்டிருந்தன. அதன் பின் இவை விரைவாரப் பலமிழந்துபோயின. 1962-63 ல் உருவாகிய இடது சாரி ஐக்கிய முன்னணி ஒரு குறுகிய காலத்திற்கு சமசமாஜிகள், கம்யூனிஸ்ட்டுகள், பிலிப் குணவர்த்தனாவின் குழுவினர் எல்லோரையும் ஒரு கூடாரத்துக்குள் மீண்டும் கொண்டுவந்தது. ஆனால் இந்த ஐக்கியம் நீண்ட நாட்களுக்கு நிலைபெறவில்லை. சமசமாஜிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் தனித்தனியாகப் போய் திருமதி பண்டாரநாயக்கவின் தலைமையிலான சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து ஐக்கிய முன்னணி அமைத்தனர். பிலிப் குணவர்த்தனாவோ யு.என். பியுடன் ஐக்கியமானார்! சமசமாஜிகளும் கம்யூனிஸ்ட்டுகளும் சு.க வுடன் கூட்டணி அமைத்தபோது தேசிய இனப் பிரச்சனை பற்றிய பேச்சுவார்த்தையே எடுக்கவில்லை. சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டு பாரளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர்.

இதே காலக்கட்டதில் இவ்விரு கட்சிக்குள்ளேயும்(சமசமாஜ, கம்யூனிஸ்ட் ) பிளவுகள் ஏற்பட்டன. இந்தப் பிளவு சர்வதேச சோஷசலிச இயக்கத்திற்குள் சோவியத், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவை ஒட்டி இருந்தது.

1963க்குப் பின் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட மொஸ்கோ- பீக்கிங் பிரிவுகள் நமது நாட்டின் இடது சாரி இயக்கத்தின் சமீபகால வரலாற்றில் பிரசித்தி வாய்ந்தது. இந்த சர்வதே ரீதியான பிரிவிலும் வகுப்புவாதம் தலைதூக்கத் தவறவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவின் போது நான் போராதனையில் மாணவனாயிருந்தேன். அந்தக்கட்சியின் சார்பான பல்கலைக்கழக ஸ்தாபனங்களான சோஷலிச மாணவர் சங்கத்தில் நானும் அங்கத்தவனாயிருந்தேன். கட்சியின் பிளவு இந்த மாணவர்சங்கத்தையும் நேரடியாகத் தாக்கியது! நா. சண்முகதாசன் 'மா.ஓ 'வின் புரட்சிப் போக்கின் தலைவராயிருந்தார். நானும் இதே போக்கின் ஆதரவாளனானேன். அந்த சந்தர்ப்பத்தில் சில மொஸ்கோ சார்புக் கோஷ்டியைச் சேர்ந்த சிங்களத் தோழர்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் சண்முகதாசனை இன அடிப்படையில் விமர்சித்ததை நான் அறிந்தேன். அப்போதுதான் முதல் தடவையாக கம்யூனிஸ்ட கட்சிக்குள்ளேயும் சிங்கள-தமிழ் பிரச்சனை எழுந்துவிட்டது என்பதை நம்மில் பலர் தெரிந்து கொண்டோம். முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பாட்டாளி வர்க்க சர்வதேசத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயும் நாட்டின் பாரளுமன்ற ஜனரஞ்சக அரசியலின் அடிப்படையாக வந்துவிட்ட சிங்கள பௌத்தவாதம் புகுந்து கொண்டது என்பதாகும்.

சமசமாஜ கம்யூனிஸ்டுகளின் அரசியல் சீரழிவினைப் பறை சாற்றுவது போல் அமைந்தது அவர்களின் 1965 க்குப் பிந்திய நடத்தைகள். யு.என்.பி.யுடன் சேர்ந்து அரசாங்கம் அமைத்த சமஷ்டிக் கட்சியினர் யு.என்.பி தலைவருடன் ஒரு 'இரகசிய 'ஒப்பந்தம் செய்தனராம். இது சிங்கள மக்களுக்கு விரோதமானதென சுதந்திர, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஊர்வலம் நடத்தின. இந்த ஊர்வலத்தில் இடது சாரிக்

கட்சியினர் தமிழர்களை அவமதிக்கும் சுலோகங்களைக் கத்தினார்கள். சமசமாஜ-கம்யூனிஸ்ட்(மொஸ்கோ) தலைவர்களும் சிங்கள பௌத்தர்களானர்கள்.

இடதுசாரிகளின் சந்தர்ப்பவாத அரசியல் சிங்கள இனவாதத்திற்குச் சாதகமாயிருந்ததன் விளைவுகள் தொழிலாளவர்க்க ஸ்தாபனங்களைத் தாக்க ஆரம்பித்தன. தொழிற்சங்கங்கள் படிப்படியாக ஆளும் கட்சிகள் வசமாயின. தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களின் சந்தர்ப்பவாதத்தைப் பின்பற்றி மேலும் ஒருபடி சென்று ஆளும் கட்சியின் தொழிற்சங்கங்களில் சேர்ந்து கொள்ளும் ஒரு புது மரபுக்கு வழிவகுத்தனர். தொழிலாளர் வர்க்க நிலைப்பாட்டிற்குத் தாம் இழைத்த துரோகத்தின் விளைவுகளை இடதுசாரித் தலைவர்கள் 1975க்குப்பின் அனுபவித்தார்கள். அவர்களின் வர்க்க சமரச சந்தர்ப்பவாத அரசியல் ஒரு சிலவருடங்கள் ஆளும் பதவிகளைக் கொடுத்தது. ஆனால் இறுதியில் மீளமுடியாத பயங்கர வீழ்ச்சியை இயக்கத்திற்குத் தந்தது. ஏற்கனவே இந்தக் கட்டுரையில் விபரிக்கப்பட்டது போல் கலாச்சாரத்துறைகளுக்கூடாகப் பரவி வந்த இனவாதச் சிந்தனைகளுக்குத் தொழிலாள வர்க்கமும் பலியாகிக் கொண்டிருந்தது. இதை எதிர்க்கும் நடவடிக்கைகளை இடதுசாரி இயக்கம் எடுக்கத் தவறியது மட்டுமல்ல அதற்குச் சாதகமான அரசியலைக் கடைப்பிடிக்கவும் செய்தது. விளைவு வர்க்கப்போராட்டத்தின் மழுங்கடிப்பும், வர்க்க உணர்வின் சீரழிவும், இனவாத்தின் ஆழ்ந்த மேலாதிக்கமும்.

இன்று புதிய இடதுசாரிகள் மத்தியில் இனவாத எதிர்ப்புணர்வு தோன்றியுள்ளது. இவர்கள் ஸ்தாபன பலம் மிகக்குன்றிய புத்திஜீவிகள். எதிர்காலத்தில் இவர்கள் பலம் எப்படி அமையும் என்று இப்போது கூறுவது கடினம். வடபகுதியில் தோன்றி வளர்ந்து வரும் புரட்சிகர

தமிழ்தேசியவாதத்தினாலும் புதிய சிங்கள இடதுசாரிகள் கவரப்பட்டுள்ளனர். பொது எதிரியான பிற்போக்கு அரசுக்கு எதிராக இரு இனத்தின் ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் இணைப்புக்களை இவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் ஸ்தாபன ரீதியாக வெற்றி பெறச் சிங்கள பெருந்ததேசிய இனவாதக்கருத்தமைவுக்கு எதிராகத் தொடர்ந்து துணிவுடன் போராடுவதில் முன்னேறாதவரை சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும் விடுதலை பின்தள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.

கம்யூனிஸ்கட்சி (மொஸ்கோ ) இப்போது தன் கடந்தகாலத் தவறுகளை ஓரளவு உணர்ந்திருப்பது போல் சில சந்தர்ப்பங்களில் படுகிறது. ஆனால் இதுவும் சமசமாஜக்கட்சியும் இப்போது அரசியல் முக்கியத்துவமிழந்த சிறிய ஸ்தாபனங்களாகிவிட்டன. இந்தக் கட்சிகளின் சீரழிவின் பாடங்களை மக்கள் விடுதலை முன்னணி (ஜனதா விமுக்தி பெரமுன) படித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.இடதுசாரி இயக்கதைப் பொறுத்தவரை அதன் புனர்ஜன்மத்தின் முதல்கட்டடத்தில் நமது நாடு இருக்கிறது. எதிர்காலம் எப்படியோ?

இங்கு தமிழ் இடதுசாரிகள் பற்றிய ஒரு சிறு குறிப்புப் பொருத்தமானது. இவர்கள் சிங்கள இடதுசாரிகளையும் விடத் தீவிரமாக இன ஐக்கியத்தைக் கடைப்பிடித்து வந்தனர்.இந்தப் போக்கு ஒரு வகையில் இவர்களுடைய நேர்மையையும் வர்க்கப் பார்வையையும் காட்டுகிறது. அதே நேரத்தில் சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை இவர்கள் நன்கு புரிந்து செயற்படாத குறைபாடும் இப்போது பின்நோக்கிப் பார்க்கும் போது நன்றாகத் தெரிகிறது. இடதுசாரிக் கட்சிகளுக்குள்ளேயும் தமிழ் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் தமிழர் உரிமை


பற்றிக் குரெலழுப்புவது பல சிங்களத்தோழர்களால் தப்பாக விளங்கப்பட்டது. அவர்களின் சிங்கள இனவாதமும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் இந்தத் தமிழ் இடதுசாரிகளைத் தமிழ் இனவாதிகள் எனப் பட்டம் சூட்டின. பல சந்தர்ப்பங்களில் தமிழ் இடதுசாரிகள் தமது இன ஐக்கிய முயற்சிகளுக்குச் சிங்கள இடதுசாரிகளின் சமமான ஈடுபாட்டினைப் பெறமுடியாது ஏமாற்றமடைந்து உள்ளனர்.

அதேநேரத்தில் தமிழ் இடதுசாரிகள் கலாச்சாரத் துறையில் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். ஈழத்தமிழ் மக்களின் தனித்துவத்தை முன்வைக்கும் கலை இலக்கியப் பணிகளை முற்போக்குச் சிந்தனை கொண்ட தமிழ்ப் படைப்பாளிகளே ஆரம்பித்து முன்வைத்தனர். தமது படைப்புக்கள் மற்றும் பிரச்சாரங்களுக்கு ஊடாக இவர்கள் குறுகிய தமிழ் இனவாதத்தையும் எதிர்த்தனர்.

**சிங்கள இனவாதமும் தமிழ் இனத்தின் ஒடுக்குதலும்**

இதுவரை சிங்களப் பெருந் தேசிய இனவாதம் ஒரு ஸ்தாபனமயமான அமைப்புக்களைக் கொண்ட கருத்தமைவாக வளர்ந்து இயங்குவது பற்றிய சில அம்சங்களைப் பார்த்தோம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இன்றைய காலத்திற்கு இடையே சிங்கள பௌத்த மறுமலர்ச்சி வாதம் இன ஒடுக்கல் கொள்கையாக மாறிய கட்டங்களைப் பின்வரும் வரைபடம் 1 காட்டுகிறது:

**வரைபடம் 1**




இங்கு குறிப்பிட்டுள்ள கட்டங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புள்ளவை. சிலவற்றை மட்டுமே தெளிவாகக் காலவரைப்படுத்தலாம். உதாரணமாக சுதந்திரத்துக்குப் பின்பே சிங்கள இனவாதக் கருத்தமைவு ஆளும் சுதந்திரக்கட்சியின் கருத்தமைவாகிறது. இனப் பாரபட்ச நிர்வாகம், சிங்களவர் அல்லாதோருக்கு சில விசேடத் தடைகள் சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக சட்டபூர்வமாகத் தோன்றிய காலத்துடன் ஆரம்பமாகிறது.

இன ரீதியான பாரபட்சத்திற்கும் இன ஒடுக்கலுக்குமிடையே உள்ள வேறுபாடுகளைச் சற்று விளக்குவது அவசியம்.

1956க்குப் பின் இனப் பாரபட்சக் கொள்கைகளில் தொடர்ச்சி இருந்தபோதும் 1977க்குப் பின் சில புதிய பலாத்கார அம்சங்கள் ஸ்தாபனரீதியாக்கப்படுகின்றன. இந்த அம்சங்கள் 1977க்கு முன்பிருந்தே ஓரளவு தொழிற்பட ஆரம்பித்த போதும் பின்னர்தான் ஸ்தாபனவடிவம் பெறுகின்றன. இப்போது ஆயுதப்படைகளே தமிழ் மாகாணங்களை உண்மையில் நிர்வகிக்கின்றன. யாழ்ப்பாணம் ஒரு பிரிகேடியரின் ஆட்சிக்குக் கீழே வந்துள்ளது. அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத்தடுப்புச்சட்டம் போன்றவை ஆயுதப்படைகளுக்கு அளவற்ற சுதந்திரத்தை வழங்கியுள்ளன. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டதன் பின் தமிழ் மக்கள் மீது ஆயுதப்படைகளின் வன்செயல்கள் அதிகரித்துள்ளன. வழமையான சமாதானக்காலச் சட்டங்களும் நிர்வாக விதிகளும் தமிழ்ப்பகுதிகளில் பின்பற்றப்படுவிதில்லை. ‘பயங்கரவாத எதிர்ப்பு’ என்ற போர்வையில் அரச இயந்திரத்தின் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. தமிழ்ப் பிரதேசங்களில் மனித உரிமை மீறல் நடைமுறையில் சட்ட பூர்வமாக்கப்பட்டுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

1977க்கு முந்திய தமிழர் எதிர்ப்பு வன்செயல்கள் அதற்குப் பிந்திய வன்செயல்களிலிருந்து வேறுபட்டவை.1977க்குப் பின் வன்செயல்களை ஆயுதப்படையினரே நேரடியாக ஆரம்பித்து வைக்கின்றனர். ஆயுதப்படையினரும், பொலிசும் நாடு பூராவும் தமிழர்கள் தாக்கப்படுதவற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தூண்டுகோலாய் இருந்திருந்திருக்கின்றனர். ஆயுதப் படைகளின் வன்செயல்கள் தமிழினத்தின் கலாச்சாரப்

பொக்கிஷங்களையும், தனித்துவ சின்னங்களையும் அழிப்பதை நோக்காகக் கொண்டுள்ளன. 1981ல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது, இந்துக் கோவில்கள் தாக்கப்பட்டது இத்தகைய செயல்களுள் அடங்கும். இன ஒடுக்கல் இனவாதத்தின் உச்சக் கட்டமாகும். இந்தக்கட்டத்தில் சட்ட பூர்வமாக்கப்பட்ட பலாத்காரம், ஒடுக்கப்படும் இனம் மீது தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் இத்தகைய பலாத்தகாரம் அன்றாட வாழ்வின் ஒரு அம்சமாகிவிட்டது. இனப்பராபட்சக் கொள்கைகள் மட்டுமே கடைப்பிடிக்கப்பட்ட போது ஆட்சி இயந்திரத்தின் நேரடிப் பலாத்கராத்தோடு சம்பந்தப்படாத கருவிகளே பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக உத்தியோகமொழி அமுலாக்கல், வேலைத்தேர்வு முறைகள், பல்கலைக்கழக அனுமதி முறைகள், குடியேற்றத்திட்டங்கள். இனஒடுக்கல் கட்டத்தில் இந்தக் கருவிகளுடன் அரச இயந்திரத்தின் முக்கிய அம்சமான ஆயுதப்படைகள், நீதிபரிபாலனம் ஆகியவை இணைகின்றன. அது மட்டுமின்றி ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பைப் பொறுத்து இந்தப் பலாத்கார அம்சமே மேலோங்கியும் நிற்கும். இன்றைய தமிழ்ப் பிரதேசங்களின் நிலை இதுவே.

இத்தகைய ஸ்தாபனமயமாக்கப்பட்ட பலாத்கார இனஒடுக்கல் ஆரம்பித்த பின் தமிழ்பிரதேசங்களுக்கு வெளியே உள்ள தமிழர் மீதான தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. வடபகுதியில் எழுந்த பிரிவினைக் கோஷமே சிங்கள மக்களை ஆத்திரப்படுத்தி தென் பகுதியில் வாழும் தமிழர்களைத் தாக்க வைக்கிறது என்ற விளக்கத்தை அரசாங்கம், சுதந்திரக் கட்சியினர் வன்செயல்கள் இடம்பெறும் போது வைக்கத் தவறுவதில்லை. இதே பேர்வழிகள் தென்பகுதி வாழ் தமிழ்ர்கள் பிரிவினைக்கு எதிர்பானவர்கள் என்பதையும் கூறத் தவறுவதில்லை.

ஆனால் இதைத் தெரிவித்திருந்த இந்தப் பிரபல சிங்கள பௌத்த தலைவர்களால் வன்செயல்களைத் தடுப்பதற்கு மட்டும் ஒருபோதும் முடிவதில்லை. அவர்கள் அத்தகைய முயற்சிகள் எடுத்ததற்கான ஆதாரமும் இல்லை. ஆட்சியாளர்கள் தங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பொலிஸ், ஆயுதப்படைகளின் உதவியுடனும் இத்தகைய வன்செயல்களைத் தடுக்க முடியவில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? 1977லிருந்து இன்றைய அரசாங்கத்தின் ஆதரவாளர்களாயிருந்து வந்த தோட்டத்தொழிலாளர்கள் தாக்கப்படுவதையே ஆளும் கட்சியினரால் தடுக்க முடியவில்லையே இதை எப்படி விளக்குவது?

இதற்கான விளக்கத்திற்கு அதிக தூரம் போகவேண்டியதில்லை. இன்றைய ஆளும் கட்சியே சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தை அதன் உச்சக்கட்டமான இன ஒடுக்கலுக்கு எடுத்துச் சென்றது. யாழ்ப்பாணத்தமிழர், மலைநாட்டுத்தமிழர், மட்டக்களப்புத்தமிழர், கொழும்புத்தமிழர் என்ற பாகுபாட்டினை ஏற்படுத்தி, ஆளும் கட்சி ஒருபுறம் சில அரசியல் இலாபங்களைத் தேடிக் கொண்ட போதும் மறுபுறம் அதன் அமைப்புக்குள்ளேயே தீவிரமாக இயங்கி வரும் இனவாதக் கோஷ்டியின் வேலைகளாலும், ஏற்கனவே ஸ்தாபனமயமாக்கப்பட்டு ஒருவித சுயாதீனத்துடன் இயங்கி வரும் இனவாதத்தினாலும் சகல பிரதேசத்துத் தமிழர்களும் ஒரே மாதிரியான தாக்குதல்களுக்கு ஆளாகிறார்கள். மலைநாட்டுக் கீழ் மாகாணத்து, கொழும்புத் தமிழர்களின் அரசாங்க ஆதரவு ஒருதலைப்பட்டதாகி விட்டது. அரசாங்கம் அவர்களை ஆதரிக்கவில்லை. அவர்கள் தான் அரசாங்கத்தை ஆதரித்தார்கள். தன் ஆதரவாளர்களான முதலாளி வர்க்கத்துத் தமிழர்களுக்குக் கூட அரசாங்கத்தினால் பாதுகாப்பு வழங்க முடியவில்லை. அரசாங்கத்துக்குள்ளேயே கிளம்பும் தமிழர்

எதிர்ப்புக்கெதிராக அதே அரசாங்கத்தால் பாதுகாப்பு வழங்குவது முடியக்கூடிய காரியமில்லை.

ஆளும் கட்சிக்குள் இயங்கும் தீவிர சிங்கள இனவாதப் பிரிவுக்குள் இருக்கும் ஸ்தாபன ரீதியான பலம் அதற்குள்ளேயே இருக்க கூடிய இனவாத வன்செயல்களை விரும்பாத ஒரு சிலரிடம் இல்லை. சிறில் மத்தியூ சிங்கள இனவாதக் கோஷ்டியின் முக்கிய தலைவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. இவர் யு.என்.பியின் முதிய அங்கத்தவர். ஜயவர்த்தனாவின் நீண்ட கால நம்பிக்கைக்குப் பாத்திரமான சகபாடி. சேனாநாயக்கவின் பிடியிலிருந்து கட்சியின் தலைமையை ஜயவர்த்தனா கைப்பற்ற நடத்திய உட்கட்சிப் போராட்டத்தில் இறுதிவரை உறுதியாக நின்றுழைத்தவர் மத்தியூ. அப்பொழுது பிரமதாசா சேனாநாயக்க கோஷ்டியில் இருந்தார். மத்தியூவே ஆளுங்கட்சியின் தொழிற்சங்கத்தின் தலைவர்.அவருடைய கைத்தொழில் அமைச்சின் கீழ் பெருந்தொகையான கூட்டுத்தாபனங்கள் இயங்குகின்றன. இந்த வசதிகளையெல்லாம் சிங்கள பௌத்த இனவாதப் பிரச்சாரத்திற்கும் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தி வருகிறார்.

ஆளும் கட்சியின் தீவிர இனவாதப் பிரிவுக்கு நாடெங்கிலும் தொடர்புண்டு. பௌத்த ஸ்தாபனங்கள் தொழிற்சங்கங்கள் கட்சிக்கிளைகள் போன்றவை இந்தப் பிரிவின் வேலைகளுக்கு மிகவும் வேண்டியவை. இந்தப் பிரிவுக்கும் ஆயுதப்படைகளின் பல மட்டங்களுக்குமிடையே நெருங்கிய உறவுண்டு. இனஒடுக்கல் ஒரு அரசியல் நடவடிக்கையாகும். இதன் நடைமுறை வழமையான பாராளுமன்ற அரசியிலுக்கும் அப்பாற்பட்டது. இதன் இயக்கம் இராணுவ ரீதியானது. இன ஒடுக்கல் ஒரு அரசியல் பலாத்காரம். இலங்கையின் இனஒடுக்கலில் ஆளும் கட்சியும்

ஆயுதப்படைகளும் இணைந்திருந்தன. இப்பொழுது எதிர்க்கட்சியிலுள்ள சுதந்திரக்கட்சியினரும் இந்த விடயத்தில் ஆளும் கட்சிக்குத் தாம் சளைத்தவர்கள் இல்லை என்ற வகையில் பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்கள். ஆகவே இனவாதம் என்பது யு.என்.பி, சு.க இரண்டிற்குமே பொதுவானது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் அது ஸ்தாபன ரீதியான சுயாதீனத்தைப் பெற்றுள்ளது. சிங்கள மக்களின் பொதுஜன அபிப்பிராயங்களை உருவாக்கி, நெறிப்படுத்தும் பத்திரிகைகள், வானொலி எல்லாமே இந்த சுயாதீனத்தைப் பலப்படுத்தும் வகையில் சிங்கள மக்களுக்கு இனவாத ரீதியிலேயே தமிழ்ப் பிரதேச அரசியல் நிலைமைகளைப் பற்றித் தெரிவிக்கின்றன.

சமீபத்திய வன்செயல்களின் போது வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உரையாற்றிய ஜனாதிபதியும் மந்திரிமாரும் சிங்கள இனவாதத்தை வெளிப்படையாகவே காட்டினார்கள். சிலரின் பேச்சு சிங்கள மக்கள்தான் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற வகையிலும் அமைந்தது. இலங்கை யாப்பின் ஆறாவது திருத்தப் பிரேரணையின் போது பேசிய மத்தியூ சிங்களவர்கள் பத்து வருடங்களுக்கு மேல் பொறுமையாக இருந்து விட்டார்கள். அதற்கு மேல் அவர்களால் இருக்க முடியாது என்ற தோரணையில் பேசினார். தமிழர்களின் வியாபார நிலையங்கள் அழிக்கப்பட்டன. ‘பூமி புத்திரர்களான’ வியாபாரிகள் வளர வழிசெய்யும் என்ற கருத்தும் பரவலாகக் கேட்கிறது. இலங்கை நிதிமந்திரி றொனி டி மெல் இங்கிலாந்தின் Economist என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் நாட்டின் பொருளாதாரத்தின் உயர் மைய ஸ்தானங்கள் இன்றும் தமிழர்களின் கட்டுபாட்டிலேயே இருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார். சிங்கள பௌத்தர்களுக்கு உரிய இடம் இன்னும் கிடைக்கவில்லை

என அவர் நாசூக்காகத் தெரிவித்தார் எனப் பத்திரிகையாளர் குறிப்பிடுகிறார். மந்திரிமார்களின் பேச்சுக்களைப் பார்த்தால் தமிழர்கள் தாக்கப்படுவதில் நியாயமுண்டு என்ற ஒரு தொனி தென்படுகிறது. அவர்களின் பேச்சு எப்படி இருந்தாலும் நடைமுறை இனஒடுக்கல் என்பதை யார்தான் மறுக்க முடியும்.


சமீபத்தில் அரசாங்கம் புள்ளிவிபரங்கள் சிலவற்றைக் காட்டித் தமிழர்கள் மிகவும் நன்மை பெறும் ஒரு சிறுபான்மை, அவர்கள் நாட்டின் ஜனத்தொகையில் 12 வீதத்தினர் (மலையகத் தமிழர்களைத் தவிர்த்து ) ஆயினும் பல முக்கிய துறைகளில் அதையும் விட அதிகமான வீதத்தினராய் இருக்கின்றனர் என அதன் பத்திரிகைகள் மற்றய சாதனங்களின் உதவியுடன் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து உள்ளன. உண்மையில் இந்தப் புள்ளி விபரங்கள் பயனற்றவை. புள்ளி விபரங்கள் கொடுப்பதாயின் அரசாங்கம் முழுமையான விபரங்களைத் தரவேண்டும். அத்துடன் கடந்த 35 வருடகாலப் புள்ளிவிபரங்களைத் தரவேண்டும். அப்படித்தான் தந்தாலும் வெறும் புள்ளிவிபரங்களால் சமூக அரசியல் போக்குகளை விளக்கி விட முடியாது. எந்தப் புள்ளிவிபரத்தாலும் இனஒடுக்குமுறையை மறைக்க முடியாது. இந்தப் புள்ளிவிபரங்கள் சொல்லும் உண்மை இதுதான். தமிழர்கள் பல ஆண்டுகளாத் தகைமை பெற்றிருந்தாலும் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அதேநேரத்தில் சிங்கள மக்களும் பொருளாதார வாய்ப்புக்கள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்க ஆதரவாளர்கள் செய்ய முயற்சிப்பது என்னவெனில் சிங்களவர்களுக்குப் போதியளவு சந்தர்ப்பங்கள் கிடையாமைக்கு தமிழர்களே காரணம் எனக் காட்டுவது. இது அரசாங்கம் தன் கையாலாகாதனத்தை மறைக்க கண்டு பிடிக்கும் ஒரு போலி விளக்கமாகும். கடந்த 35 வருடங்களாகச் சுதந்திர இலங்கையை சிங்கள பௌத்த ஆளும் கட்சிகளே நிர்வகித்து வந்துள்ளன.

இவற்றால் நாட்டின் குறைவிருத்திப் பொருளாதாரத்தை மாற்றியமைத்து சகல மக்களுக்கும் சம சந்தர்ப்பத்தை வழங்கும் ஒரு அமைப்பினை ஏற்படுத்த முடியவில்லை. தமது தோல்விகளை ஏற்றுக் கொள்ள விரும்பாத இவர்கள் இனவாத விளக்கங்களைத் தேடுவது இயற்கையே.

பொதுவாக ஒவ்வொரு அரசாங்கமும் தனக்கு முன்பிருந்த அரசாங்கமே நாட்டின் அபிவிருத்தியின்மைக்குக் காரணம் என்று கூறிவந்துள்ளது. மொத்தத்தில் முழு 35 வருடங்களின் தோல்விகளுக்கும் எல்லா அரசாங்கங்களுமே காரணம் என்பது இதனால் தவிர்க்க முடியாத தீர்ப்பு. இந்தப் பொருளாதார ரீதியான தோல்வியின் தொடர்ச்சியின் மற்றப் பக்கம்தான் இனவாதத்தின் வளர்ச்சி. இவை இரண்டுக்குமிடையே இருதலைச் சார்பான தொடர்புண்டு. இனவாதம் பாராளுமன்ற அரசியலினால் அதன் அமைப்பினால் ஊக்குவிக்கப்படுகிறது. இந்த அரசியலின் குட்டி முதலாளி வர்க்கத்தன்மை ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. இங்கு அழுத்திக் கூறவேண்டியது என்னவெனில் பொருளாதாரக் காரணிகளுக்கும் இனவாதத்திற்கும் இடையிலான உறவு ஒற்றை வழி உறவல்ல. பொருளாதாரம் இனவாத அரசியலை நிர்ணயிக்கும் அடிப்படையாக ஆரம்பத்தில் இருக்கிறது. ஆனால் இனவாதம் உருப்பெற்றதும் அது பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் உறவையும் பெற்றுக் கொள்கிறது. இதனால் தான் பொருளாதார மாற்றம் என்பது இப்போதிருக்கும் பொருளாதாரம் இனவாதம் என்ற உறவின் அடிப்படையை மாற்றும் ஒன்றாக இருக்க வேண்டும் எனப் புரட்சிவாதிகள் கூறுவர்.

இனவாதத்தின் ஸ்தாபன ரீதியான தாக்கம் இலங்கையின் குறைவிருத்திப் பொருளாதாரத்தைப் பாதிப்பதை பின்வரும் வரைபடம் மூலம் இலகுவாகச் சுருக்கிக் காட்ட முடியும்.

**வரைபடம் 2**




இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அம்சங்களும் ஒன்றோடு ஒன்று பன்முகப்பட்ட தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. இவை எல்லாவற்றின் தாக்க எதிர்த்தாக்கங்களின் மொத்த விளைவுகள் சமூகத்தின் பொருளாதார, அரசியல், கலாச்சார மட்டங்களில் வெளிப்படுகின்றன. இனவாதம் போக வேண்டுமாயின், பொருளாதார சுபீட்சம் வேண்டுமாயின், இனவிடுதலை வேண்டுமாயின் இந்த முழு உறவுகளும் புதிய உறவுகளால் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் இன ஒடுக்குமுறையின் பலாத்காரத்திலும் அநீதியிலும் இந்த முழு அமைப்பின் பலாத்காரமும் அநீதியும் மிகவும் பயங்கரமாக வெளிப்படுகின்றன. இதுவே தமிழ் மக்களின் எதிர்ப்புக்களுக்கும் காரணம். அதேநேரத்தில் ஒரு இனத்தை ஒடுக்கும் பிறிதோர் இனமும் தன் சுதந்திரத்தை இழந்து விடுகிறது. தமிழ் மக்களைக் கொடுமையான முறையில் அடக்கும் ஒரு அரசினால் சிங்கள மக்களையும் அடக்காமல் இருக்க முடியாது. தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் ஒரு அரசினால் இறுதியில் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த முடியாது. இன்று ஒடுக்குமுறைக்கு ஆளாகிப் போராடும் தமிழர்கள் நாளை போராடும்

நிர்ப்பந்தத்திற்குள்ளாகும் சிங்களவர்களின் உடனடி நண்பர்கள் என்பதைச் சிங்கள இனவாதம் திரைபோட்டு மறைத்துள்ளது. இதிலிருந்து சிங்கள மக்களை விடுவிப்பது சிங்களப் புரட்சிவாதிகளின் தலையாய கடமை.

அரசியல் நேர்மையும், புரட்சிகர சிந்தனையும் கொண்ட சகல சிங்களவர்களும் தமிழ் மக்களின் மத்தியில் உருவாகிவரும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிக்காமல் இருக்க முடியாது. வரலாற்றுச் சூழ்நிலைகளால் தமிழ் மக்களிடையே ஜனநாயக உரிமைப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பினையும்,முற்போக்குச்சிந்தனை களையும் தொடர்ச்சியாக உள்வாரிப்படுத்தி வருகிறது. இன்றைய அரசின் நடைமுறை, அதன் சர்வதேச உறவுகள் தமிழர்களின் போராட்டத்தை மேலும் மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை கொண்டதாக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிங்கள முற்போக்காளர்கள் இதன் ஆகர்ஷணத்தால் பெருந்தேசிய இனவாதத்தை எதிர்த்துப் போராட மேலும் சக்தியைப் பெறுவார்கள். ஒவ்வொரு சிங்கள சகோதரனின் ஜனநாயக உணர்வினை, மனிதத்துவத்தைப் பரீட்சிக்கும் உரைகல்லாகத் தமிழர் உரிமைப் போராட்டம் அமைந்துள்ளது. சிங்கள மக்கள் பெருந்தொகையில் இந்தப் பரீட்சையில் தேர்வு பெறும் காலம் அவர்களினதும் தமிழ் மக்களினதும் விடுதலையின் வருகையைப் பறைசாற்றும்.

# பின்னுரை

## 1.

இரண்டு விடயங்களை மேலும் அழுத்திக்கூறும் நோக்குடன் இந்தப் பின்னுரையை இணைக்க முடிவு செய்துள்ளேன். ஒன்று சிங்களப் பெளத்தமதம் பற்றியது. மற்றது 1983 ன் இன ஒதுக்கல் பலாத்காரத்துக்கும் இப்போதைய அரசு 1977லிருந்து கடைப்பிடித்து வரும் ‘புதிய ‘ பொருளாதாரக் கொள்கைக்குமிடையே உள்ள உறவு பற்றியது.

சில லிபரல் புத்திஜீவிகள் 1983 நிகழ்வுகள் இலங்கையில் புத்தமதம் தோல்வியடைந்துவிட்ட தென்பதையே குறிக்கிறது என அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். இந்தத் தீர்வு காலம் தாழ்த்தியது என்று கூறுவதையும் விட வரலாற்றுப் பார்வையற்றது என்று கூறுவதே பொருத்தமானது. இத்தகைய கருத்துக்களை முன்பும் பல தடவைகள் கேட்டிருக்கிறோம். இலங்கையில் புத்தமதம் தோல்வி கண்டது ஒன்றும் விதிவிலக்கான காரியம அல்ல. அதன் தூய போதனைகளின் அடிப்படையில் மட்டும் பார்க்கும் போது எந்த ஒரு மதமும் உலகின் எந்த நாட்டிலும வெற்றி பெற்றதாகக் கூறமுடியாது. ஆனால் இதுவல்ல இன்றைய இலங்கையைப் பார்க்க வேண்டிய முறை. இலங்கையின்

வரலாற்றில் புத்தமதம் என்னும் கருத்தமைவும், ஸ்தாபனமும் எத்தகைய சமூகக் கடமைகளை ஆற்றி வந்திருக்கின்றன என்ற கேள்விதான் முக்கியமானது. இந்த அடிப்படையிலேயே சிங்கள பௌத்தம் எனும் இலங்கைக்கேயுரிய கருத்தமைவின் பரிணாமமம், ஆதிக்கம் பற்றி இங்கு நோக்கப்பட்டுள்ளது.

புத்தபகவானின் ஐந்து போதனைகளையும் பற்றிய விவாதம் இங்கு அர்த்தமற்றது. இங்கு பிரச்சனைக்குரியது, இந்தப் போதனைகளை உள்ளடக்கிய ஒரு வரலாற்றுத் தொடர்பற்ற கருத்துருவம் அல்ல. இதுதான் புத்த மதம் என்றால் அதனுடன் வாதாடி நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. இங்கு நாம் சவாலுக்கழைப்பது சிங்கள பௌத்தம் என்ற கருத்தமைவாகும். காலனித்துவகால சமூக பொருளாதாரத் தோற்றங்களை மட்டுமே உள்ளடங்கங்களைக் கவனியாது- அடிப்படையாகக் கொண்டு சிங்கள குட்டி முதலாளி வர்க்கத்தின் புத்திஜீவிகள் வர்க்க உறவுகளைத் திரித்து உருவாக்கிய ஒரு சமூக விளக்கத்தின் முக்கிய உள்ளடக்கமாய், அதன் நியாயப்பாடாய் விளங்கும் ஒரு கருத்தமைவாகவே சிங்கள பௌத்தவாதத்தை வரலாறு காட்டுகிறது. இன்று சிங்களவர்-தமிழர் ஐக்கியம் பற்றிப் பெரிதாகப் பேசும் லிபரல் ' கனவான்கள்' இந்த வரலாற்றுப் பரிமாணம் பற்றிய உணர்வினைக் கொண்டிருப்பவர்களாத் தெரியவில்லை. ஒவ்வொரு தடவையும் தமிழ் மக்கள் மீது இனவெறி கட்டவிழ்த்து விடப்பட்டு அதன் ஆட்டமெல்லாம் ஓய்ந்த பின் இந்த லிபரல் புத்திஜீவிகள் தம் வசதியான உறைவிடங்களிலிருந்து இன ஐக்கியமெனும் வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு வெளிவருவார்கள், பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவார்கள், அரசாங்கத் தலைவர்களிடம் தூது செல்வார்கள்.இரண்டு பக்கத்திலும் தவறுகள் உண்டென்று சொல்லி நடுநிலை நியாயம் பேசுவார்கள். சில வாரங்களில் மீண்டும் அமைதியாகிவிடுவார்கள். இவர்களின் நோக்கங்கள்

என்ன என்பதைச் சரியாகச் சொல்ல முடியாத போதும் இவர்கள் சமாதான விரும்பிகள் என்பது உண்மை. ஆனால் இவர்களால் என்ன பயன்? ஒவ்வொரு கலவரத்தின் பின்பும் இவர்களுக்குக் கிடைக்கும் பத்திரிகை வாயிலான பிரபல்யம் அடுத்துவரும் கலவரங்களைத் தடுக்கும் சக்தியை மட்டும் பெறவில்லை. தமிழர் விரோத இனவாத வன்செயல்களின் ஸ்தாபன ரீதியான தன்மை, அவற்றை ஏற்படுத்தும் தொடர்ச்சியான அரசியல் போக்கு- இவை பற்றி எதுவித அக்கறையும் காட்டாத இந்த லிபரல் புத்திஜீவிகளின் இன ஐக்கியப் பேச்சு வெறும் மாலைப் பொழுது போக்கே.

## 2.

1977க்குப் பின் இலங்கையின் பொருளாதாரம் சராசரி ஆறுவீதம் வளர்ச்சி பெற்றதென மத்தியவங்கி அறிக்கைகள் காட்டுகின்றன. இந்த வளர்ச்சி வீதம் முன்னெப்போதுமில்லாத வகையில் உயர்வாய் அமைந்துள்ளது. இத்தகைய ஓர் காலகட்டத்தில் ஏன் வரலாற்றிலேயே அதிபயங்கரமான இனவாத வன்செயல்கள் இடம்பெற வேண்டும்? அரசின் புதிய Open Economy கொள்கைக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்ற கேள்வி எழுகிறது. இதுபற்றி ஆய்வுகள் இனிமேல் தான் இடம்பெற வேண்டு. ஆனால் சில ஆரம்பநிலையான ( Preliminary) கருத்துக்களை முன்வைக்கலாம்.

1956லிருந்து உள்நாட்டுச் சிறு கைத்தொழில்கள் அரசமான்யங்கள், பாதுகாப்பு போன்றவற்றினால் பயனடைந்தன. இந்தக் காலத்திய அரச கொள்கைகளின் உதவியுடன் சிறு முதலாளிகளாக இருந்த சில சிங்களவர் பெரு உற்பத்தியில் ஈடுபடும் முதலாளிகளானார்கள் என்பது

உண்மை. வங்கிகளின் தேசியமயமாக்கலுக்கும் புதிய மக்கள் வங்கியின் தோற்றமும் - உள்நாட்டு முதலாளிகளுக்கு உதவும் சூழ்நிலைகளை ஏற்படுத்தின. அரச வங்கியின் உதவி ஆளும் கட்சிக்கு நெருங்கிய சிங்கள முதலாளிகளுக்குப் பெருமளவில் கிடைத்தது. இது சிறுமுதலாளிகள் பெரு முதலாளிகளாக வளர உதவியது. 1977ன் பொருளாதாரக் கொள்கை மானியங்களை, கட்டுப்பாடுகளை நீக்கியது. தனியார் வங்கிகளை மீண்டும் வரவழைத்தது. குறைந்த ஊதியம் பெற்றோரும், வறியவர்களும் பயனடைந்து நுகர்வு சார்ந்த மான்யங்களையும் யு.என்.பி அரசு நீக்கியது அல்லது குறைத்தது.

இந்தப் பொருளாதாரக் கொள்கை வெளிநாட்டு மூலதனத்தை வரவழைக்கும் நோக்குடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவை எல்லாவற்றின் மொத்த விளைவு பெருந்தொகையான மக்களுக்குப் பாதகமாகவே இருந்தது. அரச பாதுகாப்புக்கள் நீக்கப்பட்டதால் சிறு கைத்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதுவரை ஆளும் கட்சிகளின் உதவியுடன் இறக்குமதிக் கட்டுப்பாடுகளினால் பணம் சம்பாதிக்கும் வழிவகைகளைப் பெற்றிருந்தவர்களில் பெருந்தொகையினரான சிங்களவரால் பாதிக்கப்பட்டார்கள். தனியார் துறை வங்கிகளின் உதவியுடனும் ’ சுதந்திரப் போட்டி‘க் கூடாகவும் தமிழ், முஸ்லீம் முதலாளிகளும் வளர்ச்சி பெறக்கூடிய நிலை உருவாகியது. ஒரு வகையில் பார்த்தால் புதிய பொருளாதாரக் கொள்கை இதுவரை விசேட சலுகைகள் பெற்ற சிங்களச் சிறுமுதலாளிகளுக்கும், அசர கூட்டுத்தாபனங்களில் அரசோச்சிய சிங்களவர்களுக்கும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியது என்றே கூறவேண்டும். ஆயினும் இந்தக் கொள்கைகளால் பொதுமக்களே, பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதை விளக்க

நமது நாட்டின் பயங்கரமான பணவீக்கமும், இளைஞர்கள் மத்தியிலான வேலையின்மையுமே போதுமானது. 1977 க்குப் பின் பணவீக்கம் 35-40 வீதம் வரை வளர்ந்ததை அரசாங்க 'இரகசிய ' அறிக்கைகள் ஏற்றுக் கொண்டன. தமிழ் இளைஞர்கள் மத்தியில் வேலையின்மை வீதம் சிங்கள இளைஞர்கள் மத்தியிலிருப்பதையும் விட இரண்டு மடங்குக்கும் மேல் அதிகம் என்பதை சமீபத்திய அரசாங்க அறிக்கைகள் காட்டுகின்றன.

இதுவரையில் இயங்கி வந்த சமூக நலக் கொள்கையின் மாற்றமும், கட்டுப்பாடற்ற பொருளாதாரத்தின் வளர்ச்சிப் போக்குமே சமீபத்திய பயங்கரமான வெளிப்பாடுகளுக்குக் காரணம் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்தப் பொருளாதாரக் காரணிகள் நிச்சயம் முக்கியமானவை. ஆனால் ஏன் இவற்றினால் ஏற்படும் சமூகப்பிரச்சனைகளும், முரண்பாடுகளும் இனவெறியாக வெளிப்பட வேண்டும் என்ற கேள்வி மீண்டும் எழுகிறது. அரசின் பொருளாதாரக் கொள்கை பெருந்தொகையான சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் பாதித்திருக்கும் போது ஏன் சிங்களரின் எழுச்சி அரசாங்க எதிர்ப்பு எழுச்சியாக அமையாது தமிழர் விரோத வன்செயல்களாக அமைய வேண்டும்?

இங்குதான் இனவாதக் கருத்தமைவின் மேலாதிக்கமும், ஆளும் கட்சிக்குள்ளே இயங்கிவரும் சிங்கள பௌத்த இனவாதக் கோஷ்டியின் நடவடிக்கைகளும் முக்கியமடைகின்றன. 1977ல் யு.என்.பி அரசு, 1956-77 காலகட்டத்தின் பல பொருளாதாரக் கொள்கைகளை, கட்டுப்பாடுகளை மாற்றியது. அரச துறையின் பொருளாதார முக்கியத்துவத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது. ஆனால் ஒன்றை மட்டும் அது மாற்றவில்லை. அதுதான் சிங்கள பௌத்த வாதத்தின் 'இயற்கையான' மேலாதிக்க அந்தஸ்து.

அதற்கும் மாறாக மத்தியூ-காமினி திஸ்ஸ நாயக்க கோஷ்டி சிங்கள பௌத்தவாதத்திற்கு உரமூட்டும் செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. உண்மையில் நான் முன்பு குறிப்பிட்டது போல் இது ஒரு முரண்பாடே. ஒரு புறம் மூலதனத்தின்'சுதந்திரமான' வளர்ச்சிக்கும் குவியலுக்குமான நடவடிக்கைகள் மறுபுறம் அதைப் பாழடிக்கும் அரசியல் கருத்தமைவுக்கேற்ற பொருளாதார, சமூக நடவடிக்கைகள். இதைச் சற்று விளக்குவது அவசியம்.

1977ன் 'சுதந்திர'ப் பொருளாதாரக் கொள்கை ஒருபுறம் அமுல் நடத்தப்படும் போது மறுபுறம் இதுவரை காலமும் சிங்கள இனவாதப் பாராளுமன்ற அரசியலின் முக்கிய கருவிகளாயிருந்த அரச கூட்டுத்தாபனத் துறையையும், நில அபிவிருத்தி குடியேற்றம் போன்றவற்றையும் முறையே சிறில் மத்தியூவும் காமினி திஸ்ஸ நாயக்கவும் கையாண்டு வருகின்றனர். முன்னையவர் 1956க்குப் பின் பலம் பெற்றுவிட்ட 'மரபு' ரீதியான சிங்கள பௌத்த புத்திஜீவிகளின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தவும், தொழிலாள வர்க்க விரோத அரசியலுக்கும் இனவாத அனாச்சாரங்களுக்கும் பயன்படுத்தப்படும் கூலிக் குண்டர் பட்டாளத்தை அமைக்கவும் தனது அமைச்சின் நிறுவனங்களைப் பயன்படுத்தினார் என்பது உலகறிந்தது. பின்னையவர் சிங்களவர்களில் பெருந் தொகையானவர்களாய் விளங்கும் கிராமப்புற விவசாயிகளின் ஆதரவைப் பலப்படுத்தத் தனது அமைச்சில் காணி அபிவிருத்தி, குடியேற்ற நடவடிக்கைகளை சிங்கள பௌத்த மயப்படுத்தி நடத்தி வருவதும் உலகறிந்ததே.

1983 யூலை- ஆகஸ்ட் வன்செயல்களின் தன்மைகளையும், பின்னணியையும் ஆராய்ந்த பலரின் அபிப்பிராயப்படி ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாயினும் இவற்றிற்கான திட்டமிடல் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன.

அரசயந்திரத்தின் பலாத்காரக்கருவிகள் (இராணுவம் பொலிஸ்) மட்டுமின்றி அரச கூட்டுத்தாபனங்களின் வசதிகளும் ( குறிப்பாக அச்சுயந்திரங்கள், வாகனங்கள்) இவற்றிற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன எனக் கருதப்படுகிறது. சிங்கள பௌத்த இயக்கங்கள், 1977 க்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட 'தனிச்சிங்கள 'Finance Companies ஆளும் கட்சியின் பிரதேச ஸ்தாபனங்கள், வட்டாரக்குழுக்கள் இத்திட்டத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளன என்பதற்கும் ஆதாரம் உண்டு. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வேண்டிய பிற தேவைகளை இவை பூர்த்தி செய்தன என்றும் பேசப்படுகிறது. ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள், உயர்மட்ட நிர்வாகிகள் பலர் நீண்டகாலமாக இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த திட்டமிட்ட தாக்குதல் தமிழ் மக்களின் பொருளாதார அடிப்படையை அழிப்பதையே நோக்காக கொண்டிருந்தது.

இனவாத வன்செயல்கள் தமிழ் முதலாளிகள், செல்வந்தர்கள், நடுத்தர வர்க்க ஊதியம் பெறுவோர், சிறிய கடைக்காரர், தெருவோரத்தில் அன்றன்று பொருள் விற்று அற்ப வருமானம் பெறுவோர், அரசாங்க ஊழியர், தொழிலாளர் சகலர் மீதும் வர்க்க பேதமின்றிக் கட்டவிழ்த்து விடப்பட்டன. இனவாதம் எனும் கருத்தமைவின் கண்களுக்கு வர்க்கப்பிரிவுகள் தெரிவதில்லை. தமிழர்களை ஒரு இனமாக ஒதுக்குவதைச் சாதிப்பதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் வர்க்க வேறுபாடுகளையும் தாண்டிய ஒரு ஒருமைப்பாட்டினைப் பெருந்தேசிய இனவாதம் ஏற்படுத்தியுள்ளதை ஏற்கனவே அழுத்திக் கூறியுள்ளேன். சகல ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் 'தமிழ் ஆபத்து' 'இந்திய எதிர்ப்பு' என்ற பூச்சாண்டிகளைக் காட்டி அரசு நியாயப்படுத்தி வருகிறது.

வன்செயல்களின் விளைவாக அரசின் பொருளாதாரத் திட்டங்கள் பயங்கரமாகப் பின் நோக்கித் தள்ளப்பட்டுள்ளன. மூலதனத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சியை முக்கியப்படுத்திய ஒரு ஆளும் கட்சியே கடந்த ஆறு வருட வளர்ச்சியையும் பாழடிக்கும் விதத்தில் நடந்து கொண்டது. இது பொருளாதாரவாதக் கண்ணோட்டத்தில் சமூகத்தைப் பார்ப்போருக்குப் புரியாத புதிராகவே இருக்கும். குறைவிருத்தி நாட்டின் அரசின் மீது குட்டிபூர்சுவா அரசியலும் கருத்தமைவும் கொண்டிருக்கும் மேலாதிக்கம் அமைப்புரீதியானது. புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்த போதும் பழைய இனவாத அமைப்புக்களின் இயக்கம் பாதிக்கப்படவில்லை. அதற்கு மாறாகப் பலமேற்றப்பட்டன. இதனால்தான் 1977க்குப் பின் இனஒதுக்கல் பயங்கர வடிவத்தைப் பெறுகிறது. இந்த இன ஒதுக்கல் அரசின் வெளிப்படையான கொள்கையாய் இருந்து வருகிறது. இதுவே சமூகத்தின் வர்க்க முரண்பாடுகளைத் திரித்து அரசுக்கெதிரான போராட்டங்களைச் சிங்கள மக்கள் மத்தியில் வளரவிடாது இனவாதக் குட்டைக்குள் அவர்களைச் சிறைவைத்துள்ளது. இங்கு சுட்டிக்காட்டப் பட வேண்டியது என்னவெனில் இன்று தமிழ் மக்கள் பகுதியிலிருந்து வளர்ந்து வரும் போராட்டம் அரசுக்கெதிரானதாய், சிங்கள மக்களை எதிர்க்காத ஒன்றாய் உருவெடுத்துள்ளது. ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் எதிர்ப்பே இன்று அரசு எதிர்ப்பையும் விட மிஞ்சியுள்ளது. இது தற்காலிகமானதென்றாலும் வருந்ததக்கது. சிங்களப் புரட்சியாளர்களின் கடமை சிங்கள மக்களைத் தமிழ் மக்கள் மத்தியில் வளரந்து வரும் அரசு எதிர்ப்பு உணர்வினைப் பார்க்கவும், பின்பற்றவும் செய்தலுமாகும்.

# பிற்குறிப்பு 2017

இங்கு தமிழரின் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தென்பட்ட முற்போக்கு அறிகுறிகள் பற்றிய எனது கணிப்பீடு தவறானது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். 1983க்குப் பின்னர் நான் எழுதிய கட்டுரைகளைப் படித்தவர்கள் இதை அறிவார்கள்.

**சமுத்திரன்**

பின்நோக்கிப் பார்க்கும்போது சுதந்திரமாக இயங்கவல்ல
மாற்றுக் கொள்கையுடைய ஒரு இயக்கம் வளரக்கூடிய இடைவெளி
1983க்குப்பின் துரிதமாகச் சுருங்கி மறைந்தது
என்பது நன்கு தெரிகிறது.

தமிழரின் போராட்டம் தடுக்க முடியாதபடி
ஒரு அழிவுப்பாதையில் நகர்ந்த வண்ணமிருந்தது.
இடைக்கிடை இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள்
தற்காலிக இடைவேளைகளாகவே இருந்தன.

போராட்டமோ தொடர்ச்சியாக சர்வதேசரீதியிலும்
நாட்டிற்குள்ளேயும் தன்னைத் தனிமைப் படுத்தியவாறு
அதே அழிவுப் பாதையில் பயணித்தது.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கை அரசும் நாட்டின்
தேசிய இனப்பிரச்சனையும் பல தன்மைரீதியான
மாற்றங்களைக் கண்டுள்ளன.

தேசிய இனப்பிரச்சனையின் இன்றைய வடிவமும்
உள்ளடக்கங்களும் என்ன? ஒன்றுபட்ட இலங்கையைக்
கட்டி எழுப்பும் வகையிலான
அதன் ஜனநாயகரீதியான தீர்வு என்ன?
எனும் கேள்விகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.
இந்த நோக்கில் இன்றைய நிலைமைகளுக்கேற்ப
தேசிய இனப்பிரச்சனை மீள்சட்டகப்படுத்தப் படவேண்டும்
என்று வாதிட்டு வந்துள்ளேன்.

சமுத்திரன்

ミクコ
MIKUKO